# வைகறை வெளிச்சம்

விலை ரூ.20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 12 Issue - 05

மே 2019 - ஷஅபான் - ரமழான் 1440




## இலங்கை குண்டு வெடிப்பு

## யாரால்? யாரால்??



## சீனாவில் சித்ரவதைக்குள்ளாக்கப்படும் முஸ்லிம்கள்!



## 25 ஆண்டுகளுக்குப் பின் விடுதலை

## 39 ஆம் ஆண்டில் தா:.வா

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்

## திருச்செந்தூர் முருகன் கோவிலும்! காயல் நகரமும்!!

بسم الله الرحمن الرحيم

யார் மேலானவர்? பயபக்தியுடன் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி ஒரு கட்டடத்தின் அடிப்படையை அமைத்தவரா? அல்லது (தானே சரிந்துவிடக்கூடிய) பூமியை ஒட்டி அடிப்படையிட்டு (அந்த அடிப்படையில்) கட்டடத்தை - அதுவும் சரிந்து பொடிப்பொடியாக நொறுங்கி அவருடன் நரக நெருப்பில் விழுந்து விடும் (கட்டடத்தை அமைத்தவரா?) அல்லாஹ் அநியாயக்கார மக்களை நேர் வழியில் நடத்த மாட்டான்.(9:109)


04 இலங்கை குண்டு வெடிப்பு யாரால்? யாரால்?? (கவர் ஸ்டோரி)

11 சீனாவில் முஸ்லிம்களுக்கெதிராக நிகழ்த்தப்படும் இனப்படுகொலை

17 25 ஆண்டுகளுக்குப் பின் தீவிரவாத வழக்கிலிருந்து விடுதலை

20 எது முதலில்?

24 ஏப்ரல் மாதம் டாக்டர் அம்பேத்கர் மாதம்

26 சிலுவைப் போர் 2.0

30 திருச்செந்தூர் முருகர் கோவிலும் காயல் நகரமும்

36 இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?

40 லின்ச்சிங் கோப்புகள்

48 39 ஆம் ஆண்டில் தாஃவா



# வைகறை வெளிச்சம்

மே 2019 - ஷஅபான் - ரமழான் 1440

ஆசிரியர்

மு.குலாம் முஹம்மது,M.A., Journalism & Communication

துணை ஆசிரியர்

கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham

தனி இதழ்: ரூ.20.

ஆண்டுச் சந்தா

உள் நாடு: ரூ.240.

வெளி நாடு: ரூ.3000.

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

VAIGARAI VELICHAM

52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.

+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in



# இலங்கை குண்டுவெடிப்பு

## யாரால்? யாரால்??

இலங்கையில் எட்டு இடத்தில் நடந்த குண்டுவெடிப்பு தெற்காசிய நாடுகளில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த குண்டுவெடிப்பில் எப்போதும் போல முஸ்லிம்கள் குற்றவாளிகளாக்கப்பட்டு ஊடக பிரச்சாரத்தின் மூலம் முஸ்லிம்களை ஒதுக்கும் செயல் பெரிய அளவில் நடந்திருக்கிறது.

குண்டு வெடித்த நாளிலிருந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தகவல். எதுவுமே நிரந்தரம் இல்லை. முன்னால் சொல்லப் பட்டது தற்போது இல்லை என்றும், இல்லை அதுதான் என்றும் இலங்கை அமைச்சரவைக்குள்ளேயே பெரும் குழப்பம். இதனிடையில் ஊடகம் நிகழ்த்தும் அரசியல் கீழ்த்தரமானது.

இலங்கையில் வெடிகுண்டு சத்தம் கேட்டதுமே அடுத்த நொடி இந்திய ஊடகங்கள் தாடி, தொப்பியுடன் ஒரு கதை எழுதி "இஸ்லாமிய தீவிரவாத தாக்குதல்" என்று தலைப்பிட்டு வெளிபரப்ப தொடங்கி விட்டன. இலங்கை அரசு அறிவிப்பதற்கு ஒருநாள் முன்னரே இஸ்லாமிய பயங்கரவாதிகள் தாக்குதல் என்று பரப்ப தொடங்கி விட்டன. இதற்கு இலங்கை பத்திரிக்கையாளர்களும் கடுமையான எதிர்ப்புகளை பதிவு செய்தனர். இறுதியில் இந்திய ஊடகங்கள் விருப்பபட்டதை போலவே ஐ.எஸ்.ஐ.எஸ் இந்த குண்டுவெடிப்புக்கு பொறுப்பேற்றது.

குண்டு வெடித்து சில நாட்களுக்குள்ளேயே புதுப்புது செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. இந்த குண்டுவெடிப்பை பற்றிய முழு ஆய்வுக்கு கண்டிப்பாக சில காலம் பொறுத்திருத்தல் அவசியம். இதில் எந்த நாடுகளின் தலையீடு இருக்கிறது என்பதெல்லாம் ஒவ்வொன்றாக முடிச்சுகள் அவிழும். இதில் இஸ்ரேல்



தவறாமல் பங்குபெறும். அதற்கான செய்திகளும் வர தொடங்கி விட்டன. இந்த கட்டுரையில் நாம் ஆராயப் போவதெல்லாம் தொடக்கத்தில் ஊடகங்களில் இதுவரை வந்திருக்கிற தகவல்களும், முஸ்லிம்கள் இந்த குண்டுவெடிப்பில் ஈடுபட்டிருக்க ஏதேனும் காரணம் இருக்க அவசியமிருக்கிறதா?.என்பதை மட்டும் தாம்.

### ஊடகங்களுக்கு ஏன் இந்த வெறுப்பு?

இலங்கையில் குண்டு வெடிப்பு நிகழ்ந்து வெடிச்சத்தம் முடிவதற்குள் இங்குள்ள தமிழ் ஊடகங்களும் இந்திய தேசிய ஊடகங்களும் முஸ்லிம்களை குற்றவாளிகளாக்கின. பத்து நாட்களுக்கு முன்பே உளவுத்துறை இப்படியொரு தாக்குதல் சர்ச்களில் நடத்த திட்டமிடப் பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறது என்று செய்தி வெளியானது. ஆனால் இந்த செய்தியை தவறு என்று அமைச்சரவை சொன்னதாக அல்ஜெசீராவின் பத்திரிக்கையாளர் பதிவிட்டார்.

இறுதியில் அந்த உளவுத்துறை தகவலில் சொல்லப்பட்டவாறே “தேசிய தௌகீத் ஜமாத்” தான் இந்த குண்டுவெடிப்பை நிகழ்த்தியதாக பின்னர் இலங்கை அரசு அறிவித்தது. இரண்டு நாட்களாகியும் எந்த தீவிரவாத அமைப்பும் இந்த குண்டு வெடிப்புக்கு பொறுப்பேற்காத நிலையில், ஐ.எஸ்.ஐ.எஸ் எனும் எந்த நாசகார தாக்குதலையும் பொறுப்பெடுக்கும் ஒரு அமெரிக்க தயாரிப்பு நிறுவனம் ஏற்றுக்கொண்டது. இதன் பிறகு சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாதம் என்று உப தலைப்பிட்டு ஊடகங்கள் தங்கள் விஷத்தை கக்க தொடங்கின.

### குண்டுவெடிப்பில் உள்ள மர்மங்கள்

காலங்காலமாக இந்தியாவில் நடக்கும் குண்டுவெடிப்புகளின் அதே சாயல் இலங்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது குண்டு வெடிக்கும் ஒரு வாரத்திற்கு முன் ஒரு எச்சரிக்கை கடிதம் வரும். அதில் ஒரு முஸ்லிம் இயக்கத்தின் பெயர் போடப்பட்டிருக்கும். சரியாக ஒரு வாரத்தில் குண்டுவெடிப்பு நிகழும். குண்டுவெடிப்பு நிகழ்ந்த அடுத்த நொடி முஸ்லிம்கள் சிலர் கைது செய்யப் படுவார்கள். குற்றவாளிகளாக்கப்படுவார்கள். அதன் பிறகு ஒரு பத்தாண்டு ஜெயில். பத்தாண்டுக்கு பிறகு அப்பாவிகள் என்று நீதிமன்றம் விடுதலை செய்யும். இது இந்தியாவில் நடக்கும் குண்டுவெடிப்புக்கான டெம்பிளேட். இதே சாயல் தாக்குதல் தான் தற்போது இலங்கையிலும் நடத்தப்பட்டிருக்கிறது.

குண்டுவெடிப்பில் இதுவரை மட்டும் 400 க்கு மேற்பட்டவர்கள் இறந்திருக்கிறார்கள். 600க்கும் அதிகமானோர் காயமடைந்திருக்கிறார்கள். மூன்று கிறிஸ்துவ தேவாலயங்கள் மற்றும் ஸ்டார் ஹோட்டல்களில் தான் இந்த குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இந்த குண்டுவெடிப்பு எதற்கு நிகழ்த்தப் பட்டது என்று தீவிரவாத அமைப்பு சொல்வதற்கு முன்பே ஊடகங்கள் நியூசிலாந்தில் நடைபெற்ற தாக்குதலுக்கு எதிராக இருக்கும் என்று பிரச்சாரப்படுத்த தொடங்கியது. ஊடகத்தின் பாயிண்டை கப்பென்று பிடித்த தீவிரவாத அமைப்பு ஆமாம், அதுக்கு தான் குண்டுவெடிப்பு என அப்பாவியாக இரண்டு நாள் யோசித்து தலையாட்டியிருக்கிறது.

இந்த குண்டுவெடிப்பில் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகள் எல்லாம் சாதரமாண, அடிக்கடி டிவியில் காட்டப்படும் டிபன் பாக்ஸ் வெடி குண்டுகள் போலானது அல்ல. மாலேகான், சம்ஜௌதா போன்ற குண்டு வெடிப்புகளில் இந்துத்துவ தீவிரவாதிகள் பயன்படுத்தியது போன்றவை. இவையெல்லாம் பெரிய மிலிட்டரி அமைப்புகளை தவிர வேறு யாரிடமும்


இருப்பதற்கான வாய்ப்பு இல்லை. இந்துத்துவ தீவிரவாதிகளுக்கு இந்திய ராணுவ உதவி இருந்தது போல இந்த தீவிரவாதிகளுக்கு யார் உதவி இருந்திருக்கும்?

2009 ஈழப்போர் முடிவுற்ற பிறகு இலங்கையில் பாதுகாப்பு மிகப்பெரிய அளவில் போடப் பட்டிருக்கிறது. அதிலும் குண்டு வெடிப்பு நடந்திருக்கும் கொழும்பு உச்சபட்ச பாதுகாப்பு இருக்கும் இடம். துறைமுகத்திற்கு அருகில் குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்டிருக்கிறது. அப்படியெனில் அவ்வளவு பாதுகாப்பு இருக்கும் இடத்தில் குண்டுவெடிப்பு அரசு உதவி இல்லாமல் நடக்க முடியுமா? இல்லை அந்தளவுக்கு ஏமாற்றுவதற்கு அந்த தீவிரவாதிகள் பயிற்சி பெற்றிருந்தனரா?.

**இலங்கை அரசின் முரண்பாடுகள்**

இலங்கை ஆளும் அரசின் அமைச்சரவையில் இருக்கும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அவர் குண்டுவெடிப்பதற்கு முதல் நாள் தன் தந்தை போன் செய்து இப்படி குண்டிவெடிப்பு நடக்க வாய்ப்பிருக்கிறது என்று சொன்னாராம். அவருக்கு சில உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்ததாக கூறியுள்ளார். முதல்நாள் இரவே அமைச்சரவையில் உள்ள ஒருவருக்கு எச்சரிக்கை கிடைத்தும் பாதுகாப்பில் எவ்வித முன்னேற்பாடும் காட்டாமல் குண்டு வெடிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் இலங்கை அரசு அதிகாரத்தில் உள்ளவர்கள். எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருந்தால் அன்று நடக்க இருந்த ஈஸ்டர் திருவிழாவை நிறுத்தியிருப்போம் என்று தேவாலயங்கள் அறிவிக்கின்றன. ஆனால் அது செய்யப்படவில்லை.

உளவுத்துறை கொடுத்த எச்சரிக்கை அதிபரின் கையில் கிடைக்கவில்லை என ஊடகங்களிடம் சொல்கிறார். அமைச்சரவையில் உள்ள ஒருவருக்கு கிடைத்த தகவல் கூட அதிபரின் கையில் கிடைக்காமல் இருக்கும் அளவுக்கு இலங்கை அரசியல் இருக்கிறதென்றால் இலங்கையில் உள்ளூர





எவ்வளவு பிரச்சனைகள் நிகழ்ந்து கொண்டிருக்கும்?..

குண்டுவெடிப்பிற்கு பிறகு எடுக்கப்படும் நடவடிக்கைகளுமே பெரும் சந்தேகத்தை கிளப்பக் கூடியதாக தான் இருக்கிறது. குண்டுவெடிப்பில் சந்தேகப்படும் நபர் என இலங்கை அரசு ஒரு தேடுதல் பட்டியலை ஊடகங்களுக்கு வெளியிடுகிறது. அதில் இடம்பெற்றுள்ள ஒருவர் புகழ்பெற்ற அமெரிக்காவில் உள்ள இலங்கை சமூக ஆர்வலர். இது இயல்பாக இணையங்களில் தேடும் போதே கிடைக்கிறது. இவரது பெயரையும் தேடுதல் பட்டியலில் இணைத்திருந்தது இலங்கை அரசு. பின்னர் எதிர்ப்பு அதிகமாக கிளம்பியதும் அவரின் படத்தை நீக்கியது. ஒரு பாரிய கொடூரமான குண்டுவெடிப்பில் புலனாய்வு செய்யக்கூடிய அதிகாரிகள் குண்டுவெடிப்பில் ஈடுபட்டவர்கள் என்று தேடும் பட்டியலில் ஒரு சமூக ஆர்வலர் தவறுதலாக சேர்க்கப்பட்டிருக்கிறார் என்ற நிலை இருக்கிறதென்றால் இலங்கை அரசின் ஒவ்வொரு அறிவிப்பையும் எதை அடிப்படையாக வைத்து நம்புவது?

நிர்வாகம் எந்தளவுக்கு மோசமாக இருக்கிறது என்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டு இலங்கை அரசு வெளியிட்ட உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை. குண்டு வெடிப்பு நிகழ்ந்து நான்கு நாட்கள் வரை கிட்டத்தட்ட 359 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர் என்றே அறிக்கை வெளியிட்டது இலங்கை அரசு.

ஆனால் 25ம் தேதி திடீரென்று கணக்கீட்டில் தவறு ஏற்பட்டு விட்டது. உயிரிழந்தோரின் எண்ணிக்கை 253தான் என அறிக்கை வெளியிடுகிறது. இந்த நிர்வாக ஓட்டையை வைத்து தான் முஸ்லிம்கள் மீது மொத்த பழியும் சுமத்தப்பட்டு அடுத்தப்படியாக முஸ்லிம் களின் உடைகளில் கை வைக்கும் விதமாக புர்காவை தடை செய்ய வேண்டும் என்று கோரிக்கை எழுப்பப் பட்டிருக்கிறது.

**முஸ்லிம்கள் இந்த குண்டுவெடிப்பை நிகழ்த்துவதற்கான அவசியம் இருக்கிறதா?.**

இலங்கை வாழ் முஸ்லிம்கள் பல கொடுமைகளை அனுபவித்து கொண்டே வந்தனர். இந்த கொடுமைகள் எல்லாம் யாரால் நிகழ்த்தப்பட்டது என்றால் ஈழப்போருக்கு முன்பு பிரபாகரனின் புலிகள் அமைப்பால் கொத்து கொத்தாக கொல்லப் பட்டனர். போருக்கு பின்னர் இலங்கை புத்த பேரினவாத சக்தியால் தொடர்ச்சியாக பலமுறை தாக்கப்பட்டுக்கொண்டே வருகின்றனர். முஸ்லிம் களுக்கு இந்த இரு குழு தான் பிரச்சனையாக இருந்ததே ஒழிய கிறிஸ்துவர்களிடம் எவ்வித பிரச்சனையும் முரண்பாடுகளும் இல்லை.

"இலங்கையைப் பொருத்தவரை, ஈழத் தமிழர் பிரச்னையேகூட தமிழர்களுக்கும் சிங்களர்களுக்கும் இடையேயான போராட்டம் மட்டுமல்ல. இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையே நடந்த போராட்டமாகவும் அதைக் காண வேண்டும். இலங்கையில் தமிழர்களின் வளர்ச்சியை பௌத்த மதத்தைச் சேர்ந்த சிங்களர்கள், இந்து மத வளர்ச்சியாகப் பார்க்க முற்பட்டனர். அதேபோல, இப்போது அதிகரித்துவரும் கிறிஸ்தவ மதமாற்றம் சிங்களர்களை, குறிப்பாக பௌத்த பிக்குகளை கவலையில் ஆழ்த்தியிருக்கிறது. அதன் விளைவாக கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல் என்பது புதிதொன்றுமல்ல. கடந்த 2015 முதல் தற்போது நடந்த தாக்குதல் வரை இதுவரை தேவாலயங்கள் மீதும், கிறிஸ்தவப் பாதிரியார்கள் மீதும், கிறிஸ்தவர்கள் மீதும் சுமார் 200 தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. 2014 ஜனவரி மாதம் இரண்டு தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப் பட்டது. கடந்த 2017-லும் அதேபோல வடமேற்கு இலங்கையில் தாக்குதல் நடத்தப்பட்டது. இதுபோன்ற தாக்குதல்களுக்கு எல்லாம் மதமாற்றம்தான் முக்கியமான காரணம். மதமாற்றத்தால் தங்களது சொந்த பூமியில் தாங்கள் சிறுபான்மையினராகி விடுவோமோ என்கிற அச்சம்தான் சிங்கள-பௌத்தர்களை இதுபோன்ற தாக்குதல்களில் ஈடுபடுத்துகிறது என்று பல்வேறு ஆய்வுகள் ஏற்கெனவே தெரிவித்திருக்கின்றன." (தினமணி 23/04/19)

எந்த வகையில் பார்த்தாலும் முஸ்லிம்களுக்கு இலங்கை கிறிஸ்துவர்களோடு எந்த பிரச்சனையு மில்லை. எங்கோ நடந்த நியூசிலாந்து தாக்குதலுக்கு இங்கு தெற்காசியாவில் பழி வாங்கும் மடமைத் தனத்தை இவ்வளவு ஆயுதம் நிறைந்த ஒரு குழு எப்போதும் செய்யாது. இலங்கையில் பெருகி வந்த அடிப்படைவாதம், குறிப்பாக சஹ்ரான் எனும் ஒருவன் வீடியோக்களில் தோன்றி கொல்லுங்கள். பௌத்த தீவிரவாதிகளே உங்களை கொல்லுவோம், தற்கொலை தாக்குதல் நடத்துவோம் என்று பேசியிருக்கிறான். இது தான் ஆதாரமாக பெரும்பாலும் பரப்பப்படுகிறது. நமது வைகறையில் இது போன்ற ஆட்களின் பின்னால் இருப்பது உளவுத்துறை தான் என்பதை பலமுறை வெளிப்படுத்தியிருக்கிறோம்.

தமிழகத்திலும் ISIS பிரச்சாரம் செய்யப்படுவதாக சொல்லப்பட்டது. இறுதியில் விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்டவர்கள் இந்த பிரச்சாரத்தை மேற்கொண்டது தெரியவந்தது. இவர்கள் ஒளிந்து கொண்டெல்லாம் இந்த பிரச்சாரத்தை செய்வதில்லை வெளிப்படையாகவே செய்கிறார்கள். உளவுத்துறைக்கு இது தெரிந்தும் அனுமதிக்கிறது. அதனால் தான் சொன்னோம் இது உளவுத்துறையின் திட்டமிட்ட சதி என்று. அதைப்போலவே சஹ்ரானின் பேச்சுகளை முஸ்லிம் அமைப்புகள் கண்டித்து இலங்கையில் போராட்டம் செய்து சஹ்ரானை கைது செய்யவும் வலியுறுத்திருக்கின்றன. ஆனால் இலங்கை காவல்துறை இதை சட்டை கூட செய்யாமல் அவனை பேச விட்டு வளர்த்து விட்டது. உளவுத்துறையே அவனை பேசவைத்து வேடிக்கை பார்த்தது என்று தான் சொல்ல வேண்டும்.





நமக்கிருக்கும் சந்தேகம் எல்லாம், குண்டு வைப்பதற்கான முகமாக சஹ்ரான் தேவைப்பட அவனை உபயோகப்படுத்திக்கொண்டனவா அதிகார சக்திகள்?

இப்படி அடுக்கடுக்காக நிறைய கேள்விகளும் சந்தேகங்களும் இருக்கிறது. ஆனால் அதற்குள்ளாகவே முழுமையான விசாரணைக்கு முன்பே முஸ்லிம்களை குற்றவாளியாக சித்தரிப்பதை கவனித்தால் இதற்காகத்தான் திட்டமிட்டு குண்டுவெடிப்புகள் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் தோன்றுகிறது.

## எளிமையாக புரிந்து கொள்வோம்

முஸ்லிம்கள் எதற்காக குண்டு வைத்தார்கள்? என்றால் என்ன சொல்வார்கள்

பதில்: முஸ்லிம்கள் மீது நிகழ்த்தப்படும் அநீதிக்காகவென்று சொல்லப்படுகிறது.

தற்போது நடப்பது என்ன: முஸ்லிம்கள் முன்பை விட கொடுமைகளுக்கு ஆட்படுத்தப்படுகின்றனர். முஸ்லிம்களின் இருப்பு சந்தேகத்திற் குள்ளாக்கப் படுகிறது. முஸ்லிம்களின் நம்பிக்கை கேள்வி குறியாக்கப்படுகிறது. இதுவரை இருந்த நிலையை விட பலமடங்கு மோசமாயிருக்கிறது.

இந்த நிலையை விரும்பவர்கள் யார்? முஸ்லிம்களா? முஸ்லிம் அமைப்புகளா? இல்லவே இல்லை முஸ்லிம்களை அழிக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள் தாம் முஸ்லிம்களுக்கு இந்நிலையை ஏற்படுத்த விரும்புவர். அவர்களுக்கு தேவையெல்லாம் இஸ்லாமிய பெயரில் ஒரு மனிதன்.இதிலும் முஸ்லிம்கள் அப்பாவிகள் தாம். கேட்பாரற்றவர்கள். குண்டுவெடிப்பிற்கு பிறகு அதிகளவு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரத்தம் வழங்கியவர்கள் முஸ்லிம்கள். ஆனால் தொடர்ச்சியாக முஸ்லிம்களுக்கெதிராக பரப்பப்பட்ட பிரச்சாரத்தின் விளைவு முஸ்லிம்களின் இந்த செயல்கள் வெளியே வருவதில்லை.

## முஸ்லிம்களின் நம்பிக்கைகளை குறி வைக்கும் அரசுகள்

குண்டுவெடிப்பை தொடர்ந்து முஸ்லிம்கள் தங்கள் நம்பிக்கையை அதிகப்படுத்திக்கொண்டு வணக்க வழிபாடுகளில் தங்களை ஈர்த்துக் கொண்டதால் தான் இன்று குண்டுவெடிக்கும் நிலை உருவாவதாக ஊடகங்களில் பிரச்சாரம் தொடங்கியது. இதற்கு முஸ்லிம் பெயர் கொண்ட எழுத்தாளர்கள் பலர் உதவினார்கள். அதன் ஒரு பகுதியாக தி இந்து இரண்டு கட்டுரைகளை பிரசுரம் செய்தது. அதில் முஸ்லிம்களை மிக மோசமாக சித்தரித்தது “முஸ்லிம்கள் நாம் சுயபரிசீலிப்போம்” என்று பாத்திமா மாஜிதா அவர்கள் எழுதிய கட்டுரை.

இந்த கட்டுரையின் சாராம்சம், முஸ்லிம் பெண்கள் புர்கா அணிவது, நிகாப் அணிவது போன்ற கலாச்சாரங்களை தங்களுக்குள் அதிகமாக்கி கொண்டதால் தான் இதுபோன்ற குண்டு வெடிப்புகள் நிகழ்கிறது என்பது தான். இதற்கான தகுந்த பதிலை பல முஸ்லிம் பெண்களே மறுப்பாக கொடுத்திருக்கிறார்கள்.

- அபூ சித்திக்.

# "முஸ்லிம்கள் நாம் சுயபரிசீலிப்போம்"

## என்ற கட்டுரைக்கு பெண்கள் எழுதிய மறுப்பு.

**எழுத்தாளர் - பர்வீன் பின்த் மீரன், சென்னை**

மனிதத்தன்மையை ஒவ்வொருவரும் சுய பரிசீலனை செய்வோம். இக்கட்டான நேரத்தில் இஸ்லாத்தின் பெயரை ,முஸ்லிம்களை வழி கெடுக்க நுழைக்கப்படும் விஷமத்தனமான கட்டுரை ஒன்றை 'தி ஹிந்து" வெளியிட்டியிருக்கிறது.

அதன் தலைப்பு 'முஸ்லிம்கள் நாம் சுய பரிசீலிப்போம்.' அதன் சாராம்சம், இருபது முப்பது வருடங்களாக பிரச்சாரம் மூலம் ஒழிக்க பட்ட அனாச்சாரங்களை விட்டதன் மூலம் மனித நேயம் அற்று போனது .. ஹிஜாப் , நிகாப் என்கிற அந்நிய கலாச்சாரம் மூலம் அந்நியப்பட்டு போனோம் இத்யாதி... இத்யாதி...

சரி வாருங்கள், மேலோட்டமாக நல்ல கருத்து போல விளங்கும் அந்த கட்டுரைக்கு சில கேள்விகள்..

மத நல்லிணக்கம் என்கிற வார்த்தைக்கு அர்த்தம் என்ன...?

நான் நம்புகிற கடவுளை நான் வணங்குவேன் அதே போல சுற்றி உள்ளவர்கள் நம்பிக்கை எதுவோ அது போல அவர்கள் வணக்க வழிபாடு இருக்கும். இதுக்கு பரஸ்பர இடைஞ்சல் செய்யாம இருக்கிறதே இப்போதைக்கு பாராட்டப்பட கூடிய விஷயமாக இருக்கிறது.

அதன் படி என் நம்பிக்கை எதுவோ அதை அடுத்தவர்களுக்கு இடையூறாக இல்லாத அளவுக்கு என் மார்க்க அடிப்படையை பேணுவது எப்படி தவறாகும்...?

ஹிஜாப், நிகாப் இதெல்லாம் அந்நிய நாட்டு கலாச்சாரம் இல்லை. இஸ்லாத்தோட வரையறைக்குள்ள வர நாங்கள் பேணக் கூடிய ஒரு விஷயம்.

நான் ஹிஜாபும் நிகாபும் போடுவது என் தனிப்பட்ட விருப்பம் சார்ந்த விஷயம். மாடர்ன் ஆடை போடுகிற பெண்களுக்குள்ள உரிமை போலவே, அது என் தனிமனித சுதந்திரம்.

எப்போது தெரியுமா அத்துமீறல் ஆகும்? நீங்களும் போடுங்க என்று பிற சமுதாய பெண்களுக்கும் அடாவடியாக போட்டுவிட்டால் மாத்திரமே...

இதற்கும் உதாரணம் சொல்ல முடியும்..

உதாரணத்திற்கு பசு குறிப்பிட்டவாளுக்கு புனிதம் என்று எங்கள் இஸ்லாமிய மார்க்கத்தில் அனுமதி உள்ள ஒரு உணவை சாப்பிடக் கூடாது என்று அத்துமீறி தடை செய்கிறார்களே,பொய்யாக பழி சுமத்தி அநியாயமாக அப்பாவிகளை பசுவின் பெயரால் கொலை செய்கிறார்களே பசு குண்டர்கள் அதுதான் அத்துமீறல், அடாவடி...

முஸ்லிம் என்று காட்டக் கூடிய அத்தனை தனித்துவ அடையாளமும் ஆபத்து , அதையெல்லாம் விட்டுட்டு நம்மைச் சுற்றி உள்ள ஏனைய சமூகங்களோட கலாச்சாரத்தை பின்பற்றுங்கள். அது தான் உயிர் பிழைக்க நல்லது என்று வாழை பழத்துல ஊசி ஏற்றுகிற வேலையை பாத்திருக்கு 'தி ஹிந்து'வில் வெளிவந்த கட்டுரை.

இஸ்லாமிய மார்க்கம் சொல்லாத ஒன்றை, கண்டிக்கிற ஒன்றை , ஒரு அறிவிலி தன்னுடைய அறியாமையால் செய்தால், அவனையும் அவன் செயலையும் எப்படி இஸ்லாமிய மார்கத்துடன் இணைத்து முஸ்லிம்களை சுய பரிசீலனை செய்ய சொல்ல முடியும்?.. என்று நமக்கு தோணுறது கூட அந்த கட்டுரையை எழுதிய சகோதரிக்கு தெரியவில்லை போலும்.

**எழுத்தாளர் - பர்வீன் பானு அனஸ், சென்னை**

பல முற்போக்குவாதிகள் என அறியப்படுபவர்கள் தக்க சமயத்தில் குழம்பிய குட்டையில் மீன் பிடித்துக் கொண்டுள்ளனர்.

ஒட்டு மொத்த சமூகமே தவறிழைத்து விட்டதைப் போன்ற மாயையை உண்டுபண்ணி குற்ற உணர்விலும் பயத்திலும் இந்தச் சமூகத்தை உளழ வைத்து அடிப்படை உரிமைகளைப் பறிக்கவே குறுக்கும் மறுக்குமாக ஓடுகின்றனர்.

சமீபத்தில் நடந்த நியூசிலாந்து தாக்குதல்கள் குறிப்பிட்ட சமூகத்தாரை குற்றவாளியாக நிறுத்தி அவர்களை சுயபரிசோதனை செய்து கொள்ள அறிவுரை வழங்கவில்லை. மாறாக பாதிக்கப் பட்டவர்களின் குடும்பத்தார்களின் மன்னிப்பும் அன்புமே கிடைத்தது. அதற்குப் பகரமாக மசூதிகளை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து சகவாழ்வை ஸ்திரப்படுத்தினர்.

நாட்டின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளையும் எனத் தெரிந்தே தடுக்காத அரசு எதை எதிர்பார்த்து இவ்வாறு இருந்தது?

ஒரு சமூகத்தின் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் கலாச்சாரத்தையும் இயங்கியலையும் முற்றிலுமாக சிதைக்கும் வகையில் தரப்படும் கூக்குரல்கள் நிச்சயம் நல்லவற்றிற்கானவை அல்ல.

ஆடை கலாச்சாரத்தை குற்றம் சொல்லும் மேட்டிமைத்தனமும் மதரசாக்களை தீவிரவாதக் கூடங்களாக சித்தரிக்க முயலும் கயமைத்தனமும் புறந்தள்ளக் கூடிய விசயங்கள்தான். ஆனால் இவற்றை பேசுபவர்கள் யார் என அறிய வரும் பொழுது இதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டிய நிர்பந்தமும் உருவாகின்றது.

சக வாழ்வை மதிக்காத எந்த முற்போக்குச் சிந்தனையும் தீவிரவாதமே!

**எழுத்தாளர் : சாதிகா பேகம், மதுரை.**

முஸ்லிம்கள் சுயபரீசலனை செய்து கொள்ள அவசியம் எங்கு நேர்ந்தது?.. சரி, இதே அறிவுரையை மாலேகானில் முஸ்லிம்கள் பேரில் குண்டு வைத்து கொல்லப்பட்ட போதும், சம்ஜௌதா ரயிலில் குண்டு வைத்து கொல்லப்பட்ட போதும், குஜராத்தின் கலவரத்தில் 3000 முஸ்லிம்களை கொலை செய்தவருக்கும் "இந்துக்களே நாம் சுயபரிசீலிப்போம்" என்று சொல்ல முடியுமா?.. அப்படி சொல்வதும் கூட அபத்தமானது தான்.

மதத்தை கொண்டு தீவிரவாதத்தை அணுகினால், சீனாவில் கம்யூனிஸ்ட்கள் செய்யும் முஸ்லிம்களுக் கெதிரான அடக்குமுறையை கம்யூனிஸ்ட் தீவிரவாதம் என்றும், அமெரிக்கா பல யுகங்களாக நடத்தி வரும் தீவிரவாத செயல்களை கிறிஸ்துவ தீவிரவாதம் என்றும், இப்படியே இந்து தீவிரவாதம், பௌத்த தீவிரவாதம் என உபயோகிக்க தொடங்கினால் உலகில் ஒற்றுமை என்ற ஒன்றே நிலவாது. ஒரு குறிப்பிட்ட நபரின் செயலுக்கு ஒரு பெரும் சமுதாயத்தையே குற்றவாளியாக்குவது எவ்வகையில் நியாயம்?..

புர்கா தனி மனித நம்பிக்கையை சார்ந்தது. அதை கொண்டு போய் தீவிரவாத சிந்தனையுடன் முடிச்சிடுவது எவ்வளவு அநாகரிகம்? புர்கா அணிவது தங்களுக்கு விருப்பமில்லாத ஒன்றாக இருந்தால் அதனை நீங்கள் அணியத்தேவையில்லை. ஆனால் அதற்காக புர்காவை அணிபவர்கள் தான் தீவிரவாத சிந்தனையை விதைக்கிறார்கள் என்று பழி சுமத்துவதை எப்படி ஏற்றுக்கொள்வது?. இன்று இலங்கையில் பரப்பப்படும் அதே வெறுப்பு பிரச்சாரத்தை தமிழகத்திலும் தொடங்கி வைப்பதற்காக இப்படியான கட்டுரைகள் பிரசுரிக்கப்படுகிறதா?..

முஸ்லிம்களுக்கெதிராக பின்னப்பட்டுள்ள சதி வலைகளில் இலங்கை குண்டுவெடிப்பும் ஒன்று. அதில் முஸ்லிம்கள் எப்படி மீளப்போகிறார்கள் என்று முனைப்பதற்கு முன்பாகவே புர்காவை தடை செய்ய வேண்டும். மத நம்பிக்கையை விட வேண்டும் என்று அவர்களை மேலும் அடக்குவது எத்துனை கொடுமையானது. அதைத்தான் கட்டுரை என்ற பெயரில் வெளியிட்டிருக்கிறார்கள். முஸ்லிம்கள் எதிர்ப்பார்ப்பது. ஆதரவளிக்காமல் இருந்தால் கூட பரவாயில்லை ஆனால் எங்களை மேலும் அழித்தொழிக்கும் வேலையை செய்யாமல் இருப்பதே சிறந்தது.


இறைவனின் அழகியத் திருப்பெயரால்

நியூ மலேஷியா டிராவல் சர்வீஸ்



பதிவு எண் : 2015/33/018/10098/ANSP
அரசு அங்கீகாரம் பெற்றது

உரிமை: S.B.S. பஷீர்

•பாஸ்போர்ட் ஆன்லைன்
•விமான டிக்கெட்
•விசா சர்வீஸ்
•ECNR & PCC
•எம்பஸி அட்டெஸ்டட்
•GCC மெடிக்கல் சர்வீஸ்

ECR நீக்கி ECNR மாற்றிட

கிளை அலுவலகம்:
12, கலைமகள் வீதி, MRF டயர்ஸ் பின்புறம்)
7வது குறுக்குத் தெரு,சுப்பையா நகர்,
பாஸ்போர்ட் அலுவலகம் அருகில்,
புதுச்சேரி - 605001.
செல்: 9894303789 | 9445907389

68, பெரிய கடை தெரு, பரங்கிப்பேட்டை,
கடலூர் மாவட்டம் - 608502
E mail ID: newmalaysiapno@gmail.com |Web : www.newmalaysiatravelservice.com

தொலைப்பேசி:
04144 243267
04144 243440

செல்:
7708803789
7708503789

# சீனாவில் முஸ்லிம்களுக்கெதிராக நிகழ்த்தப்படும் இனப்படுகொலை




உலகத்தில் முஸ்லிம் மக்கள் அனைத்து பகுதிகளிலும் கொடுமைகளை சந்தித்து வருபவர்களாக உள்ளனர். இதில் முஸ்லிம்கள் கொத்து கொத்தாக ஆயிரக்கணக்கில், லட்சங்களில்,கோடிகளில் கொல்லப்படுகின்றனர். இந்த பட்டியலில் சீன அரசு சீனாவில் உள்ள முஸ்லிம்களை கொடூரமான முறையில் அடக்குமுறைக்கு உட்படுத்தி ஓர் இனப்படுகொலையையே அரங்கேற்றி வருகிறது. ஆனால் இந்த கொடுமைகளை சர்வதேச நீதிமன்றங்கள் மட்டுமல்ல முஸ்லிம் நாடுகள் கூட கண்டுகொள்ளவில்லை.

சீன அரசு கிட்டத்தட்ட பத்து லட்சம் உய்கூர் முஸ்லிம்களை சித்ரவதை முகாமில் அடைத்துள்ளது. ஆனால் இந்த சித்ரவதை முகாமிற்கு சீன அரசு வைத்த பெயர் “மறுகல்வி நிலையம்.” இங்கே அடைக்கப்பட்டிருக்கும் முஸ்லிம்கள் தங்கள் மத நம்பிக்கையை விட்டு விடும் படி உளவியல் மற்றும் உடல் ரீதியான தாக்குதல்களையும் அனுபவிக்கின்றனர். முகாமில் இருக்கும் மக்கள் கண்டிப்பாக கம்யூனிஸ சித்தாத்தங்களை படிக்க வேண்டும். சீன தலைவருக்கு விசுவாசமாக நடப்பது எப்படி என்று பாடமும் நடத்தப்படுகிறது.

சீனாவில் தன்னாட்சி உரிமைகளை பெற்ற பகுதிகள் திபெத் மற்றும் ஜிங்ஜியாங் பகுதிகள். இதில் ஜிங்ஜியாங் பகுதியில் தான் தற்போது முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள் நடந்து வருகிறது. முஸ்லிம்கள் சிறுபான்மையாக இருப்பதால் சீன அரசு அவர்களை தங்களது சோதனைகளுக்கு உபயோகப்படுத்தி கொள்கின்றது. கடந்த காலங்களில் முதலாளித்துவ நாடுகளான அமெரிக்கா குவாண்டனாமா சிறையை எப்படி மூஸ்லிம்களை துன்புறுத்துவதற்கு பிரத்யேகமாக தயார் செய்ததோ அதேப்போல் ஒரு சிறையை சீனா தயார் செய்திருக்கிறது. ஆனால் சீனாவில் உள்ள இந்த சிறை முஸ்லிம்களின் வாழ்க்கை முறையை மாற்றியமைப்பதற்கான முயற்சியாக சொல்லப்படுகிறது. கம்யூனிஸ சித்தாந்தத்தை அடக்குமுறை மூலம் அனைவரின் எண்ணத்திற்குள் புகுத்தி முஸ்லிம்களை அவர்களின் நம்பிக்கைகளை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கோடு இந்த நடவடிக்கைகளை நடத்தி



வருகிறது. முஸ்லிம்கள் தொழுவதற்கு தடை, மசூதிகள் இடிப்பு, பன்றி கறியை கட்டாயமாக்குவது, மதுவை கட்டாயமாக்குவது, தாடிக்கும், புர்காவுக்கும் தடை என வெளிப்படையாக இஸ்லாத்திற்கு எதிரான போரை தொடங்கியிருக்கிறது சீன அரசு. இதனை "தீவிரவாத அழிப்பு" என்ற முத்திரையுடன் செய்து வருகின்றது சீன அரசு.

முகாமில் பல்வேறு சித்ரவதைகளை இம்மக்கள் அனுபவித்து வருகிறார்கள். இதனை முகாமில் இருந்து வெளிவந்த நபர்களே தெரிவிக்கின்றனர்.

**மறுகல்வி முகாம் எனும் பெயரில் சித்ரவதை முகாம்**

காய்ராட் சமர்காண்ட்; தான் முஸ்லிம் என்ற ஒரே காரணத்திற்காக அருகில் இருக்கும் கஜகஸ்தானுக்கு பயணம் செய்ததற்காக என்னை கைது செய்தனர். கைது செய்து மூன்று நாட்கள் தீவிர விசாரணைக்கு பிறகு "மறுகல்வி முகாம்" என்று அழைக்கப்படும் சித்ரவதை முகாமில் மூன்று மாதம் அடைத்தனர். அங்கே இருக்கும் மக்கள் அனைவரும் மூளைச்சலவைக்கும் அவமானத்திற்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்திற்கு கம்யூனிஸ சித்தாந்தங்களை படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகின்றனர். அதே போல் சீன அதிபர் XI ஜிங்பிங்கை புகழ்ந்தும் அவர் நீண்ட காலம் வாழ வேண்டும் என்றும் பாடல் பாட வேண்டும்.

யாரெல்லாம் இதை பின்பற்றவில்லையோ, படிப்பதற்கு தாமதமாக வந்தார்களோ, பாடுவதற்கு மறுத்தார்களோ அவர்களை 12 மணி நேரத்திற்கு கைகளிலும், கால்களிலும் விலங்கு போட்டு கட்டி வைப்பார்கள். அதன்பிறகும் இப்படியான தவறுகள் நடக்கும் போது பல மணி நேரத்திற்கு தண்ணீர் பீய்ச்சி சித்ரவதை செய்வார்கள். அல்லது நீண்ட நேரம் புலி நாற்காலி எனப்படும் பொறியில் உட்கார வைப்பார்கள், அது தாங்க முடியாத வேதனையை தரக்கூடியதாக இருக்கும். இதனை எல்லாம் அவர் அங்கே அனுபவித்ததாக சொல்கிறார்.

கராகாமி என்ற கிராமத்தில் உள்ள ஒரு முகாமில் மட்டும் 5700 பேர் அடைக்கப் பட்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் உய்கூர் மற்றும் கஜக்ஸ் முஸ்லிம்கள். இந்த முகாமில் அடைப்பதற்கு எந்த குற்றமும் செய்ய வேண்டியதில்லை. வெளிநாடுகளில் பணிபுரிந்தால், வெளி நாடுகளுக்கு சென்று வந்தால், வெளிநாடுகளில் இருந்து ஃபோன் அழைப்பு வந்தால், அதை விட மேலாக, மசூதிகளில் தொழுதால் அவர்களை முகாமில் அடைத்து விடுவார்கள் என்கிறார் சாமர்கண்ட்.

30 வயதுள்ள மனிதர் மொத்தம் 14 பேருடன் சித்ரவதை முகாமில் உள்ள ஒரு அறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அறையை தினமும் விடியற்காலையில் ஏதாவது ஒளித்து வைக்கப்பட்டுள்ளதா என்று ஆய்வு செய்வார்கள். அதன் பிறகு, அந்த நாள் கம்யூனிச சித்தாந்த பாடங்களையும் சீன அரசின் கொள்கைகளையும் இரண்டு மணி நேரம் படிக்க வேண்டும். அறையில் இருக்கும் அனைவரும் கம்யூனிசம் தொடர்பான பாடல்களையும் சீன அதிபரை புகழும் பாடல்களையும் பாட வேண்டும். இப்படியே தினசரி நாள் கழியும்.

ஓமிர் பெகாலி, கஜக் முஸ்லிம் இனத்தவர். தன் பெற்றோரை பார்க்க வரும் போது கைது செய்யப்பட்டிருக்கிறார். தனக்கு நேர்ந்த கொடுமைகளை விவரிக்கிறார், காலை 6.30 மணிக்கு கொடி ஏற்றுதலுடன் நாள் தொடங்கும். அதற்கு பிறகு கம்யூனிசத்தின் புரட்சி பாடல்கள் பாடப்படும். காலை உணவுக்கு பிறகு எல்லோரும் 10 நிமிடம் சீன அதிபரை புகழ்ந்தும் கம்யூனிச இயக்கத்தை புகழ்ந்தும் பாடல் பாடப்பட வேண்டும். உள்ளிருப்பவர்கள் அனைவருக்கும் தேசிய கீதம் மற்றும் கம்யூனிச பாடல்கள் கண்டிப்பாக தெரிந்திருக்க வேண்டும். இது போல் நிறைய பாடல்களை பாட வேண்டும். பாட மறுத்தால் உணவு கிடையாது, உட்கார முடியாது, படுக்க முடியாது. நீங்கள் ஒரு ரோபோட்டை போல மாற்றப்படுவீர்கள். அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதை கண்டிப்பாக செய்ய வேண்டும். உணவும் மோசமாக இருக்கும். அதனால் "Food Poisoning" அடிக்கடி பலருக்கு ஏற்படும்.

சில நேரங்களில் இஸ்லாமியர்கள் தடுக்கப்பட்ட பன்றி கறி உண்ண வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுவார்கள். ஆன்மிக நாட்டம் அதிகமாக உள்ளவர்களுக்கு கட்டாயப்படுத்தி மது குடிக்க வைக்கப்படுவார்கள். இந்த முகாம்களில் 80 வயது முதியவர்கள், பால் கொடுக்கும் தாய்மார்கள், அதிகமான இளைஞர்கள் எல்லாம் அடைக்கப் பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல முகாமில் வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் அடைக்கப் பட்டிருக்கிறார்கள். என்கிறார்.

பெகாலி தன்னிடமிருந்த சொத்துகளை செலவழித்து மீண்டும் கஜகஸ்தான் சென்று தற்போது வாழ்ந்து வருகிறார். (Washington post 17.05.18)

சீனாவின் இத்தகைய கொடூரமான நடவடிக்கையை மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு கண்டித்துள்ளது.

## மனிதஉரிமை ஆர்வலர்களையும் சிறைப்படுத்தும் சீன அரசு

சீனாவின் இந்த கொடூர அடக்குமுறைக்கு எதிராக சர்வதேச அளவில் போராடும் மனித உரிமை போராளிகளும் சீன அரசால் காணாமல் ஆக்கப்படுகின்றனர். ஆனால் உய்கூரில் உள்ள ஒரு சகோதரரின் கதை சற்று வித்தியாசமானது.

தாஹிர் இமின் உய்கூர் முஸ்லிம் இனத்தவர் அமெரிக்காவில் வாழ்கிறார். சீனாவின் அடக்கு முறைக்கு எதிராக நிறைய போராட்டங்களை செய்துள்ளார். இதற்கான உய்கூரில் உள்ள அவரது சகோதரரை சீனா சித்ரவதை முகாமில் அடைத்துள்ளது.

இமின் சகோதரன் மட்டுமல்ல அவரது உறவினர்கள் மூவரையும் சீன அரசு சிறைப்படுத்தியுள்ளது. இதை பற்றி இமின் சொல்லும் போது, “என்ன செய்வதென்று எனக்கு தெரியவில்லை. எப்படி என் சகோதரனையும், என் உறவினர்களையும் மீட்க முடியும் என்பதும் தெரியவில்லை. நான் சீன தூதரகத்திடம் கடிதம் மூலம் கேள்வி எழுப்பியிருக்கிறேன். ஆனால் எப்படியும் பதில் வராது என்று எனக்கு தெரியும்.” என்கிறார்.

இமின் தன் சகோதரன் ஆதில் பற்றி மேலும் அழுது கொண்டே புலம்புகிறார்; “அவன் குழந்தைகள் மீது அதிக அன்புடையவன். அவனுக்கு மூன்று குழந்தைகள். இப்போது யார் அவர்களை பார்த்துக்கொள்வார்கள். இதுவரை அவன் வெளிநாடுகளுக்கு பயணம் செய்தது கிடையாது. மசூதிக்கு கூட அவன் செல்வது கிடையாது. அவனை போய் கைது செய்து அடைத்திருக்கிறார்கள்.”

## சித்ரவதை முகாமில் நிகழும் கொடுமை

பெகாலி, உய்கூரில் வாழும் முஸ்லிம்களோடு சீன அரசால் கைது செய்யப்பட்டிருக்கிறார். முகாமில் கொடுக்கப்படும் உத்தரவுகளை பின்பற்றவில்லை. அதனால் ஐந்து மணி நேரம் நிற்க வைக்கப்பட்டிருக்கிறார். இதன் பிறகு இவர் தனிமை சிறைக்கு மாற்றப்படுகிறார். அங்கே தூங்கவே முடியாது. நாமே நம்மை அழித்துக் கொள்ளும் அளவுக்கு உளவியல் தாக்குதல்கள் நடத்தப்படும்.

முகாம்களில் இஸ்லாத்தின் ஆபத்துக்கள் என்ற தலைப்பில் நான்கு மணி நேரம் வகுப்புகள் எடுக்கப்படும். அந்த வகுப்பின் முடிவில் கேள்விகள் கேட்கப்படும் சரியாக பதில் சொல்லாதவர்கள் மணிக்கணக்கில் நிறுத்தப்பட்டு தண்டிக்கப் படுவார்கள். குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு வகுப்பு என்று நடத்தப்படும்.

இதில் முகாமில் உள்ள அனைவரும் கலந்து கொள்வார்கள். வகுப்பு முடிந்து கேள்விகள் கேட்கப்படும். கேள்விகள் எப்படி இருக்குமானால்..

நீங்கள் சீன அரசின் சட்டத்திற்கு கீழ்படிவீர்களா? அல்லது ஷரியா சட்டத்திற்கா?

மதம் ஏன் ஆபத்தானது என்று புரிந்து கொண்டீர்களா?...

என்ற கேள்விகள் கேட்கப்படும். இதற்கு தகுந்தாற் போல் பதில் கூறுபவர்கள் இந்த முகாமை விட மேலான இன்னொரு முகாமுக்கு அனுப்பப் படுவார்கள். அதற்காகவே ஒவ்வொருவரும் எழுந்து, "எனக்கு குர்ஆனைப் பற்றி ஒன்றும் தெரியாது எங்கள் அப்பா சொல்லிக்கொடுத்தார் ஆனால் அதை படிப்பதில்லை."

"இதற்கு முன்னால் ஆபத்து இருக்கிறது என்று தெரியவில்லை இப்போது தெரிந்தது" என்று தன் மத நம்பிக்கையை பற்றி விமர்சித்தால் அவர்கள் விடப்படுவார்கள். மாறாக பதில் கூறினால் தண்டிக்கப்படுவார்கள்.

முஸ்லிம்கள் எதை செய்து தரக்கூடியதாக இருந்தாலும் அதற்கு இன்ஷா அல்லாஹ் (அல்லாஹ் விரும்பினால்) என்று சொல்வார்கள். ஆனால் அப்படி சொல்வதற்கு தடை விதிக்கப்பட்டு "கம்யூனிஸ்ட் கட்சி விரும்பினால்" என்று சொல்லவேண்டும் என்று கட்டளை பிறப்பித்திருக்கிறது சீன அரசு.

ஜிங்ஜாங் தொலைக்காட்சியின் பத்திரிக்கையாளர் முகாமில் சீனாவின் வரலாற்றையும், கலாச்சாரத்தையும் சொல்லிக் கொடுக்க அழைத்து செல்லப்பட்டார். அவர் அங்கு இருக்கும் சூழலை விவரிக்கிறார்;

"இந்த முகாம்கள் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதியில் கல்வியறி வில்லாத விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள் மற்றும் சீன மொழி பேசத்தெரியாத குற்றத்திற்காக அடைக்கப்பட்டவர்கள்.

இரண்டாவது பகுதியில் தங்கள் மொபைல்களில் ஆன்மிகம் தொடர்பான விஷயங்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றை வைத்திருந்த குற்றவாளிகள் அடைக்கப்பட்டிருக்கின்றனர்.

மூன்றாவது பகுதியில் 10முதல் 15 ஆண்டுகள் தண்டனை பெற்றவர்கள் அடைக்கப் பட்டிருக்கிறார்கள்.

பத்திரிக்கையாளர் தன்னால் முடிந்த அளவுக்கு அவர்களுக்கு சிறிய அளவில் உதவியதாவும் சொல்கிறார். அதாவது, கல்வியறிவில்லாத விவசாயிகளுக்கு சில வரிகளில் சீன மொழியை கற்று கொடுத்து அதனை மட்டும் எப்போதும் சொல்லச் சொல்லி தண்டனை பெற்று தராமல் பார்த்துக் கொண்டேன். அதுபோல் இறைவனை அரபி வார்தை கொண்டு புகழ்வதை (மாஷா அல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ் போன்றவை) சொல்பவர்களை தண்டிக்கவில்லை. ஆனால் மற்ற அனைவரும் இதற்காக சிறுவர்களை தண்டித்தனர்.

ஒவ்வொரு நாளும் நான் உறங்க செல்லும் போதும் மக்களின் அழுகுரல் தான் கேட்டுக்கொண்டே இருக்கும். என் வாழ்க்கையில் மிக மோசமான தருணமென்றால் அது முகாம்களில் கழிந்தது தான் என்று முடிக்கிறார் பத்திரிக்கை நிருபர்.

முகாமில் அடைக்கப்பட்டிருந்த ஒரு உய்கூர் முஸ்லிம் பெண்மணி சொல்கிறார்,

"எங்களுக்கு பாடம் எடுப்பார்கள். அப்படி எடுக்கும் போது உய்கூர் பெண்கள் வரலாற்றில் எப்போதும் உள்ளாடை அணிந்ததில்லை. ஒவ்வொருவருக்கும் எக்கச்சக்க ஆண்களுடம் சுகம் அனுபவிப்பவர்களாக இருந்தனர். என்று சொல்லிக் கொடுப்பார்கள். அப்போது கத்தி எங்கள் இதயங்களில் குத்துவது போல் இருக்கும். இன்னும் அவர்கள் சொல்லிக்கொடுத்த இந்த கதை ஆறாத வடுவாக இருக்கிறது."

**முகாமில் அடைக்கப்பட்டுள்ள முஸ்லிம் பெண்களின் நிலை**

ஆண்களுக்கு மட்டுமல்ல. இந்த முகாம்களில் பால் தரும் தாய்மார்கள், தொடங்கி 80 வயது முதியவர்கள் வரை அடைக்கப்பட்டிருக்கிறார்கள். முகாம்களுக்குள் எல்லா பகுதியிலும் கண்காணிப்பு கேமிரா பொருத்தப்பட்டிருக்கும். கழிவறைகள் கூட விதிவிலக்கல்ல. அங்கும் கேமிராக்கள் பொருத்தப்பட்டிருக்கும். முகாமில் இருக்கும் பெண்கள் உள்ளாடை அணியக்கூடாது. முகாமில் அடைக்கப்பட்டவுடன் பெண்கள் முடியை மழித்து மொட்டையடிக்கப்படுவார்கள். இதற்கு சொல்லப் படும் காரணம் தான் கொடுமையானது;

"முடியை முழுமையாக மழித்தால் தான் மாடர்ன் ஹேர்ஸ்டைல் வரும் என்று இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது" என்று சொல்கிறார்கள்.

"சீன அதிபர் ஜிங்பிங் நல்லவர்! கம்யூனிஸ கட்சி பெரிய கட்சி! இரண்டையும் புரிந்து கொள்ளாத காரணத்தால் தான் எனக்கு இந்த தண்டனை" என்று முழக்கமிட வேண்டும். முஸ்லிம்களின் தவ்ஹீத் கொள்கை முழக்கம் என்று சொல்லக்கூடிய "அல்லாஹ்வைத் தவிர கடவுள் இல்லை" என்பதற்கு பதிலாக "எந்த கடவுளும் இல்லை. எனக்கு கடவுள்



மீதும் நம்பிக்கை இல்லை. என் நம்பிக்கை முழுவதும் கம்யூனிச இயக்கதின் மீது தான்" என்று முழக்கமிட வேண்டும்.

"இதுநாள் வரை நான் குருடியாக இருந்து விட்டேன். அதனால் தான் சீன அதிபரின் மகிமை தெரியவில்லை. நான் பெரிய முட்டாள் அதனால் தான் இதுநாள் வரை அதிபருக்கு நன்றி சொல்லாமல் இருந்திருக்கிறேன்" என்ற முழக்கதையும் சொல்ல வேண்டும். இந்த முழக்கங்களெல்லாம் இந்த முகாமுக்குள் தினம் தினம் சொல்லியாக வேண்டும். சொல்லாதவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

**சீனா வரையறுத்துள்ள தீவிரவாதம்**

சீன அரசு, முஸ்லிம்களை அடக்குமுறைக்கு உள்ளாக்கி அவர்களின் நம்பிக்கையிலிருந்து வெளியேற்றி கடவுள் நம்பிக்கையற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற திட்டத்துடன் கலாச்சாரப் போரை தீவிரமாக நடத்தி வருகிறது. இதற்கு முதற்கட்டமாக ஜிங்ஜாங் பகுதியில் உள்ள மெஜாரிட்டியான உய்கூர் முஸ்லிம்களை அழித்தொழிக்கும் வேலையை செய்து வருகிறது.

தீவிரவாதத்தை ஒழிக்கிறோம் எனக் கூறி அந்த முஸ்லிம்களின் இனத்தையே சிறையில் அடைத்து கொடுமைப்படுத்துகிறது. தீவிரவாதத்தை அழிக்கும் நடவடிக்கையாக இந்த நடைமுறை உள்ளது என்றும் உலக நாடுகளிடம் அறிக்கை விடுகிறது. அப்படி உய்கூர் முஸ்லிம்களில் யாரெல்லாம் தீவிரவாத செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பதற்கு 75 முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களை பட்ட்டியலிட்டுள்ளது. அந்த பழக்க வழக்கங்கமா உடையவர்கள் எல்லாம் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள்.

**அந்த 75 பழக்க வழக்கங்களில் சில;**

1) முனங்கால்களுக்கு மேலே ஆடை அணிவது.

2) கால்களை விரித்து வைத்து தொழுவது.

3) தொழும் போது நெஞ்சு பகுதிக்கு மேலாக கை கட்டி தொழுவது.

4) முடிக்கு மருதாணி தடவிக் கொள்வது.

5) நீளமாக தாடி வளர்ப்பது.

6) நீளமான உடைகள் உடுத்துவது.

7) இஸ்லாமிய பெண்கள் புர்கா உடுத்துவது.

8) மசூதிகளுக்கு வெளியே தொழுகை நடத்துவது.

9) காலங்காலமாக என்ன முறை பின்பற்றப் படுகிறதோ அதில் மாற்றம் ஏற்படுத்துவது.

10) புனித யாத்திரிக்கைக்காக மெக்காவுக்கு செல்வது.

11) குழந்தைகளுக்கு முஸ்லிம் பெயர்களை வைப்பது.

இது போன்ற முஸ்லிம்கள் மேற்கொள்ளும்

அடிப்படை விஷயங்களை எல்லாம் தீவிரவாதத்துடன் தொடர்பு படுத்தி அவர்களை அழிக்க நினைக்கிறது. சீனாவின் இச்சட்டம் சர்வதேச அளவில் செயல்படுத்தப்பட்டால், உலக மக்கள் தொகையில் முஸ்லிம்களில் முக்கால் வாசியினர் சிறையில் தான் இருக்க வேண்டும்.

**கம்யூனிச இயக்கத்தின் கொடுமைகள்**

ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த பிரச்சாரப் படுத்துவார்கள். இல்லையென்றால் நடைமுறையில் நம்பிக்கை உருவாக்கப்படும். ஆனால், சீனாவில் ஆட்சியில் இருக்கும் கம்யூனிச அமைப்பினர் அப்படியில்லை. தங்கள் அமைப்பே உயர்ந்தது என்றும், தங்கள் தலைவரே உயர்ந்தவர் என்றும் மக்களை சித்ரவதை செய்து தங்களை பற்றி புகழ்ச்சி பாடல்களை எழுதி கொடுத்து கட்டாயப்படுத்தி பாட சொல்கின்றனர்.

ஒரு நம்பிக்கையை அழிக்க நினைக்கும் சீனாவின் கம்யூனிச அரசு கட்டாயப்படுத்தி முஸ்லிம்களுக்கு மதுவை அளித்தும், பன்றிக்கறியை உண்ணச் செய்வதாலும் சாதித்து விடலாம் என கனவு காண்கிறது. தோற்றுவிட்ட சித்தாந்தத்தை உயிர்பிக்க வலியதொரு நம்பிக்கையை தன் எதேச்சதிகாரத்தால் நசுக்க பார்க்கிறது. ஆனால் அது ஒருபோதும் நடக்காது. அதற்காக சீன அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை மிக மோசமானது. இதனை வல்லரசு ஆதிக்க நாடுகள் மட்டுமல்ல இஸ்லாமிய பெயர் தாங்கிய நாடுகள் கூட கண்டும் காணாமல் இருப்பது தான் மிகப்பெரும் வேதனை.

கொடுமைப்படுத்துதலும், அடக்குமுறைக்கு உள்ளாக்குதலும் மறுகல்வி முகாம்களில் மிக இயல்பான ஒன்று. இங்கே முகாம்களில் மரணங்கள் நிகழ்வதும் இயல்பானது. அதனால் ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக விசாரிக்க வேண்டும் என்று சீனாவை சேர்ந்த ஜனநாயக ஆதரவாளர்கள் ஐக்கிய நாடுகள் சபைக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

“சீனாவில் வாழும் முஸ்லிம்கள் சீன அரசின் முழு கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள். அதிலும் உய்கூர் மக்கள் மீது செலுத்தப்படும் அடக்குமுறைகள் அப்பட்டமான மனித உரிமை அத்து மீறல்கள். முஸ்லிம்கள் தங்கள் சொந்த வீட்டினுள் அவர்கள் உடை உடுத்தும் போது, உண்ணும் போது, உரையாடும் போது, தன் தேவைகளை நிறைவேற்றும் போது என எப்போதும் அவர்களுடன் சம்பந்தமில்லாத ஒருவர் இருப்பது போல் டெக்னாலஜியை கொண்டு கண்காணிக்கப் படுகிறார்கள்” என்கிறார் சீனாவை சேர்ந்த மனித உரிமை ஆர்வலர் மாயாவாங்.

உய்கூர் முஸ்லிம்கள் தங்கள் போன்களில் ஸ்பைவேர் எனும் தொழில்நுட்பம் பொருத்தப் பட்டு அவர்கள் கண்காணிக்கப்படுகிறார்கள். We chat எனும் சமூக வலைத்தளத்தை பயன்படுத்தி மெசேஜ் அனுப்பியதற்காக இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டனர். இந்த அளவிற்கு முஸ்லிம் களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது.

தொழில்நுட்பங்கள் கொண்டு கண்காணிப்பது சமீபகாலமாக என்றாலும் தன் கட்சி உறுப்பினர்களை கொண்டே அவர்கள் வீட்டினுள் உடன் இருந்தே கண்காணிப்பது 2014லிருந்தே நடந்து வருகிறது. இப்போது நாட்கள் அதிகமாக்கப்பட்டு மாதத்தில் ஐந்து நாட்களுக்கு ஒவ்வொரு முஸ்லிம் வீட்டிலும் ஒரு உறுப்பினர் தங்கி அவர்கள் என்ன செய்கிறார்கள்? தொழுகிறார்களா? வணக்க வழிபாடுகளில் ஈடுபடுகிறார்களா? என கண்காணிக்கப் படுகிறார்கள். இப்படி கண்காணிப்பதற்காக வரும் கம்யூனிஸ இயக்கத்தினருக்கு தேவையான உணவு, தங்குமிடம் போன்றவற்றையும் அந்த முஸ்லிம்களே ஏற்படுத்தி தர வேண்டும். முஸ்லிம்களுடன் இணக்கமாக வாழ்தல் என்ற பெயரோடு தான் 2014 லிருந்து இந்த முறையை சீன அரசு அறிமுகப்படுத்தியிருக்கிறது. ஆனால் காலம் செல்லச் செல்ல இதன் தீவிரம் தெரிய ஆரம்பித்திருக்கிறது.

தங்கள் விருப்பமில்லாமல் முஸ்லிம்களின் சொந்த வீட்டுக்குள் கம்யூனிச கட்சியின் உறுப்பினர்கள் அதிகாரத்தை செலுத்தி தங்க வைக்கப்படுகிறார்கள். அதுவும் சில பகுதிகளில் ஒரு மாதத்திற்கு ஐந்து நாட்கள் எனவும், சில இடங்களில் மாதத்திற்கு எட்டு நாட்கள் எனவும் தங்குகிறார்கள். உலகின் எங்குமே நடக்காத கொடூரம். தன் சொந்த வீட்டுக்கு விருப்பம் இல்லாத ஒருவரை உணவு கொடுத்து, இருப்பிடம் கொடுத்து தங்க வைப்பது.

இந்த அடக்குமுறைகளை எல்லாம் சீனா தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என நியாய்ப்படுத்தி கொள்கிறது. ஆனால் இத்தகைய நடவடிக்கையில் முஸ்லிம்களை மட்டும் திட்டமிட்டு ஒதுக்கி அவர்களின் நம்பிக்கைக்கு மாற்றாக அனைத்தையும் கட்டாயப்படுத்தி இஸ்லாத்திலிருந்து அவர்களை பிரித்து கம்யூனிசத்தின் பக்கம் திருப்பும் வேலையை செய்து வருகிறது.

ஆதாரங்கள் - https://www.washingtonpost.com
https://www.hrw.org
https://www.vox.com
https://www.independent.co.
https://www.theglobeandmail.com
https://www.nytimes.com
https://www.rfa.org
https://www.theguardian.com

**- அபூ சித்திக்.**



# 25 ஆண்டுகளுக்குப் பின் தீவிரவாத வழக்கிலிருந்து விடுதலை

*1994* மே *28* அன்று, பரூக் அஹ்மத் சார், உங்களைத் தேடி காவல்துறையை சேர்ந்த ஒரு அதிகாரி ஒருவர் வந்துள்ளார் என்றார் ஒருவர். மகாராஷ்டிரா தானேவில் அப்பொழுது அவர் மாணவர்களுக்கு பாடம் நடத்தி கொண்டிருந்தார்.

*24* வயதான பரூக் வெளிநாடு செல்வதற்காக பாஸ்போர்ட் பெற விண்ணப்பித்திருந்தார். எனவே அது சம்பந்தமாக தன்னைத் தேடி வந்திருக் கிறார்கள் என்று நினைத்தார்.

அருகில் இருக்கும் காவல்துறைக்கு வந்துவிட்டு போங்கள் என்று கூறிவிட்டு கிளம்பினார் காவல்துறை அதிகாரி. அவர் அங்கே சென்றவுடன் உங்களிடம் மேலும் சில கேள்விகளைக் கேட்க வேண்டும் என்றுக்கூறி கமிஷ்னர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றனர்.

உங்களுக்கு ஜமீல் கானை தெரியுமா என்று கேள்விக் கேட்டனர். ஆம் அவர் என்னுடைய உறவினர் என்றார் பரூக் அஹ்மத்.

ஆஷிக் ஹுசைன் காந்தேவையும் தெரியுமா என்றனர். எனக்கு அப்படி யாரையும் தெரியாது என்றார் பரூக் அஹ்மத்.

ஆஷிக் ஹுசைன் ஒரு காஷ்மீர் தீவிரவாதி. அவருடன் சேர்ந்து நீயும் மகாராஷ்டிராவில் தாக்குதலை நடத்த திட்டமிட்டுள்ளீர்கள் என்று குற்றம் சுமத்தினர் காவல் துறையினர். அந்த இருவரும் சேர்ந்து தீவிரவாதத்தை பரப்ப முயற்சி செய்கின்றனர் என்றனர் காவல் துறையினர். பின்பு அவரை கைது செய்து சிறையில் அடைத்து துன்புறுத்த ஆரம்பித்தனர்.

*400* கி.மீ. தொலைவிலிருக்கும் தனது சொந்த ஊரான புஷ்வாலில் இருந்து அவருடைய உறவினர்களான ஜமீல் மற்றும் யூசுப் கானை ஏற்கனவே காவல்துறை தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்திருந்ததைப் பற்றி பரூக் அஹ்மத்விற்கு அப்பொழுது தெரியாது.

இவரோடு மற்ற முஸ்லிம்களும் சேர்ந்து மகாராஷ்டிராவின் பல பகுதிகளில் குண்டு வெடிப்புகளை நடத்த திட்டமிட்டனர் என்று குற்றம் சுமத்தப் பட்டார்கள். அடுத்தடுத்து வந்த வாரங்களில், பத்திரிகைகளின் முதல் பக்கத்தில் இவர்கள் தீவிரவாதிகளாக காட்டப்பட்டனர்.

*12* பேர் முதலில் குற்றம் சுமத்தப்பட்டனர். இதில் ஒருவர் மட்டும் ஆதாரங்களை முன்வைத்து வழக்கு விசாரணையில் இருந்து தப்பித்தார்.

குற்றம் சுமத்தப்பட்ட *11* பேர்கள்: ஜமீல் அஹ்மத் கான், முஹம்மது யூனுஸ், யூசுப் கான், வாசிம் ஆசிப், அய்யூப் இஸ்மாயில் கான், சேக் சபி, பரூக் அஹ்மத் கான், அப்துல் காதர் ஹபிபி,



செய்யது அஸ்பக் மிர், மும்தஸ் முர்தசா மிர் மற்றும் முஹம்மது ஹாரூன் அன்சாரி. தேசவிரோத மற்றும் நாட்டிற்கு எதிராக சூழ்ச்சி செய்தல் சட்டங்களில் இவர்கள் குற்றம் சுமத்தப்பட்டனர்.

1992-ல் நடந்த துயர சம்பவமான பாபரி மஸ்ஜித் இடிப்பிற்கு பின்பு, இதற்கு பழிவாங்குவதற்காக ஹிந்துக்களின் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஜமீலும் அவருடைய உறவினர் இரண்டு பேரும் திட்டமிடுவதாக தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது என்று ஆரம்பத்தில் கூறியது காவல்துறை. பாபரி மஸ்ஜித் இடிப்பிற்கு பின் பல பகுதிகளில் வகுப்பு கலவரம் பரவியது. 1993-இல் மும்பையில் நடந்த குண்டு வெடிப்பில் 257 பேர் பலியாயினர்.

தேசவிரோத சட்டத்தோடு தடாவையும் (Terrorist and Disruptive Activities (prevention) Act) சேர்த்து அவர்கள் மீது பாய்ச்சியது காவல்துறை. (1985-1995 வரை தீவிரவாதத்திற்கு எதிராக தடா சட்டம் பயன்படுத்தப் பட்டது.)

### சித்ரவதைகள்

புஷாவல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டப் பின், அவர்களை காவல்துறை தங்கள் கட்டுப் பாட்டில் எடுத்துக் கொண்டது. சிறையில் அவர்கள் துன்புறுத்தப்பட்டனர். செய்யாத குற்றத்தை ஒப்புக்கொள்ள சொல்லி கட்டாயப்படுத்தப் பட்டனர்.

“குற்றவாளிகளுக்கு புகலிடமளித்தல், சதித்திட்டம் தீட்டுதல், தீவிரவாத செயல்களை திட்டமிடல் இன்னும் சில குற்றங்களை எங்கள் மீது சுமத்தினர். எங்களுக்கு எதுவும் தெரியாது. நாங்கள் அப்பாவிகள் என்று எவ்வளவோ கூறியும் காவல்துறை எங்களை தொடர்ந்து சித்ரவதை செய்து கொண்டே இருந்தது” என்கிறார் பரூக் அஹ்மத் அல்ஜசீராவிற்கு அளித்த பேட்டியில்.

கைகளை உடம்பின் பின்புறமாக வைத்து கயிறுகளால் பிணைத்து எங்கள் கால்களை (180 டிகிரி) விரிப்பார்கள் காவல்துறையினர். பல நேரங்களில் எங்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் தலைகீழாக தொங்க விடப்படுவோம். இந்த சித்திரவதைகளுக்கு பின் வெற்று காகிதத்தில் கையெழுத்திட சொல்வார்கள்.

நான்கு மாதங்கள் சிறையில் துன்புறுத்தப்பட்ட அவர்களை மகாராஷ்டிரா நாசிக் நகரத்தின் சிறப்பு நீதிமன்றம் பிணையில் விடுவித்தது.

“அதன் பின்பு நாங்கள் சிறை சென்றதில்லை. எனினும் எங்களால் சுதந்திரமாக நடமாட முடியவில்லை” என்கிறார் முக்கிய குற்றவாளி என்று குற்றம் சுமத்தப்பட்ட ஜமீல்.

### தொடரும் சமூக புறக்கணிப்பு

தீவிரவாதி என்று குற்றம் சுமத்தப்பட்ட பின், எங்களின் வாழ்க்கை முன்பை போல் இயல்பானதாக இல்லை. காவல்துறை மட்டுமல்ல எல்லோருமே எங்களை சந்தேகப் பார்வையோடு பார்த்தனர் என்கிறார் ஜமீல்.

காவல்துறை தங்களையும் கைது செய்துவிடும் என்ற அச்சத்தில் எங்களின் நண்பர்கள் பலபேர் புஷாவல் ஊரை விட்டு 1994-ஆம் ஆண்டில் வெளியேறினர். உறவினர்களும் நண்பர்களும் வாழ்த்துகளை கூறுவதை கூட தவிர்த்தனர். எங்களின் சொந்த ஊரிலேயே நாங்கள் வினோத மானவர்களாக மாறிப்போனோம் என்கிறார் பரூக் அஹ்மத் கான்.

கைது செய்யப்பட்டவர்களில் மூன்று பேர் மருத்துவர்கள். இரண்டு பேர் பொறியாளர்கள். இன்று முனைவர் பட்டத்தை பெற்றுள்ளார் அப்துல் காதர் ஹபிபி.

பரூக் அஹ்மத் டிப்ளோமோ எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் டெலி கம்யூனிகேசன் படித்துள்ளார். மற்றவர்கள் Industrial Electronics படித்துள்ளனர்.



சில காலம் வெளிநாட்டில் இருந்து சம்பாதித்துவிட்டு, சொந்த ஊர் திரும்பிடலாம். அதன் பின், சுயமாக ஏதோ ஒரு தொழில் செய்து பிழைத்து கொள்ளலாம் என்று நினைத்துத்தான் நான் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்திருந்தேன். ஆனால் இந்த வழக்கு என் வாழ்க்கையை அழித்து விட்டது என்று அல்ஜஸீராவிற்கு அளித்த பேட்டியில் பரூக் அஹ்மத் கூறியுள்ளார்.



குற்றம் சுமத்தப்பட்ட பின் அவருடைய வேலை பறிபோனது. வாழ்வாதார தேவைக்காக இன்வெர்டர்களை (Inverter) பழுது பார்க்கும் வேலையை செய்து வருகிறார்.

முஹம்மது யூனுஸ் (63) ஒரு மருத்துவர். அவருடைய ஊரில் ஒரு சிறிய கிளினிக்கை வைத்து மருத்துவ சேவையை செய்து வருகிறார்.

சிறையில் இருந்து பிணையில் வெளியே வந்த பின்பு, சில மாதங்கள் என்னுடைய கிளினிக்கில் மருத்தவம் பார்க்க மக்கள் வரவேயில்லை. என்னுடைய பெயரின் முன் "தடா" வை இணைத்து கொண்டனர் என்கிறார் அவர்.

தடாவின் கீழ் எந்தவித குற்றங்களும் பதியப்படவில்லை. எனவே 2003-ஆம் ஆண்டு இவ்வழக்கை கைவிட்டு விடலாம் என பரிந்துரைத்தது மகாராஷ்டிரா அரசு. ஆனாலும் இப்பரிந்துரையை தள்ளுபடி செய்தார் நாசிக் நீதிபதி ஒருவர்.

"மாநில அரசு பரிந்துரைத்தும் எங்களின் மீது சுமத்தப்பட்ட தடாவை ரத்து செய்ய பல வருடங்களாக நீதிமன்றம் முன்வரவில்லை. எனவே தடாவை நீக்கக்கோரி 2012-இல் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டோம்" என்கிறார் ஜமீல்.

சட்ட உதவிகளை பெறுவதற்காக 2016-இல் ஜமாத்துல் உலமா ஹிந்த் அமைப்பை அணுகியுள்ளனர். அவர்களிடமிருந்து சட்ட உதவிகளை பெற்ற பின், மீண்டும் உச்ச நீதிமன்றத்தை அணுகியுள்ளனர். நாசிக் தடா நீதிமன்றம் ஒரு வருடத்தில் விசாரணையை முடிக்க வேண்டும் என்று கூறியது உச்ச நீதிமன்றம்.

### 2018-இல் ஜுலையில் விசாரணை ஆரம்பமானது

25 வருட போராட்டத்திற்குப் பின்பு, கடந்த பிப்ரவரி 27, 2019 அன்று இவர்கள் அனைவரும் குற்றமற்றவர்கள் என்றுக் கூறி வழக்கிலிருந்து விடுவித்தது நீதிமன்றம்.

தடா நீதிமன்ற நீதிபதி எங்களை விடுவித்தபோது "நீதிமன்ற வளாகத்திலே நாங்கள் கதறி அழுதோம். ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டோம். நாங்கள் அப்பாவிகள் என்று நிரூபணம் செய்வதற்கு 25 வருடங்கள் ஆகியுள்ளது" என்றார் ஜமீல்.

அத்தருணம் பெருநாளை (ஈத்) போன்றது, மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம் என்றார் ஜமீலின் மனைவி ரெஹானா.

டிசம்பர் 2016-இல் வழக்கில் பொய்யாக வழக்கில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யும் Innocence Network என்ற அமைப்பு ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதில் இப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு இழப்பீடு தொகை வழங்கிட வேண்டும் என்று கோரியது.

பொய் வழக்குகளை புனைந்து கைது செய்து விசாரணை நடத்துகின்ற அதிகாரிகளையும் அவர்களுடைய தவறுகளுக்காக பொறுப்பேற்க வைக்க வேண்டும் என்று கூறியது அந்த அறிக்கை.

இந்தியாவில் சில குறிப்பிட்ட சமூகங்களுக்கு எதிராக மட்டும் திட்டமிட்டே ஒருதலைபட்சமாக விசாரணை நடத்தப்படுவதாக கூறுகிறார் மனித உரிமை செயற்பாட்டாளரான மனிஷா சேத்தி.

தீவிரவாத செயல்கள் எந்த மூலையில் நடந்தாலும் அதற்கு முதல் கைது முஸ்லிம்களே. இது மிகவும் வருத்தத்திற்குரியது.

காவல்துறை நியாயமற்ற முறையில் தங்களை குறிவைக்கின்றனர் என்று முஸ்லிம்கள் நம்புவதாக இந்தியாவில் வெளிவந்த பல அறிக்கைகளும் சுட்டி காட்டுகின்றன.

தவறு செய்யும் அதிகாரிகளை தண்டிக்கும் போதுதான் இது போன்ற பொய்யான வழக்குகளை புனைந்து அப்பாவிகளின் வாழ்க்கையை சீரழிப்பது முடிவுக்கு வரும்.

ஆதாரம்: Aljazeera, 15 March 2019

**அபூஹாசின்**



# எது முதலில்?



யூசுஃப் அல் கர்லாவீ



தமிழில்
பேராசிரியர். இல்யாஸ் ரியாஜி

**அபுல் அஃலா மவ்தூதி**

அவர் நவீன ஜாஹிலிய்யா (அஞ்ஞானத்துக்கு) எதிராக போரிட்டார். இபாதத் (வழிபாடு) தீன் (மார்க்கம்) ஆகியவற்றின் முழுப் பொருளையும் புரிந்திட பின்பற்றிட மக்களை அழைத்தார். அல்லாஹ்வின் சட்டங்களுக்கு மட்டுமே கட்டுப்பட வேண்டும். மனித சட்டங்களை அவை எவ்வளவு பெரிய அரசியல் தலைவரிடம் இருந்து வந்தாலும், சிந்தனையாளர்கள், பெரும் பதவியில் இருப்பவர்களிடம் இருந்து வந்தாலும் அவற்றை தூக்கி வீசிவிட வேண்டும் என்றார்.

தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் இவற்றில் காணப்பட்ட மேற்கத்திய கோட்பாட்டை விரட்டி தனித்தன்மை மிக்க இஸ்லாமிய கலாச்சாரத்தை மீட்டார்.

புரட்சி, சீர்திருத்தம், மாற்றம் ஆகியவற்றில் தனியான வழி முறையை கடைபிடித்தார். இதற்காக ஏராளமான நூல்களையும் உரை தொகுப்புகளையும் வெளியிட்டார். இஸ்லாத்தை பிற மக்களிடம் கொண்டு சென்றதிலும் அதற்குப் புத்துயிரூட்டியதிலும் அவர் கடைப்பிடித்த பாங்கு அலாதியானது. அவர் உருவாக்கிய "ஜமாத்தே இஸ்லாமி" இயக்கம் அவரின் வழிமுறைகளை முன்னெடுத்துச் சென்றது.

**ஷஹீத் சையித் குதுப்**

எல்லாவற்றுக்கும் முன்னால் கொள்கை சீராக இருக்க வேண்டும் என்பதே அவரது லட்சிய பணி. பூமியில் அல்லாஹ்வின் ஆட்சி தான் இருக்க வேண்டும் என்பதை இடைவிடாமல் இடையூறுகளை இன்முகத்துடன் ஏற்று பிரச்சாரம் செய்து கொண்டே இருந்தார்.

தம் வாழ்வின் பிந்திய காலங்களில் அவர் எழுதியுள்ள நூல்களில் குறிப்பாக ஃபீழில்லாலில் குர் ஆன் எனும் குர்ஆன் விரிவுரையில் தனது இலட்சியத்தை மெத்த வலியுறுத்தினார்.

பூமி எங்கும் அல்லாஹ்வின் ஆட்சியே நடக்கவேண்டும். அதிகாரம் அல்லாஹ்வுக்கே என்று பேசினாலே இது மௌதூதியின் கோட்பாடு சையித் குதுப்

கோட்பாடு என்று நினைத்துக் கொள்கின்றனர். இது தவறு. அறியாமை.

ஆட்சி அதிகாரம் என்பதைப் பற்றிய விவாதத்தில் உசூலுல் ஃபிக்ஹ் எனப்படும் சட்டத்தின் அடிப்படையில் ஞானம் உள்ள அறிஞர்கள் அனைவருமே சட்டமியற்றும் அதிகாரம் அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே உண்டு வேறு எவருக்கும் அந்த அதிகாரம் இல்லவே இல்லை என்றும் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் சட்டங்களை நமக்கு எடுத்துரைக்க வந்த தூதர் என்றும் தெளிவாகக் கூறியுள்ளனர்.

ஏகத்துவத்தின் அடிப்படையில் ஒன்றாக அருள்மறையில் அல்லாஹ் கூறுவதைப் பாருங்கள்;

(நபியே! கூறும்:) "அல்லாஹ் அல்லாதவனையா (தீர்ப்பளிக்கும்) நீதிபதியாக நான் தேடுவேன்? அவன்தான் உங்களுக்கு (விரிவான) விளக்கமான வேதத்தை இறக்கியுள்ளான் (6:114)

இந்தக் கொள்கைப் பிடிப்பு முதலில் முஸ்லிம்களுக்கு இருக்க வேண்டும். இதையே தம் முதன்மைப் பணியாக எடுத்து பணியாற்றினார் இவர்.

இது மிகவும் சரியான பணி. ஏனென்றால் நோயுள்ள குழப்பமான ஒரு கொள்கையின் கீழ் நம்பிக்கையின் கீழ் நல்ல பணிகள் எப்படி உருவாக்கிட முடியும்! சுற்றி வளைத்து அதன் நிழல் மட்டும் என்ன நேராகவா இருந்துவிடப் போகிறது?

எனவேதான் நவீன ஜாஹிலிய்யா (அஞ்ஞானம்) எந்த வடிவில் வந்தாலும் அதை எதிர்த்தார். கொள்கையில் கோட்பாட்டில் வழிமுறையில் எங்கே அது தலைகாட்டினாலும் எதிர்த்தார். சமுதாய வாழ்வில், குடும்ப வாழ்வில், தனிமனித வாழ்வில் எங்கே ஜாஹிலிய்யா வந்தாலும் அதை முனைப்புடன் எதிர்த்தார். சட்டமியற்றும் அதிகாரத்தை தன்வசம் வைத்திருக்கும் அரசுகள் பூமிப்பந்தின் மேல் பரப்பில் எங்கே இருந்தாலும் அவை இஸ்லாமிய நாடுகளாக இருந்தாலும் அவை அஞ்ஞான அரசுகளே என்றார்.

மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று சட்டங்களை போடுவதும், வழிகாட்டும் நெறிகளை வகுப்பதும், நன்மைகள் எவை, தீமைகள் எவை என்று கூறுவதும், மனித சமுதாயத்தின் வாழ்வு எதன்மீது அமையுமோ அந்த அடிப்படைகளை தீர்மானிப்பதும் அனைத்தும் அல்லாஹ்வின் உரிமை. அவற்றை தீர்மானிக்கும் உரிமையை மனிதன் தன் கையில் எடுப்பது அல்லாஹ்வின் உரிமையை பறிக்கும் அநீதியான செயல்.

எனவே அல்லாஹ் தன் அடியார்கள் எப்படி வாழ்ந்திட வேண்டுமென்று வழிகாட்டி இருக்க, அதை தன் உரிமை என்று வாதாடும் மனிதனை மனிதனிடமிருந்து அதை பறித்து அல்லாஹ்விடமே ஒப்படைப்பதுதான் முதல் பணி. மற்ற பணிகளை விட இதுவே முதன்மையானது.

நல்ல முஸ்லிம்கள் சிலர் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்ற இந்த சன்மார்க்கத்தின் கிளை சட்டங்கள், பிரிவு சட்டங்கள் அனைத்தையும் விட இதுவே முதன்மையானது.

முஸ்லிம் சமுதாயத்தின் அடிப்படையாக விளங்கும் இந்த மிகப் பெரிய பணியை பற்றி அக்கறையில்லாமல் அல்லாஹ்வின் அடியார்களை மனித சட்டங்களாலும் இந்தப் பெரிய அக்கிரமத்தை கண்டுகொள்ளாமல் மற்ற தீமைகளை மட்டும் தடுப்பது சரியல்ல. இந்தத் தீமைகளை தடுப்பதை விட அந்தத் தீமையை தடுப்பது முதன்மையானது. இங்கே நான் சையித் குதுப் அவர்களின் கருத்து ஒன்றை எடுத்தாள விரும்புகிறேன். இஸ்ரவேலர்களை பற்றி அல்லாஹ் கூறியுள்ள வசனம்;

இன்னும் தாம் செய்து கொண்டிருந்த தீய காரியங்களைவிட்டு ஒருவரையொருவர் தடுப்போராகவும் அவர்கள் இருக்கவில்லை; அவர்கள் செய்து கொண்டிருந்தவையெல்லாம் நிச்சயமாக மிகவும் தீயவையாகும்.(5:79)

இவ்வசனத்துக்கு "ஃபீழிலாலில் குர்ஆன்" எனும் திருமறை விரிவுரையில் சையித் குதுப் இப்படி விளக்கம் கூறினார்...

சிறந்ததொரு சமுதாயத்தை உருவாக்குவது தான் நாம் முழு முனைப்புடனும் அர்ப்பணிப்புடனும் செய்ய வேண்டிய முதல் பணி. அல்லாஹ் காட்டிய வாழ்க்கை நெறிப்படி வாழும் சமுதாயம், இந்த சமுதாயம்தான் சிறந்த சமுதாயம். நன்மையை ஏவி தீமையை தடுத்தல் என்ற வழிமுறையை கடைபிடித்து தனிமனிதனிடம் சில சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிப்பையும் தியாகத்தையும் காட்டுகிறோம். அதற்கெல்லாம் முன்னர் செய்ய வேண்டியது சிறந்த சமுதாயத்தை உருவாக்குவது தான்.

கொஞ்சம் எண்ணிப்பாருங்கள் ஜாஹிலிய்யா வரம்பு மீறி கொண்டிருக்கும் வேளையில் அல்லாஹ் காட்டித் தந்த வழி முறையில் அல்லாமல் வேறு வழியில் சமுதாயம் நடை போட்டுக் கொண்டிருக்கும் வேளையில் சில கிளை சீர்திருத்தங்கள் என்ன செய்துவிட முடியும்? இது போன்ற சூழலில் உபாயங்களை எல்லாம் அடிப்படையில் இருந்து ஆரம்பிக்கவேண்டும். வேர்களில் இருந்து முளைத்து கிடைக்கவேண்டும். அல்லாஹ்வின் அதிகாரம் பூமியில் நிலை பெற நாம் உழைப்பையும் அர்ப்பணிப்பையும் தர வேண்டும்.

அல்லாவின் அரசு பூமியில் நிலைபெறும்போது நன்மையை ஏவி தீமையை தடுத்தல் என்பது அந்த வேரை சார்ந்து நிற்கும் ஒரு கிளையாக ஆகிவிடும். இப்படி செய்ய வேண்டுமானால் அதற்கு ஈமான் எனும்

இறைநம்பிக்கை இருக்க வேண்டும். வாழ்வை இந்த ஈமான் சொல்லித்தரும் அடிப்படையிலும் ஈமானுடனான தொடர்பிலும் அமைக்க வேண்டும்.

இப்படிப்பட்ட ஈமான் யாரிடம் உள்ளதோ அவர் தான் அல்லாஹ்வையே முழுக்க சார்ந்து நிற்பார். நாம் எடுத்துக் கொண்ட இந்த நற்பணிக்கு அல்லாஹ் நிச்சயமாக உதவி செய்வான். அதற்குரிய கூலியை அல்லாஹ் வழங்குவான் என்று திட்டவட்டமாக நம்புவார். எவ்வளவு நீண்ட நெடுங்காலம் சோர்வடையாமல் அல்லாஹ்விடம் கூலியை எதிர்பார்ப்பார்.

இவர் எந்த இடத்திலும் அஞ்ஞானவாதிகளின் உதவியை எதிர்பார்க்க மாட்டார். வழிகெட்ட சமுதாயம் தரும் பதவிகளை ஏற்க மாட்டார். இவ்வுலக வாழ்வில் எவரும் இதற்கான கூலியை தந்திட மாட்டாரா என்று ஏங்க மாட்டார். நன்மையை ஏவி தீமையை தடுப்பது பற்றி வந்துள்ள அருள்மறை வசனங்களையும், அண்ணல் நபி(ஸல்) அவர்களின் பொன் மொழிகளையும் ஏறிட்டுப் பாருங்கள். அவை எல்லாம் முஸ்லிம் சமுதாயத்தில் வாழும் ஒரு முஸ்லிமுக்கு இது கடமை என்றே கூறுகின்றன.

அதாவது, அல்லாஹ்வின் ஆட்சியை முதலில் ஏற்றுக் கொண்டு தம் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு சன் மார்க்கத்திலேயே தீர்வை தேடவேண்டும். எப்போதாவது சில நேரங்களில் சட்டத்துக்குப் புறம்பான செயல்கள் நடக்கும் போது, பாவசெயல்கள் பெருகும் போது அந்த சமுதாயத்தின் ஒரு அங்கமாக இருக்கும் ஒரு முஸ்லிம் அவற்றைக் கண்டு வாழாவிருக்க கூடாது. தவறை தட்டிக் கேட்க வேண்டும். நன்மையை ஏவி தீமையை விலக்க வேண்டும் என்கின்றனர்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்; அநியாயக்கார தலைவனிடத்தில் உண்மையை உரைப்பது சிறந்த அறப்போர்.

இந்த நபிமொழியைப் பாருங்கள்; இமாம் - தலைவர் என்ற வார்த்தை இடம்பெற்றுள்ளது. ஒருவரை இமாம் என்று எப்போது ஏற்போம்? அவர் அல்லாஹ்வின் ஆட்சியையே மக்கள் மீது நாம் செலுத்துவேன் என்று அவர் முதலில் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ்வின் சட்டத்தை மக்களிடம் செயல்படுத்துவேன் என்று பிரகடனம் செய்திருக்க வேண்டும். இப்படி பிரகடனம் செய்யாத ஒருவரை நாம் - முஸ்லிம்கள் இமாம் - தலைவர் என்று கருத மாட்டோம். ஏற்கமாட்டோம் ஏனென்றால் அல்லாஹ் இறக்கியருளியதன்படி தீர்ப்பு வழங்காதவர்களை இறைமறுப்பாளர்கள் (5:44) என்கிறான் அல்லாஹ்

எனவே அல்லாஹ்வின் சட்டங்களை தன்னுடைய சட்டங்களாக கொண்டிருக்காத ஜாஹிலிய்யா சமுதாயங்களில் உள்ள தீமையே மிகப்பெரிய தீமை. முதலில் அகற்றப்படவேண்டிய தீமை. இங்கிருந்து தான் எல்லாத் தீமைகளும் ஊற்றெடுக்கின்றன அல்லாஹ் வழங்கியுள்ள சட்டங்களை புறந்தள்ளுவதன் மூலம் இவை அல்லாஹ்வையே புறந்தள்ளி விட்டன. எனவே இது தான் எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர். இதிலிருந்து கிளைத்து வரும் கிளை பாவங்களை அகற்றிட பாடுபடுவதற்கு முன்னால் வேரை அகற்றுவதே முதல் கடமை.

தீமைகளுக்கெல்லாம் ஆணிவேராய் திகழ்கின்ற மனித சட்டங்களைக் கொண்ட அரசை அகற்றாமல் கிளை போன்ற பாவங்களுடன் மல்லுக்கு நிற்கின்றனர் சில நல்ல மனிதர்கள். இது பயனற்ற வேலை. வேரை அப்படியே விட்டுவிட்டு கிளைகளை வெட்டி கொண்டே போவதால் என்ன பயன் ஏற்பட்டுவிட முடியும்?

தான் வாழ்ந்திடத் தேவையான சட்டங்களை தானே வடித்துக் கொள்ள முடியும் என்கிறான் மனிதன். இதன் மூலம் அல்லாஹ்வின் மாண்புகள் தன்னிடம் இருப்பதாக சொல்லாமல் சொல்ல துணிந்துவிட்டான். இது முதலில் அகற்றப்படவேண்டிய தீமை அல்லவா! இதை விட்டுவிட்டு கிளை தீமைகளை நாம் அகற்ற புறப்பட்டால் மக்கள் செய்யும் செயல்களில் இது நற்செயல், எது தீய செயல் என்று தீர்மானமாகக் கூற முடியுமா?

இது தீய செயல் இதை செய்யாதீர்கள் என்று மக்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டுமானால், இது தீய செயல் தான் என்பதை எந்த துலாக்கோல் (தராசு) கொண்டு நாம் அளவிடுவது?

நீ ஒரு செயலை இது தீயது என்கிறாய். உடனே அங்கிருந்து இங்குமாக 10 பேர் வந்து இறுதியில் இது தீய செயல் அல்ல. இது ஏதுமற்ற உலகமாக இருந்த போது தீய செயலாக இருந்திருக்கலாம். இப்போது உலகம் வெகுவாக முன்னேறி கொண்டிருக்கின்றது. சமுதாயம் முற்போக்கு அடைந்து வருகின்றது. எனவே அதற்கேற்ப மாறிக் கொள்ள வேண்டும். என்று கூறுவார்கள். எனவே மனிதனின் செயல்கள் எல்லாம் நல்லவையா கெட்டவையா அவற்றில் நல்லவை கெட்டவை என்று தீர்மானிக்க ஒரு உறுதியான தராசு வேண்டும். நல்லவற்றையும் தீயவற்றையும் அளந்து பார்த்து விட ஒரு அளவுகோல் வேண்டும். அந்த அளவுகோலை எங்கிருந்து நாம் பெறுவது? யார் நமக்கு அவற்றை தருவது?

மனித விருப்பம், மனித ஆசை, மனிதர்களிடம் இருந்தா அதை பெற முடியும். அதுதான் ஒரே நிலையில் இருப்பதில்லை. நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருக்கிறது. இப்படி மாறிக் கொண்டே இருக்கும் மனித ஆசையின்படி நாம் தீர்மானித்தால் அது வழிகாட்டும் அறிவிப்பு பலகை ஏதுமில்லாத தீவுகளில் பயணிப்பது போல் ஆகும். மைல்கற்கள் ஏதுமில்லாத ஆர்டர் கூறுவது

போலாகும். எனவே முதன் முதலில் ஒரு துலாக்கோலை நிறுவ வேண்டும். அது நிலைகுலையாத உறுதியானதாக இருக்கவேண்டும். ஆசைகளுக்கு ஏற்ப ஆடும் தராசாக இருக்கக் கூடாது. அப்படி ஒரு உறுதியான தராசு உண்டென்றால் அது அல்லாஹ்வின் தராசை தவிர வேறு ஒன்று இல்லை.

அப்படியானால் அல்லாஹ்வின் ஆட்சியை அவன் தந்திருக்கும் ஷரி அத்தை தொடக்கத்திலேயே ஏற்றுக்கொள்ளாத ஜாஹிலிய்யா சமுதாயத்திடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும்? அல்லாஹ் உருவாக்க விரும்பும் ஒரு சமுதாயமாக மாறிடக் கோரி மக்களை அழைக்கும் ஒருவரை மக்கள் பரிகாசம் செய்தால், எள்ளி நகையாடினால், கேலி, கிண்டல் செய்தால் அம்மக்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? அவர்கள் அவர்களின் வாழ்வில் ஏற்படும் தவறுகளை சுட்டிகாட்ட புறப்பட்டால், அங்கே நின்று கிளை சீர்திருத்தங்களைச் செய்ய முயன்றால், அது வீண்வேலை அல்லவா? துலாக்கோல் சீராக இல்லாத போது நம் சமுதாயத்தில் கிளை சீர்திருத்தங்கள் ஒரு பயனையும் தரப்போவதில்லை. எனவே எது சட்டம்? எது ஆட்சி? எது இலட்சியப் பாதை? என்று முதலிலேயே முடிவு செய்துவிட வேண்டும்.

அல்லாஹ்வின் ஆட்சியை ஏற்றுக் கொள்வதும் அவன் உருவாக்க விரும்பும் சமுதாயமாக வாழ்வதுமே மாபெரும் நற்செயல். இதை ஏவுவதே முக்கியம். அல்லாஹ்வின் சன்மார்க்க சட்டங்களை புறந்தள்ளி, அதன் மூலம் அல்லாஹ்வையே புறந்தள்ளிவிடுகிறார்களே! அதுவே மாபெரும் தீமை. இந்த தீமையை அகற்றுவதே முதல் வேலை. இதுவே அஸ்திவாரம். அஸ்திவாரத்தை உறுதியாக அமைத்த பின்னரே கட்டிடம் எழுப்ப முடியும்.

எனவே நாம் எழுப்ப விரும்பும் சீர்திருத்தம் எனும் கட்டிடம் அஸ்திவாரத்தின் மீது நிற்கும் அந்த அஸ்திவாரத்தை அல்லாஹ்வின் ஆட்சியை எழுப்பிட, நாம் நம்முடைய மொத்த முயற்சிகளையும் கொட்ட வேண்டும். ஒருமுகமாக அனைவரும் இந்தப் பணியைச் செய்திட வேண்டும்.

சில நேரங்களில் மனிதன் பரிதாபத்திற்குரியவான கிவிடுகின்றான். நன்மையை ஏவி தீமையை தடுத்தல் என்ற பெயரில் கிளை சீர்திருத்தங்களில் ஏற்படும் சில நல்ல மனிதர்களை பார்த்து பிரமிப்பு அடைகின்றான். ஆஹா! என்ன அருமையான பணி என்கிறான்.

அதே நேரத்தில் முஸ்லிம் சமுதாயத்தின் வாழ்வுக்கும் கிளை சீர்திருத்தங்களுக்கும் அடிப்படையான முதன்மை பணியும் கேட்பாரற்று கைவிடப்பட்டு இருப்பதை எண்ணிப் பார்ப்பதில்லை. என்ன ஒரு பரிதாபம்! ஹராமான உணவை உண்ண கூடாது என்று கிளை சீர்திருத்தவாதிகள் கூறுகிறார்கள். அல்லாஹ்வின் சட்டங்களை தொடக்கத்திலேயே புறந்தள்ளிவிட்டு அதன் மூலம் அல்லாஹ்வையே புறந்தள்ளிவிட்டு தீய அரசு வட்டியின் அடிப்படையில் அமைந்த பொருளாதாரத்தையே கடைபிடிக்கிறது. அதற்கேற்பவே சமுதாய வாழ்வு அமைகிறது. பிறகு எப்படி ஹலாலான உணவு கிடைக்கும். அரசை தூக்கி எறியாமல் எப்படி ஹராமை தவிர்க்க முடியும்?

வன்புணர்வை தவிர மற்ற வகை விபச்சாரங்கள் எல்லாம் அனுமதிக்கப்பட்டவை என்று கூறும் ஒரு தீய அரசின் கீழ் வாழும் மக்களை விபச்சாரம் செய்யாதீர்கள் என்று தடுப்பது என்ன பயனைத் தந்து விடும்? சட்டம் அவனை வன்புணர்வு செய்தால் மட்டுமே தண்டிக்கும். இல்லை என்றால் தண்டிக்காது. எனும்போது விபச்சாரம் செய்யாமலா இருக்கப் போகிறான்?

பொது இடங்களில் போதையில் உலவக்கூடாது. வீட்டினுள் அலுவலகத்தினுள் குடிக்கலாம். போதை தெளியும் வரை அங்கேயே இருக்க வேண்டும் என்று சட்டம் வைத்திருக்கும் அஞ்ஞான அரசின் கீழ் வாழும் மக்களிடம் மது அருந்தாதீர் என்று தீமையை தடுக்கும் பிரச்சாரத்தால் என்ன மாற்றம் ஏற்பட்டுவிடும்? மது குடித்தவன் அல்லாஹ்வின் சட்டத்தின் கீழ் நம்மை அரசு கொண்டுவராது நம்மை தண்டிக்காது என்று தெரிந்தால் எப்படி குடிக்காமல் இருப்பான்?

எனவே தீய அரசை தூக்கி வீசாமல் மது எனும் தீமையை சமுதாயத்தில் இருந்து அப்புறப்படுத்த முடியுமா? அல்லாஹ்வை வணங்காத, அல்லாஹ்வின் ஆட்சியை ஏற்றுக் கொள்ளாத யாரையெல்லாமோ தெய்வங்களாக ஏற்றுக்கொள்கின்ற, வேறு எதையோ மார்க்கமாகவும், வழிமுறையாகவும், அளவு கோலாகவும் ஏற்று வாழுகின்ற ஒரு சமுதாயத்தில் இந்த சன்மார்க்கத்தை யாராவது ஒருவன் இழித்தும் பழித்தும் பேசினால் அதை எப்படி தடுக்க முடியும்?

திட்டுபவன் அல்லாஹ்வின் மார்க்கத்தை ஏற்காதவன் என்பது மட்டுமல்ல, திட்டுவதை தடுக்க வேண்டும் என்று நினைப்பவனும் அப்படித்தானே இருக்கின்றான். ஆம் இருவருமே அல்லாஹ்வின் ஷரியத் இருக்க வேண்டிய இடத்தில் வேறொரு சட்டம் இருப்பதை ஏற்றுக் கொண்டு தான் இருக்கின்றார்கள்.

எனவே தீய அரசை, ஷரியத்தை தன் வழியாக கடைபிடிக்காத அரசை தூக்கி எறியாமல் சன்மார்க்கம் சபிக்கப் படுவதை எப்படி தடுக்க முடியும்? இது போன்ற சூழல்களில் வெறும் கிளை சீர்திருத்தங்கள் மட்டுமே போதுமா? இதில் நம்முடைய பெரும் முயற்சிகளை அள்ளிக் கொட்டுகின்றனர் நல்ல மனிதர்கள். ஆனால் செய்ய வேண்டிய வேலையோ மிகப் பெரியது. ஆழமான.து விரிந்து பரந்தது.( நூல்: ஃபீழிலாலில் குர்ஆன், பாகம் - 6, பக்கங்கள் 949 - 951)

இன்ஷா அல்லாஹ்

தொடரும்




# ஏப்ரல் மாதம். டாக்டர் அம்பேத்கர் மாதம்

இது தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம், வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் ஆகியவற்றின் முடிவாகும். இந்த மாதம் முழுவதும் வருடந்தோறும், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையில் முழுமையாக கவனம் செலுத்தப்படும்.

இந்த வருடம் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் குறித்த நாம் வெளியிட்ட கவன ஈர்ப்பு கட்டுரையை இங்கே தருகின்றோம்.

அவர் ஒரு மாமேதை. பல்வேறு துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர். எடுத்த துறைகளில் எல்லாம் மிக உயர்ந்த நிலையை அடைந்தவர். அவர் தான் டாக்டர். பி.ஆர். அம்பேத்கர். ஆனால் அவர் தன்னை முழுமையாக தீண்டத்தகாத மக்களின் விடுதலைக்காக தந்திட வேண்டியதாயிற்று. அதனால் அவருடைய வட்டம் மிகவும் சுருங்கி போய்விட்டது. அவர் இந்தியாவின் ஆதிக்க சாதிக்கு எதிராக சமருக்கு இறுதி மூச்சு வரை, இருந்திட வேண்டியவரானார். உலக அரங்கில் மாபெரும் மேதையாக இருக்க வேண்டிய அவர் இந்த சுருங்கிய வட்டத்திற்குள்ளும், அவர் மேற்கொண்ட முயற்சிகளால் அவர் இன்று அகிலத்தில் அனைவரும் போற்றும் மாமேதை ஆனார்.

**மழலைப் பருவத்தில்**

தீண்டத்தகாதவர்கள் என ஆதிக்க சாதியினர் அவரையும் அவர் சார்ந்த சமுதாயத்தையும் ஒதுக்கினார்கள். கல்வியை மறுத்தார்கள். அத்தனை சிரமங்களையும், எதிர்ப்புகளையும் தாங்கிக் கொண்டு கல்வியைக் கற்றார் அறிவுத்துறையில் சிகரங்களை தொட்டார். லண்டன் மாநகரிலேயே அனைவரும் வியக்கும் அளவில் ஒரு தனிமனித நூல் நிலையத்தை அமைத்து இருந்தார். பொருளாதாரம், சட்டம் இவற்றை கற்றார். கரை கண்டார்.

**பொருளாதார மேதை**

ஒரு பொருளாதார ஆலோசனை தரும் மேதையான அம்பேத்கர் தயாரித்துத் தந்த பொருளாதார அறிக்கையின் அடிப்படையிலேயே இந்திய நாட்டின் தலைமை வங்கி, ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா நிறுவப்பட்டது.

**சட்ட மேதை**

சட்ட மேதை மட்டுமல்ல உலக அரங்கில் இருந்த அனைத்து சட்டங்களையும், அரசியலமைப்பு சட்டங்களையும் கற்றவர். ஆனால், தான் சார்ந்த சாதியினால் இந்திய அரசியலமைப்பு சட்ட அவைக்கு அவர் செல்ல முடியாத நிலை. அன்றைக்கும் ஜாதி ஆதிக்கத் திமிர் தலைக்கேறி நின்ற ஆதிக்கசாதியினர் அவருடைய அறிவையும், அறிவுசார்ந்த ஆற்றலையும் பார்க்கவில்லை. மாறாக அவர் சார்ந்த சாதியை மட்டுமே பார்த்தார்கள்.

**முஸ்லிம்கள்**

ஆனால் நாட்டின் நலனையும், மனிதர்கள் அனைவரும் பிறப்பால் சமம். அதனால் சகோதரர்கள் என்ற கொள்கைகளை கொண்ட முஸ்லிம்கள் அவரை அரசியல் சாசன சபைக்கு அனுப்பியே தீர வேண்டும். அவருடைய அறிவுத் திறமையால் இந்த நாடு பலனடைய வேண்டும் என முடிவுசெய்தார்கள். அதில் உறுதியாக இருந்தார்கள். அவரை முஸ்லிம்கள் முஸ்லிம் லீக் பெற்றிருந்த பலத்தைப் பயன்படுத்தி அரசியலமைப்பு சபைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பயனாய் உலகம் போற்றும் அரசியலமைப்பு சட்டம் ஒன்று நம் நாட்டிற்கும், ஒரு எடுத்துக்காட்டான அரசியல் சாசனம் என உலகத்திற்கும் கிடைத்தது.

அன்று அண்ணல் அம்பேத்கரின் அனைத்து முயற்சிகளையும் முறியடித்துவிட முழுமூச்சில் முயன்றவர்கள் கூட இன்று அவரை தூக்கி பிடித்திட வேண்டிய கட்டாய நிலைக்கு வந்து விட்டார்கள்.

அத்தனை கீர்த்தியும், கிதாபும் இருந்தும் அவர் தன் சொந்த மக்களின் விடுதலையை மறந்துவிடவில்லை. விட்டுக்கொடுக்காமல் விலை போகாமல் போராடினார்,

அறிவுத்தளத்தில் அவரை அஞ்சிய சனாதனவாதிகள் பிரிட்டனின் தலைநகரில் நடந்த வட்டமேசை மாநாட்டில் அவரையும் அவர் முன்வைத்த கோரிக்கையையும் வழிமறித்தார்கள். ஆனால் முஸ்லிம்கள் அங்கேயும் அவருக்கு துணை நின்றார்கள். வென்று காட்டினார். முஸ்லிம்களுக்கு நன்றி சொன்னார் டாக்டர் அம்பேத்கர் இப்படி;

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சொன்னார்கள்;

“காந்தி முஸ்லிம்களை அணுகி அவர்களை தீண்டத்தகாத மக்களுக்கு எதிராக திருப்பிவிடுவதில் சற்றும் தயங்கவில்லை. இதற்கு கைமாறாக முஸ்லிம்கள் வைத்த 14 கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டார். இந்தக் கோரிக்கைகள் காங்கிரஸ் கட்சியும், இந்து மகாசபையும் ஏன் Simon கமிஷனும் நிராகரித்தவை. முஸ்லிம்களின் உதவியால் காந்தியின் எல்லா தகிடுதத்தங்களும் மண்ணிலே விழுந்தன. காரணம் முஸ்லிம்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான காந்தியின் கோரிக்கையை ஏற்க மறுத்தனர். காந்தியோடு கூட்டு சேர்ந்து தங்களை இழிவுப்படுத்திடவில்லை.”

He (Gandhi) didn't hesitate to approach the Musalmans and turn them against the untouchables by accepting their 14 points which the Congress the Hindu mahasabha and even Simon commission has rejected, even Mr. Gandhi was prepared to flout public opinion and public morality this diabolical plot of Gandhi fell through, because the Musalmans refused to disgrace themselves by joining it.

Source: Dr. B. R. Ambedkar: Poona pact Bheem Patrika publications. Jalandhar, Punjab 1973 pp 38-41

“வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்ட முஸ்லிம் பிரதிநிதிகளின் பெருமைக்காக ஒன்றை சொல்லிட வேண்டும். காந்திஜியின் அந்த கருப்பு நடவடிக்கையில் தாங்களும் துணை நிற்க மறுத்துவிட்டார்கள். இதன் மூலம் காந்தி முகமதியர்கள், ஆகியோரின் கூட்டால் ஒடுக்கப்பட்ட மக்களின் மீது விழவிருந்த பேராபத்தில் இருந்து அவர்களை காப்பாற்றி விட்டார்கள்”

It must be said to the credit of Muslim delegates that they refused to be a party to such a black act and saved the depressed classes. from what might as well has developed into calamity for them as a result of the combined opposition of the Muhammadens and Mr. Gandhi (What Congress and Gandhi have done to untouchables, Thacker & co. Bombay 1945 pp 295, appendix No.04

அதேபோல் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தொடங்கிய கல்வித் திட்டத்திற்கு இடம், நிதி ஆகியவற்றை ஹைதராபாத் நிஜாம் அவர்கள் வழங்கினார்கள். இதர உதவிகளையும் செய்தார்கள். இறுதியாக சமூக விடுதலைக்கு மதமாற்றமே தீர்வு என்ற முடிவுக்கு வந்தார். காலம் முழுவதும் இஸ்லாத்தை பரிந்துரைத்தார். இஸ்லாமே தீர்வு என்றார். ஆனால் இறுதியில் பௌத்தத்தை தேர்ந்தெடுத்திருந்தார். ஆதிக்கவாதிகள் பௌத்தத்தை இந்த மண்ணில் இருந்து விரட்டி விட்டார்கள். அவரை பின்பற்றிய பலர் இந்தியாவில் இஸ்லாத்தை ஏற்று பூரண விடுதலை அடைந்தனர்.

Who Made Indian Muslims Communal -
V.T.Rajasehar

(மேலும் பார்க்க அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? வேர்கள் வெளியீட்டகம்.)

இவண்

**நீதிக் அமைதிக்கான மக்கள் இயக்கம்**

**DARUL ISLAM FOUNDATION TRUSt**

# சிலுவைப் போர் 2.0

## CRUSADE 2.0 BY JOHN FEFFER






தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,

இன்றைய நாள்களில் மேலை நாட்டவர்கள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார்கள். இந்தப் போரை அவர்கள் சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் முஸ்லிம்கள் மேல் தொடரும் இரண்டாவது சிலுவைப் போர் என்கின்றார்கள். சிலுவைப் போர்கள் என்றாலே அது முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர் என்று பொருள். இப்போது நடப்பது இரண்டாவது சிலுவைப் போர் என்றால் முதல் சிலுவைப் போர் எப்போது தொடங்கியது? எப்போது முடிந்தது?

முதல் சிலுவைப் போர் 1095இல் தொடங்கி 1274இல் முடிந்தது. அவை 9 போர்களாக நடந்தன. அவற்றை சிலுவைப்போர் 1.0 என்று கிருஸ்தவ உலகம் அழைக்கின்றது. சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது சிலுவைப்போர் 1991இல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதனை முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். இந்த சிலுவைப் போர் 2.0வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஜான் பெஃபர் என்பவர் ஒரு நூலாகத் தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM அதாவது சிலுவைப் போர் 2.0 மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்.

இந்த நூலின் தமிழ் வடிவமே இந்தத் தொடர். முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகள், இஸ்லாம், இவற்றின் மேல் இன்றைய நாட்களில் நடக்கும் தாக்குதல்களைப் புரிந்திட இந்தத் தொடரைப் படியுங்கள். இது தொடரல்ல. பயன் பயக்கும் பாடம். வரலாற்றுத் தொகுப்பு.

இந்தத் தொடரைத் தொடங்கும் போதே உலக நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள இந்தத் தொடர் மிகவும் வசதியாக இருக்கும் எனக் குறிப்பிட்டிருந்தோம். நியூசிலாந்து தாக்குதலைப் புரிந்திட அதன் காரண காரியங்களைத் தெரிந்திட இந்தத் தொடர் பெரிதும் உதவியது. என வாசகர்கள் பலர் குறிப்பிட்டார்கள்.

தொடரை வாசிக்காமல் விட்டவர்கள் முந்தைய தொடர்களை உண்மை நகல் எடுத்துப் படித்தார்கள். இந்நிலையில் இலங்கையில் தொடர் குண்டு வெடிப்புகள் பல உயிர்களைப் பழிவாங்கி இருக்கின்றன. எல்லோர் நெஞ்சையும் உலுக்கிக் கொண்டிருக்கின்றது. சற்றும் ஜீரணிக்க முடியாத ஒரு செயல். கண்டனங்களை விடச் செய்தவர்கள் தண்டிக்கப்பட்டே ஆக வேண்டும்.

இதனை செய்தவர்கள் மன்னிக்கப்படவே கூடாது. ஆனால் இந்த இழி செயலை செய்தவர்கள் பக்கம் விசாரணை செல்லவே செல்லாது. விசாரணை வழக்குத் தண்டனையெல்லாம் முஸ்லிம்களைச் சுற்றியே வரும். கடைசியில் கூட்டு மனசாட்சியைத் திருப்திப்படுத்த என மனசாட்சியே இல்லாத தீர்ப்பொன்று வழங்கப்படும். ஒன்றோ இரண்டொ அப்பாவி முஸ்லிம்கள் தூக்கிலிடப்படுவார்கள்.


ஆனால் நமது தொடர் நிச்சயமாக மக்களுக்கு உலக நடப்பின் பின்னணிகளை விளக்கிச் சொல்லுகின்றது. இப்போது ஜான் பெஃபர் முஸ்லிம்கள் மேல் வெறுப்பை வளர்க்க என்னென்னவற்றைச் செய்தார்கள் என்பதை விளக்கக் கேட்போம்.

*நாங்கள் எங்கள் மழலைகளின் மனதில் இப்படி பதிய வைப்போம்;*

*“முஸ்லிம்கள் ரத்தத் தாகம் உள்ளவர்கள். அவர்கள் கீழறுப்பு வேலைகளில் ஈடுபடுபவர்கள். அவர்கள் சார்லி மாக்னியின் ஆட்சியில் ஒரு பெரும் துரோகத் தாக்குதலை நடத்தினார்கள்.*

*அந்தத் தாக்குதலில் சார்லி மாக்னியின் ஒவ்வொரு படை வீரனையும் கொலை செய்தார்கள்.*

*இப்படி, முஸ்லிம்களால் கொலை செய்யப்பட்ட சார்லி மாக்னியின் படை*




*வீரர்கள், 20,000 பேர். இந்தத் தாக்குதல் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஸ்பெயின் நாட்டின் மலைப் பகுதிகளில் நடந்தது. புனித ரோமப் பேரரசரின் ஆதிக்கத்தின் கீழிருந்த அழகும், வீரமும் மிகுந்த வீரர்களை வெட்டிப் போட்டார்கள். இதில் புனித மிகு ரோமப் பேரரசரின் மைத்துணர் ரோலேண்ட் - Roland கொலை செய்யப்பட்டார்.”*

இந்த வரிகளை சிறந்த பாடல்களாக மாற்றினோம். குழந்தைகள் இந்தப் பாடல்களை அவசியம் மனனம் செய்தாக வேண்டும்.

பாடல்களை இப்படி முடித்தோம்.

*சார்லி மேக்னியன் இதற்குப் பழி தீர்த்தான். மொத்த முஸ்லிம் படைகளையும் வென்று, இந்தப் பாடல் இன்றளவும் முஸ்லிம்களாய் பழி தீர்க்க வேண்டும். என்ற எண்ணத்தை கிருஸ்தவ பிஞ்சு நெஞ்சங்களில் ஊட்டிக் கொண்டே இருந்தது. அந்த மழலைகள் வளர, வளர பழி தீர்க்க வேண்டும் என்ற எண்ணமும், எக்கமும் வளர்ந்து கொண்டே இருந்தன.*

இந்தப் பாட்டுக்கு Song of Roland எனப் பெயர். அதாவது ரோலாண்ட்டின் பாடல்கள்

என்று பெயர். இது எட்டாம் நூற்றாண்டில் நடந்த போர் பற்றி 11ஆம் நூற்றாண்டில் பாடிய பாட்டு இதை Dorothy Sayers - டோரோத்தி சேயர்ஸ் என்பவர்தான் மொழி பெயர்த்தார். இந்தப் பாடலை ஒரு முரட்டுப் பின்னணியுடன் மாணவர் களுக்குப் பாடமாகச் சொல்லிக் கொண்டிருந்தோம்.

இதனை மொழிபெயர்த்த டோரோத்தி சேயர் என்பவர் இதை ஒரு கீர்த்திமிக்க நாடகத்தின் புகழ்மிக்க சித்தரிப்பு என்றே குறிப்பிட்டார். Master Piece of Epic Drama.

முஸ்லிம்கள் முரடர்கள் அவர்கள் பழி வாங்கப்பட வேண்டியவர்கள். என்ற பீதியையும் நமது கலாச்சாரத்தை அழிக்க வந்தவர்கள் என்ற எண்ணத்தையும் மனதிலே ஏந்திக் கொண்டுதான் மாணவர்கள் முதல் சிலுவைப் போர்கள் பற்றி கற்றிடத் தொடங்கினார்கள். சிலுவைப் போர்கள் பற்றியப் பாடங்களுக்கு இந்த Songs of Roland - ரோலாண்டின் பாடல்கள் தாம் முன்னுரை.

இந்தப் பாடல்கள் அவற்றுக்குப் பின்னால் புனையப்படும் வரலாறுகள். இவைதாம் பல தலைமுறைகளாக யூதர்களின் பள்ளிக் கூடங்களிலும், கிருஸ்தவர்களின் பள்ளிக் கூடங்களிலும் மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டு வந்தன. இந்தப் பாடங்கள் முஸ்லிம்களை இப்படிச் சிந்தரித்தன.

> “To view Muslims as perfidious enemies who who won threatened the very foundation of Western civilization”
>
> அதாவது;
>
> “மாணவர்கள் முஸ்லிம்களை எப்படிப் பார்த்திட வேண்டும் என்றால் அவர்கள் முஸ்லிம்கள் மன்னிக்க முடியாத எதிரிகள், அவர்கள் ஒருகாலக் கட்டத்தில் மேலை நாட்டவர்களின் நாகரிகத்தின் அடிப்படையையே அச்சுறுத்தியர்கள்.” (P.27)

இதில் மிகப்பெரிய உண்மை என்னவெனில் இவை அனைத்தும் பொய்கள் புனைந்துரைகள், காவியங்கள், கவிதைகள், இலக்கியங்கள் என்றெல்லாம் படித்துத் தரப்பட்ட அனைத்தும் கற்பனைகளின் மேல் கட்டப்பட்டவை.

ரோலண்டையும், அவருடைய Franklish - பிராங்கிலிஷ் படைகளையும் தாக்கியவர்கள் முஸ்லிம்களே அல்ல. கி.பி. 778இல் ரோலண்டையும் அவனுடைய கிருஸ்தவப்படைகளையும் தாக்கியவர்கள் Christian Basques - கிருஸ்தவ படைகள் இந்தக் கிருஸ்தவ படைகள் ரோலண்டையும், அவருடைய படைகளையும் தாக்கியதற்கான காரணம் அவருடைய மைத்துனரைச் சார்லி மாக்னி அவருக்கு சொந்தமான பான்போளானா என்ற நகரத்தைச் சூரையாடியது தான்.

இந்தச் சண்டைகள் பின்னர் பெரும் போர்கள் எனச் சித்தரிக்கப்பட்டவை. அவர்களுக்கிடையே பன்னெடுங்காலமாக நடந்து வந்த வாரிசுச் சண்டைகளின் ஒரு பகுதி இவையெல்லாம் ஸ்பெயின் நாட்டின் இடைக்கால வரலாற்று சம்பவங்கள் அவற்றிற்கும் முஸ்லிம்களுக்கும் எந்தச் சம்மந்தமுமில்லை.

அன்றைய நாட்களில் பிராங்க்ஸ் - பரங்கியர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஐபீரியால் போர் நடந்தன. அவற்றிற்கும் சார்லி மேக்னிக்கும் சம்மந்தமில்லை. அந்தப் போர்கள் ஜிஹாதோ, புனிதப் போர்களோ அல்ல.

உண்மையைச் சொன்னால் சார்லி மோக்னி முஸ்லிம்களோடும் குறிப்பாக பாக்தாத்திலிருந்த முஸ்லிம் (கலீபா) ஆட்சியாளரோடும் நல்ல உறவுகளைக் கொண்டிருந்தார்.(P.28)

ரோலண்ட் பாடல்கள் கிருஸ்தவ படைகள் தங்களுக்குள் மோதிக் கொண்ட வரலாற்றை அப்படியே மறைந்து விட்டன. முஸ்லிம்களை வில்லன்களாகக் கட்டின. தலைமுறை, தலைமுறையாக வெறுப்புகளை வளர்த்தன.

பிற்றை நாட்களில் அதாவது 11ஆம் நூற்றாண்டில், (கிருஸ்தவ) மன்னர்கள், போப்பாண்டவர்கள், விவசாயிகள், “Knights” (எ) குதிரை வீரர்கள் இவர்களையெல்லாம் சிலுவைப் போருக்குள் பிடித்துத் தள்ளிட இந்த வரலாற்று பாடல்கள் பெரிய அளவில் பயன்பட்டன.சிலுவைப் போருக்கு ஆட்களைத் திரட்டிட இந்த வரலாறுகள் இன்னும் அதிக உக்கிரத்தோடு வளைக்கப்பட்டன. பாடல்கள் மெருகூட்டப்பட்டன. இதனால் முஸ்லிம்கள் மீது பயங்கர வெறுப்போடு ஓர் இனம் புரியாத வெறுப்போடு மக்கள் சிலுவைப் போருக்குத் தயாரானார்கள்.

இன்ஷா அல்லாஹ் ஜான் பெஃபர் சொன்னவை தொடரும்.

**இதில் வாசகர்கள் கவனிக்க வேண்டிய குறிப்புகள்**

ரோலண்ட் பாடல்கள், "Songs of Rosland" சின்னஞ்சிறு குழந்தைகளின் பிஞ்சி நெஞ்சங்களில் முஸ்லிம்கள் மேல் வெறுப்பை வளர்க்க பெரிதாகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்த வெறுப்பை வளர்க்கும் பாடங்கள் இன்றும் நடத்தப்படுகின்றன. இனிவரும் நாட்களிலும் நடத்தப்படும். இவை யெல்லாம் பொய். என்பதை நிரூபிக்கும் இலக்கியங்கள் ஆதாரங்கள் இவை அனைத்து மக்களையும் சென்றடைந்திட வேண்டும். ஐரோப்பாவில் வாழும் முஸ்லிம்களும் அமெரிக்காவில் வாழும் முஸ்லிம்களும் இதனை திறம்பட செய்து கொண்டிருக் கின்றார்கள்.

ரோலண்ட் பாடல்கள் இன்னும் பிரபல்யமானவை. நியூசிலாந்து மஸ்ஜித்களில் துப்பாக்கி சூடு நடத்தியவன் இந்தப் பாடல்களையும் இன்னும் இதுபோன்ற பாடல்களையும் எப்போதும் கேட்பேன் என்று அவன் தனது "Manifesto" அறிக்கையில் குறிப்பிட்டிருந்தான்.

கரன் ஆம்ஸ்ட்ராங் என்ற உலகப் புகழ்பெற்ற எழுத்தாளரை "வைகறை" வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி இருக்கின்றோம். அவர் எழுதி, ஆங்கில உலகில் பரபரப்பை ஏற்படுத்திய நூல் Muhammed The Prophet for our Times முஹம்மத் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி என்ற நூலை வைகறை வெளிச்சம் பத்திரிகையில் தொடராக வெளியிட்டோம்.(இன்ஷா அல்லாஹ் விரைவில் வெளிவரும்)

இந்த நூலையும் அது ஏற்படுத்திய தாக்கத்தையும் நமது இந்து பத்திரிகை வெளியிட்டிருந்தது. இந்த நூல் ஆங்கில உலகில் ஏற்படுத்திய தாக்கத்தை இப்படிக் குறிப்பிட்டிருந்தது நமது இந்து ஆங்கில நாளேடு.

1. Now Mosques are not factories of Jidad.
2. Now Quran is not a book of Terrorism.
3. Islamic Identity. Like Beard and cap are not the Identity of Terrorists.

அதாவது;

1. **பள்ளிவாசல்கள் தீவிரவாதிகளை உருவாக்கும் ஆலைகள் அல்ல.**
2. **திருக்குர்ஆன் தீவிரவாதத்தைப் போதிக்கும் நூல் அல்ல.**
3. **தாடியும், தொப்பியும் தீவிரவாதத்தின் அடையாளமல்ல.**

கரன் ஆம்ஸ்டராங் அவர்களும், சிலுவைப் போர் பற்றி ஒரு நூலை எழுதி இருக்கின்றார். அதில் எனது பள்ளிப் பாடங்களிலும், முஸ்லிம்களை வெறுக்கவே கற்றுத் தந்தார்கள். இதற்கு சிலுவைப் போர் வரலாற்றையே அதிகமாகப் பயன்படுத்தினார்கள். பின்னர் நான் சிலுவைப் போர் நடந்த இடங்களுக்கு சென்றேன். அப்போதுதான் எனக்கு என் பள்ளிப் பருவத்தில் கற்றுத் தந்தவை எல்லாம் பொய் என்பது புலப்பட்டது. என்கின்றார்.

(Source: The Holy Wars - By Keran Armstrong)

**- MGM**


வைகறை வெளிச்சம் வாசகர்கள் தங்களது சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

போன்: 8148129887



# திருச்செந்தூர் திருமுருகன் கோயிலும் காயல் மாநகரமும்



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
குளச்சல்

12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சரித்திர ஆசிரியர் மார்க்கோபோலோ கி.பி.1289 - 1293இல் இருமுறை பாண்டிய நாடு வந்துள்ளார். காயல் மாநகரின் சிறப்பையும் பாண்டிய ஆட்சியின் மகிமையையும் தான் எழுதிய வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஓர் வரலாற்று ஆசிரியர் குறிப்புப்படி ஹல்லாஜிபினு யூசுப் ஆட்சியில் நபி குடும்பத்தாரும் ஏனைய அரேபிய குடும்பத்தாரும் கப்பல் மூலம் கடலில் பிரயாணம் செய்து இந்தியாவில் கேரளப்பகுதியிலும் ஏனைய கடல் பிரதேசங்களிலும் குடியேறினர் என்பது வரலாறு.

கி.பி.1280இல் எகிப்து நாட்டிலிருந்து அரபு முஸ்லிம்கள் காயல்பட்டிணம் கரையில் வந்து இறங்கினர். நபிகள் நாயகத்தின் வம்சாவழியைச் சார்ந்த செய்யிது ஜமாலுத்தீன் இக்குழுவின் தலைவர் இந்நேரம் மதுரையை சுந்தரபாண்டிய தேவர் சீரோடு ஆட்சி செய்து வந்தார். இவர் புதிதாக குடியேறிய அரபு முஸ்லிம்களை உபசரித்து பல்வேறு வசதிகளும் செய்து கொடுத்தார். பாண்டிய நாடு உலக நாடுகளோடு வர்த்தக தொடர்பு கொண்டிருந்தது. பேரறிஞராகவும் பெரும் வணிகருமான செய்யிது ஜமாலுத்தீனை பாண்டிய மன்னன் சீனாவுக்கு அனுப்பி வைத்தார். இவர் தம்பி செய்யிது தகியுத்தீனை தமது முதலமைச்சராக்கினார்.

மன்னர் சுந்தரபாண்டியதேவர் காலமானதும் (1293இல்) மக்களின் ஆதரவை பெற்ற செய்யிது ஜமாலுத்தீன், தேவர் இனமக்கள் ஆசியோடு மன்னராக தேர்வு செய்யப்பட்டார். அக்காலத்தில் பாரசீகத்தில் ஸிறாஸ் நகரில் உலகப் பாதுகாப்பு சபை இருந்தது. அதி பாண்டியன் நாடு அங்கம் வகித்துள்ளது. கி.பி. 1303இல் பாண்டியன் நாட்டின் சார்பாக சென்ற செய்யிது

சுல்தானை அம்மன்றம் தலைவராக தேர்வு செய்தது. அவர் காலமாகி கி.பி. 1306இல் பாரசீகத்தில் ஸிறாஸில் அடக்கமாகியுள்ள விபரம் சர்.எச்.எம். எலியட் தமது இந்தியாவின் வரலாறு (History of India)வில் குறிப்பிடுகிறார். மேலும் பல வரலாற்றுக்கும் சொந்தமானவூர் காயல்பட்டிணம். உலக வர்த்தக சபையில் பாண்டிய மன்னனின் சார்பாக அன்றே ஒரு தமிழன் அதிலும் முஸ்லிமை தலைமை தாங்க செய்த பெருமையும் பாண்டிய மன்னர்களைச் சாரும்.

போர்த்துகிசியர் வியாபார நோக்கோடு தமிழ் நாட்டிற்கு வந்து வர்த்தக நிறுவனங்களை நிறுவினர். அவர்களை தொடர்ந்து டச்சுக்காரர்களும் இதே நோக்கோடு வந்து பண்டகசாலைகளை ஆங்காங்கே நிறுவினர். மேலும் இருவரும் முறையே கத்தோலிக்க புரோட்டஸ்டன்ட் எனும் (கிருஸ்தவ) இரு பிரிவை சார்ந்தவர்கள்.

கி.பி. 1645இல் டச்சுக்காரர்கள் காயல் பட்டிணத்தில் வந்து கிட்டங்கிகளை அமைத்தனர். போர்த்துக்கீசியர் தூண்டுதலால் திருமலை நாயக்கர் டச்சுக்காரர்களை காயல் பட்டிணத்திலிருந்து வெளியேற்றினர். இதனால் டச்சுக்காரர் கி.பி.1648இல் இலங்கைக்கு ஓடினர். கி.பி. 1649 பிப்ரவரியில் 436 டச்சுக் கார்களும் 180 சிங்களவர்களும் மணப்பாட்டில் வந்து இறங்கி அங்கிருந்து பாண்டியன் பட்டிணம் வந்து வீரபாண்டிய பட்டிணத்திற்கும் திருச்செந்தூருக்குமிடையே தங்கினர். நாயக்க மன்னர் சார்பாக காயல் முஸ்லிம் பிரமுகர்கள் வந்து திருச்செந்தூர் கோவில் முற்றுகையை கைவிட வேண்டினர்.

கி.பி.1649இல் டச்சுக்காரர் 436 பேர் சிங்களவர் 180 பேரும் மணப்பாட்டின் எதிரில் வந்து வீரபாண்டிய பட்டிணத்திற்கும் திருச்செந்தூருக்கும் இடையே தங்கினர். மன்னர் சார்பாக காயல் மாநகர பிரமுகர்கள் இக்கோயிலை விட்டு விலக டச்சுக்கார்களையும் சிங்களவரையும் வேண்டினர்.

டச்சுக்காரர்களும், சிங்களவரும் மறுக்கவே ஊர்மக்களும் நாயக்க மன்னர் படையும், 4 யானை, 60 குதிரைகள், 500 படையோடு அவர்களை எதிர்த்து போர் செய்தனர். இதில் நாயக்கர் பட்டாளத்தில் 300 பேர் இறப்பெய்தினர். நஷ்ட ஈடு தந்தால் திருச்செந்தூர் கோவிலை ஒரு பங்கமுமின்றி ஒப்படைப்பதாக டச்சுக்காரர் சொன்னார்கள்.

டச்சு கவர்னர் புறப்படும் போது மூலவிக்கிறஹம் உட்பட ஏனைய விக்கிரகங்களை நஷ்ட ஈட்டிற்கு பகரமாகத் தம்முடன் எடுத்துச் சென்றனர். இதனால் கி.பி.1649ஆம் ஆண்டிலிருந்து 1651ஆம் ஆண்டு வரை திருச்செந்தூர் கோவிலில் நாடோறும் நடைபெறும் வழிபாடும் திருவிழாக்களும் நடைபெறவில்லை.

கி.பி. 1050 பிப்ரவரி மாதம் வடமலையப்ப பிள்ளையன் டச்சுக்காரர்களிடமிருந்து விக்கிரகங்களைத் திரும்ப கொண்டு வர காயல் பட்டிணத்து நாலு பிரமுகர்களை இலங்கையிலுள்ள காலிக்கு அனுப்ப காயல் பட்டிண அதிகாரியை வேண்டினான். கி.பி, 1651இல் ஜனவரி கடைசியில் இவ்விக்கிரஹம் காயல் முஸ்லிம்கள் உடன் வர கி.பி.1653இல் கும்பாபிசேகம் நடத்தப்பட்டது. ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன் திருவாவடுதுறை ஆதினம் தேசிக மூர்த்தி சுவாமிகள் கோபுரம் கட்டினார்.

கோபுரம் ஆறாம் நிலை வந்த போது காயல்பட்டிணம் வள்ளல் சீதக்காதியிடம் சென்று உதவி கேட்க கோவில் பணியானை முருகன் வேண்டியதாகவும் ஆறாம் நிலை கட்டுவதற்கு வள்ளல் சீதக்காதி பணம் கொடுத்து உதவியதாக வரலாறு சொல்கிறது.

காயல்பட்டிணம் தேர்வு நிலை பேரூராட்சி நூற்றாண்டு மலரிலிருந்து குறிப்பு எடுத்து எழுதிய இக்கட்டுரை, காயல்பட்டிண வரலாற்றையும் இஸ்லாத்தின் பழமையையும், திருச்செந்தூர் கோவிலுக்கும் காயல் முஸ்லிம்களுக்கும் இருந்த தொடர்பையும் விளக்குகிறது. பாண்டிய மன்னர் அவையில் முஸ்லிமை அமைச்சராக்கி பாரசீகத்தில் செயல்பட்ட பாதுகாப்பு சபைக்கு கி.பி. 1303இல் செய்யிது சுல்தான் தலைவராக செயல்பட பாண்டிய மன்னன் தேர்வு செய்து அனுப்பிய நிகழ்வுகள் குறுகிய மனம் படைத்தோர் பார்க்க வேண்டிய செய்தியாகும்.

ஆதாரம்: பேராசிரியர் Dr.ந.கல்யாண சுந்தரம் M.A.,B.T.,ph.D

ஆய்வு நூல்: திருச்செந்தூர் கோவில் வரலாறு.

திரு.மிகு. க.சு. நீலகண்ட சாஸ்திரி கலைமகள் கட்டுரை.

# ரமழானே வருக!!

பெருமானார்(ஸல்) அவர்கள் ரமழான் மாதத்திற்கு முந்தைய ஷஃபான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையில், ரமழானை வரவேற்று ஆற்றிய உரை.

மக்களே உங்களுக்கு எதிரே அருளை அள்ளி வழங்கிடும் ஒரு மாதம் வருகின்றது. அது அருளின் மாதம். கருணையின் மாதம். பாவமன்னிப்பை வழங்கிடும் மாதம். எல்லா மாதங்களிலும் அல்லாஹ்விடம் சிறந்த மாதம். அதன் நாட்கள் ஏனைய எல்லா நாட்களையும் விட சிறந்த நாட்கள். அதன் இரவுகள் இரவுகளில் எல்லாம் சிறந்த இரவுகள். அதன் மணித்துளிகள் மணித்துளிகளில் எல்லாம் சிறந்த மணித்துளிகள்.

அது அல்லாஹ்வின் விருந்தினராக ஆகிட உங்களை அழைக்கும் மாதம். அது அல்லாஹ்வுடன் நெருங்கி இருப்பவர்களோடு நீங்களும் இருக்க உங்களை அழைக்கும் மாதம். நீங்கள் விடும் ஒவ்வொரு மூச்சும் அல்லாஹ்வின் புகழைப் பாடுகின்றன. உங்களுடைய தூக்கம் ஒரு வணக்கம். உங்களுடைய செயல்பாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. உங்களுடைய வேண்டுதல்களுக்கு பதிலளிக்கப்படுகிறது. ஆகவே உங்கள் அல்லாஹ்விடம் ஆரோக்கியமான உடலை தரும் படி கேளுங்கள். உங்கள் இதயத்தை விசாலமாக்கி தரும்படி கேளுங்கள். இதன்வழி நீங்கள் நோன்பு நோற்கும் தினத்தில் ஆரோக்கியத்தையும் அவனுடைய அருள்மறையை ஓதும் ஆரோக்கியத்தையும் கேளுங்கள். பெறுங்கள்.

“கிஃப்ர் என்ற ஆணவம் புகுந்த மனதில் தக்வா என்ற அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் நிச்சயமாக இருக்காது. அங்கே ஷைத்தான் புகுந்து அதில் ஆட்சி செய்வான். இதற்கு இடம் தராமல் தக்வாவை பெருக்குவோம். அதற்கு இந்த நோன்புகளை முழுமையாக பயன்படுத்துவோம்.”

இந்த மாண்புமிகு மாதத்தில் பாவ மன்னிப்பை பெற முடியாதவர்கள் சோகத்திற்கு சொந்தக்காரர்கள். அந்த நியாயத் தீர்ப்பு நாளின் பசியையும், தாகத்தையும் நோன்பு காலத்தின் பசியோடும், தாகத்தோடும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஏழைகளுக்கு வாரி வழங்குங்கள். முதியவர்களை கண்ணியப்படுத்துங்கள். இளையவர்களிடம் இரக்கம் காட்டுங்கள். உங்களிடம் நல்ல உறவை வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் நாவைப் பேணுங்கள். பார்த்திட அனுமதிக்காத வற்றிலிருந்து உங்கள் பார்வையை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

கேட்கக் கூடாது என விலக்கப்பட்டவற்றிலிருந்து காதுகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள். அனாதைகள் மீது அன்பு காட்டுங்கள். அதனால் உங்கள் அனாதைகள் மேல் அன்பு காட்டப்படும். அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேளுங்கள். அதற்காக அல்லாஹ்விடம் உங்கள் கைகளை இந்த நேரங்களில் உயர்த்துங்கள். ஏனெனில் இவை தாம் நேரங்களில் எல்லாம் சிறந்தது. அல்லாஹ் தன் படைப்புகளை இந்த மாதத்தில்

கருணையோடு பார்க்கின்றான். கேட்பதற்கு பதில் சொல்லுகின்றான். அவர்கள் அவனிடம் கேட்பவற்றையெல்லாம் கொடுக்கின்றான்.

மக்களே உங்கள் ஆத்மாக்கள் உங்கள் செயல்களை சார்ந்தே இருக்கின்றன. ஆத்மாக்களை பாவமன்னிப்பு கொண்டு விடுதலை செய்யுங்கள். அவற்றின் அழுத்தங்களை பாரங்களை நீண்ட நேரம் சஜ்தா செய்வதன் மூலம் எளிதாக்குங்கள். இதை உங்கள் நினைவில் நிறுத்துங்கள். அல்லாஹ் தன் ஆளுமையை கொண்டு உறுதி அளிக்கின்றான்.

தொழுபவர், நீண்ட நேரம் சஜ்தா செய்பவர், இவர்களுக்கு இந்த பிரபஞ்சத்தின் அதிபதியின் முன் அவர்கள் நின்றிடும் போது எந்த தண்டனையும் இல்லை எந்த பயமும் இல்லை.

மக்களே இந்த மாதத்தில் நோன்பு நோற்கும் ஒரு மனிதனுக்கு நோன்பு துறக்க விருந்து தரும் ஒருவர், ஒருவரை விடுதலை செய்தவராவார். அவருடைய கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிடும்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த சிலர் பெருமானார்(ஸல்) அவர்களிடம் சொன்னார்கள்.

எங்களில் எல்லோருக்கும் நோன்பாளிகளை அழைத்து விருந்து வைக்கும் அளவுக்கு வசதி இல்லையே!

இதற்குப் பெருமானார்(ஸல்) அவர்கள்;

நீங்கள் நோன்பு துறக்க வைக்கும் விருந்து ஒரு மொனறு தண்ணீராக இருந்தாலும் அல்லாஹ் இந்தப் பெரும் கூலியை தருகின்றான்.

இந்த மாதத்தில் சிறந்த ஒழுக்கங்களைப் பேணும் ஒருவர் “சிராத்” எனும் பாலத்தை எளிதாக கடந்து விடுவார். அடுத்தவர்களின் குறைகளுக்கு ஈடு செய்பவர் பலன் பல அடைவார். அல்லாஹ் நியாயத்தீர்ப்பு நாளில் அவர் மீது கொள்ளும் கோபத்தையும் குறைத்து கொள்வான்.

ஒரு அனாதையை கண்ணியப்படுத்துபவரை அல்லாஹ் நியாயத்தீர்ப்பு நாளில் கண்ணியப்படுத்துவான்.

தனது இரக்கத்தை விசாலப்படுத்துபவர் மீது நியாயத்தீர்ப்பு நாளில் அல்லாஹ் தன் இரக்கத்தை விசாலப் படுத்துவான்.

தன் உறவினர்களின் உறவை துண்டிப்பவன்களிடமிருந்து அல்லாஹ் தன் இரக்கத்தை துண்டித்து விடுவான். இந்த மாதத்தில் – ரமலான் மாதத்தில் சிறப்பான தொழுகையை தொழுபவருக்கு அல்லாஹ். நரகத்தைத் தூரமாக்குவான். இந்த மாதத்தில் கூடுதலான நஃபிலான பரிந்துரைக்கப்பட்ட ஒரு தொழுகையை நிறைவேற்றுபவர்களுக்கு அல்லாஹ் 70 நபிலான பரிந்துரைக்கப்பட்ட தொழுகைகளின் நன்மையை கொடுப்பான்.

இந்த மாதத்தில் கடமையாக்கப்பட்ட தொழுகையை நிறைவேற்றுபவர்களை அல்லாஹ் 70 தொழுகைகளின் நன்மையை கொடுப்பான். இந்த மாதத்தில் அதிகமான தொழுகைகளை தொழுபவரின் சுமை நியாயத்தீர்ப்பு நாளில் எளிதாக்கப்படும்.

இந்த மாதத்தில் திருக்குர்ஆனின் ஒரு திருவசனத்தை ஓதுபவருக்கு இதர மாதங்களில் மொத்த திருக்குர்ஆனையும் ஓதிய நன்மை கிடைக்கும்.

மக்களே இந்த மாதத்தில் சொர்க்கத்தின் வாசல்கள் திறந்திருக்கும். ஆகவே அல்லாஹ்விடம், உங்களுக்கு அதை ஒரு போதும் மூடிவிட வேண்டாம் என துவா செய்யுங்கள்.

இந்த மாதத்தில் நரகத்தின் வாசல்கள் மூடியே இருக்கும். உங்கள் விஷயத்தில் அது எப்போதும் மூடியே இருக்கட்டும் என துவா செய்யுங்கள்.

இந்த மாதத்தில் சைத்தானை கட்டிப்போட்டு இருப்பான் அல்லாஹ். அந்த சைத்தான் ஒருபோதும் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்த அனுமதிக்க வேண்டாம் என துவா செய்யுங்கள்.

**- பைஹக்கி**



# நோன்பின் நோக்கம்

***ஈமான் கொண்டவர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும்(அது) விதிக்கப்பட்டுள்ளது; (அதன் மூலம்) நீங்கள் இறையச்சமுடையோர் ஆகலாம்.(2:183)***

இந்த இறைவசனம் இரண்டு விஷயங்களை கூறுகின்றது. நோன்பு எல்லோருக்கும் கடமையானது என்பது முதல் விஷயம். நோன்பின் நோக்கம் தக்வா எனும் இறையச்சத்தை அடைவது இரண்டாவது விஷயம். தக்வா என்பது ஒரு சிறு கூட்டத்திற்கு மட்டும் அல்ல, அது நம்பிக்கை கொண்டவர்கள் அனைவருக்கும் வேண்டும். எல்லோரும் முத்தகீன்களாக வேண்டும். நாளை மறுமையில் முஸ்லிம்களே வெற்றி பெறுவார்கள்.

இந்து மதத்தில் சில பழக்கவழக்கங்கள் சிலருக்கு மட்டுமே உரித்தானவையாக இருக்கின்றன. உதாரணமாக;

இறைச்சி உண்ணக்கூடாது என்பது பிராமணர்களுக்கு மட்டுமே. இதேபோல் மத சடங்குகளில் பாகுபாடு கிறிஸ்துவத்திலும் புத்த மதத்திலும் காணப்படுகின்றது.

பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் இவ்வாறு குறிப்பிடுகின்றது. “இந்து மதமும், கிறிஸ்துவமும் அதிலும் குறிப்பாக ரோமன் கத்தோலிக்க கிருஸ்தவ பிரிவும், கிழக்கிந்திய பழமைவாத கிறிஸ்தவ பிரிவுகளும், சாதாரண மனிதனுக்கும் புனிதத் தொழில் செய்கின்றவர்களுக்கும் இடையில் தெளிவான வேறுபாட்டை கற்பிக்கின்றன.

இஸ்லாத்தில் இந்த வேறுபாடு இல்லை. ஒரு முஸ்லிம், ‘நான் ஒரு சாதாரண முஸ்லிம் நான் இதை செய்யத் தேவையில்லை அதை செய்யத் தேவை இல்லை இதை முத்தகீன் எள்ற இறையச்சமிக்கோர் மட்டும் தான் செய்ய வேண்டும்’ என்று கூற முடியாது. இந்த வேறுபாடின்மையை திருக் குர்ஆன் வலியுறுத்துகிறது. தக்வா என்ற சொல்லும் அதன் விளக்கங்களும் 151 ஒரு தடவை திருக்குர்ஆனில் வருகின்றன.

ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்; மேலும், ஒவ்வொருவரும் (மறுமை) நாளுக்காகத் தான் முற்படுத்தி வைத்திருப்பதைப் பார்த்துக் கொள்ளட்டும்; இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள்; நீங்கள் செய்பவற்றை, நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன்.(59:18)

திருக்குர்ஆன் ஓர் அழகிய உதாரணத்தைக் கூறி தக்வாவை பெற சொல்கின்றது. அதனைப் புரிந்து கொள் இந்த இறை வசனத்தைப் பாருங்கள்;

யார் மேலானவர்? பயபக்தியுடன் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி ஒரு கட்டடத்தின்

அடிப்படையை அமைத்தவரா? அல்லது (தானே சரிந்துவிடக்கூடிய) பூமியை ஒட்டி அடிப்படையிட்டு (அந்த அடிப்படையில்) கட்டடத்தை - அதுவும் சரிந்து பொடிப்பொடியாக நொறுங்கி அவருடன் நரக நெருப்பில் விழுந்து விடும் (கட்டடத்தை அமைத்தவரா?) அல்லாஹ் அநியாயக்கார மக்களை நேர் வழியில் செலுத்த மாட்டான்.(9:109)

நிரந்தர மகிழ்ச்சி இறைவனை அஞ்சி இந்த உலகில் தங்கள் வாழ்க்கையை நடத்தும் மக்களுக்கே என்று இந்த வசனம் கூறுகின்றது:

இன்னும் நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பைப் பெறுவதற்கும், சுவனபதியின் பக்கமும் விரைந்து செல்லுங்கள்; அதன் (சுவனபதியின்) அகலம் வானங்கள், பூமியைப் போலுள்ளது; அது பயபக்தியுடை யோருக்காகவே தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.(3:133)

ஒவ்வொரு ஓட்டப் பந்தயத்திலும் சிலர் முந்தி செல்வார்கள், சிலர் பிந்தி வருவார்கள். அதேபோலத்தான், அதிலும் சில இறைவிசுவாசிகள் மற்றவர்களை விட அதிக அக்கறை உடையவர்களாக திகழ்வார்கள்.

இதுதான் (இறைவன் வகுத்ததாகும்,) எவர் அல்லாஹ்வின் சின்னங்களை மேன்மை படுத்துகிறாரோ நிச்சயமாக அது உள்ளச்சத்தால் (ஏற்பட்டது) ஆகும்.(22:32)

தக்வா என்பது உள்ளத்தில் உறைவது என்பதால், பிறருடைய தக்வாவின் அளவை நாம் கணக்கிட முடியாது. இருந்தாலும் நமது தக்வாவின் அளவின் படி தான் நமது வெளிப்படையான செயல்பாடுகள் அமையும். ஆதலால் இந்த ஓட்டப்பந்தயத்தில் வித்தியாசங்கள் தெரியத்தான் செய்யும். ஓட்டப்பந்தயத்தில் பிந்தி வருபவர்கள் நாங்கள் இந்த ஓட்டப் பந்தயத்தில் பங்கு பெறவில்லை என்று கூறி நடிக்க முடியாது. ஏனெனில் எல்லோருக்கும் ஒரே ஓட்டப்பந்தயம் தான்.

நாம் எல்லோரும் அந்த ஓட்டப்பந்தயத்தில் ஒன்றாக பங்கு பெற்று இருக்கின்றோம். பணக்காரர்கள், ஏழைகள், படித்தவர்கள், படிக்காதவர்கள், தலைவர்கள், தொண்டர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள், போதகர்கள், கேட்பவர்கள், ஆட்சியாளர்கள், ஆண்கள் பெண்கள் அனைவரும் இந்த ஓட்டப்பந்தயத்தில் இருக்கின்றார்கள். அனைவரும் தங்கள் உள்ளங்களில் தக்வா எனும் இறையச்சத்தை வளர்க்க வேண்டும்.

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன்.(49:13)

இஸ்லாமிய சமூகம் என்பது தக்வாவின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு அதிக தகுதி உடையவர்களே கண்ணியவான்கள். அதிக மதிப்பு உடையவர்கள் வெற்றியடையாமல், வேறு எந்த துறையில் வெற்றி அடைந்தாலும், இஸ்லாமிய சமுதாயத்தில் அவர் சிறுமைப்பட்ட வரை இப்படி தெளிவான கொள்கை இருந்தாலும், நம்மில் பலர் முத்தகீன்கள் என்பது தனி பிரிவினர் நாமெல்லாம் சாதாரண முஸ்லிம்கள் என்று நம்புவதாக தெரிகிறது. இந்த சிந்தனை கிறிஸ்துவத்திலிருந்து இருந்து இறக்குமதி ஆனதே தவிர வேறு இல்லை. “நாம் எல்லாம் சாதாரண முஸ்லிம்கள்” என்ற இந்த சிந்தனையை தான் நமது பாவங்களை, தவறுகளை, பலவீனங்களை நியாயப்படுத்தும் ஒரு கருவியாக அமைந்துள்ளது.

நம்மில் பலர் இவ்வாறு தங்கள் பேச்சை முடிப்பார்கள்; “நான் ஒரு முத்தகீன் இல்லையே. ஒரு சாதாரண முஸ்லிம் தானே.” நமது லட்சியத்தில் இருந்து நாம் விலகி செல்வது ஒப்புக் கொள்ளும் ஒரு தாழ்மையான வாக்குமூலமே இது? பாவம் என்பது தக்வாவை விட்டு நம்மை விலகச் செய்கிறது. இதனால் தான் திருக்குர்ஆன் நான் சுத்தமானவள் என தம்பட்டம் அடிப்பதைத் தடுக்கிறது.

(நன்மை செய்வோர் யார் எனில்) எவர்கள் (அறியாமல் ஏற்பட்டுவிடும்) சிறு பிழைகளைத் தவிர பெரும் பாவங்களையும் மானக் கேடானவற்றையும் தவிர்த்துக் கொள்கிறார்களோ அவர்கள்; நிச்சயமாக உம்முடைய இறைவன் மன்னிப்பதில் தாராளமானவன்; அவன் உங்களைப் பூமியிலிருந்து உண்டாக்கிய போது, நீங்கள் உங்கள் அன்னையரின் வயிறுகளில் சிசுக்களாக இருந்த போதும், உங்களை நன்கு அறிந்தவன் - எனவே, நீங்களே உங்களைப் பரிசுத்தவான்கள் என்று புகழ்ந்து கொள்ளாதீர்கள் - யார் பயபக்தியுள்ளவர் என்பதை அவன் நன்கறிவான். (53:32)

கிஃப்ர் என்ற ஆணவம் புகுந்த மனதில் தக்வா என்ற அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் நிச்சயமாக இருக்காது. அங்கே ஷைத்தான் புகுந்து அதில் ஆட்சி செய்வான். இதற்கு இடம் தராமல் தக்வாவை பெருக்குவோம். அதற்கு இந்த நோன்புகளை முழுமையாக பயன்படுத்துவோம்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்;“கடுகளவு ஆணவம் அவருடைய உள்ளத்தில் இருந்தாலும் அவர் சொர்க்கம் செல்ல மாட்டார்.”(அறிவிப்பாளர் இப்னு மஸ்வூது (ரழி) நூல்: முஸ்லிம்.)

10

# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?



# வேம்பரசி [எ] ஜன்னத்

இலங்கையில் நடந்த தொடர் குண்டு வெடிப்புகள் பற்றி நாம் அறிவோம். 450க்கும் மேற்பட்ட அப்பாவி உயிர்களை பலிகொண்ட இந்த கோர சம்பவத்திற்கு பிறகு வழக்கம் போல ஊடகங்கள் முதல் சமூக வலைதளங்கள் வரை இஸ்லாத்திற்கு எதிரான தங்களது வெறுப்பு பிரச்சாரத்தை மிக நேர்த்தியாக கட்டவிழ்த்து விட்டன. முஸ்லிம்களின் பாடசாலைகளான மத்ரஸாக்களிலிருந்தே அவர்களுக்கு இது போன்ற கொடூர தாக்குதல்களை நடத்த பயிற்சிகள் வழங்கப்படுகிறது. முஸ்லிம்களின் புனித நூலான குர்ஆன் பயங்கரவாதத்தை அவர்களுக்கு போதிக்கிறது. முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிவதால் தான் இதுபோன்ற கோரமான தாக்குதல்கள் எல்லாம் நடக்கிறது. அதனால் புர்காவை தடை செய்ய வேண்டும். என்றெல்லாம் இஸ்லாத்தின் மீதுள்ள தங்களது வெறுப்புகளை உமிழ்ந்து கொட்டினர்.

வைகறை வெளிச்சம் வாசகர்களை பொறுத்தமட்டில் இந்த தாக்குதல் குறித்த சம்பவங்களை கேள்வி பட்டவுடன் இதன் பின்னணி குறித்து புரிந்து கொண்டிருப்பார்கள். உலகம் முழுக்க இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டெ செல்கிறது. சமகால உலகில் இஸ்லாம் வேகமாக பரவிக் கொண்டிருக்கிறது. அதை தடுப்பதற்காக இஸ்லாத்தின் எதிரிகள் பல்வேறு யுக்திகளை கையாண்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதிதான் “இஸ்லாமோபோபியா”.

இந்த “இஸ்லாமோபோபியா” பற்றி ஆசிரியர் மு. குலாம் முஹம்மத் அவர்கள் “சிலுவை யுத்தம் 2.0” தொடரில் விளக்கி வருகின்றார்கள். இஸ்லாத்தைப் பற்றிய ஒருவிதமான அச்ச நிலையை உருவாக்குவதன் மூலம் இஸ்லாத்தின் பக்கம் மக்கள் திரும்புவதை தவிற்கலாம். இஸ்லாத்தை இந்த பூமிப் பந்தை விட்டு அழித்து விடலாம் என மனக்கணக்குப் போட்டு இதுப்போன்ற பயங்கரவாத செயல்களை அறங்கேற்றி அதனை இஸ்லாத்தோடு தொடர்பு படுத்துகின்றனர்.

அதனால் தான் யாராவது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டால். “அவன் தீவிரவாதியாகி விட்டான்”, “அவன் பயங்கரவாதியாகிவிட்டான்” என்றெல்லாம் நினைத்து பயம் கொள்கின்றனர். ஆம்! இதே நிலைதான் அம்மையார் வேம்பரசி அவர்களுக்கும் ஏற்பட்டது. தன் மகன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதைக் கேள்வி பட்டு, “அவன் தீவிரவாத கூட்டங்களில் சேர்ந்து விட்டான்” என்று பயந்த அவர், பின்னர் எப்படி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு, இஸ்லாமிய அழைப்பாளராக மாறினார் என்பதைப் பார்ப்போம் வாருங்கள்....

**வேம்பரசி - ஜன்னத்**

என்னுடைய பெயர் ஜன்னத். பழைய பெயர் வேம்பரசி. நான் இஸ்லாத்தில் இணைந்து மூன்று வருடங்கள் ஆகிறது. என்னுடைய மகன் வேலைக்காக சவுதி அரேபியா சென்றிருந்தான். அப்போது அவன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டான். நான் அவனிடம் வேண்டாம், நம் சமூகத்தில் யாரும் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். என்று சொன்னேன்.

அதற்கவன், "இல்லையம்மா, இதுதான் உண்மையான மார்க்கம். நீங்க சாமியெல்லாம் கும்புடாதிங்க!" என்று சொன்னான்.

**என் மகன் பயங்கரவாதியாகிவிட்டானா?**

அப்போது அவனோடு சவுதியில் வேலை பார்த்த ஒரு இந்து சகோதரர் ஊருக்கு வந்தார். அவர் என்னிடம், "உங்கள் மகன் தீவிரவாதியாகி விட்டான். முஸ்லிமாகி விட்டான். இன்னும் கொஞ்ச நாளில் பெரிய தீவிரவாதியாக வரப்போகிறான்." என்று சொன்னார்.

எனக்கு பயமாக இருந்தது. மறுபடியும் என் பையனுக்கு போன் போட்டு, "என்னப்பா தீவிரவாதியாகி இருக்கியாமே! என்ன சமாச்சாரம்" என்று கேட்டேன்.

அதற்கவன், இல்லையம்மா. தீவிரவாதம் கிடையாது. முஸ்லிம்கள் என்றாலே பாவமன்னிப்பு தெரிந்தவர்கள். அல்லாஹ்வுக்கு பயப்பிடுகிறவர்கள். புண்ணியம் செய்கிறவர்கள். அவர்கள் எதுவும் செய்ய மாட்டார்கள்." என்று சொன்னான்.

"நான் நிறைய சாமிகளை வழிபடுவேன். வெள்ளிக்கிழமையானால் குறி சொல்லி திருநீறு கொடுப்பேன். அப்போது என்னிடம் முஸ்லிம்களும் வந்து அருள்வாக்கு கேட்டு திருநீறு வாங்கி செல்வார்கள். ஆனால் நீ என்னவென்றால் இப்படி சொல்கிறாயே. இது எனக்கு சரி படவில்லை." என்று கூறினேன்.

அதற்கவன், "இல்லை அம்மா. அவர்கள் மார்க்கம் தெரியாத முஸ்லிம்களாக உள்ளார்கள். அதனால் தான் உண்ணிடம் வந்து திருநீரு வாங்குகிறார்கள். நீ அவர்களை பார்க்காதே. இன்னும் நல்ல மார்க்கப் பற்றுள்ள முஸ்லிம்களை பார்த்து அவர்களிடம் நீ பழகு" என்று கூறினான்.

சரியென்று சில முஸ்லிம்களிடம் பழகி அவர்களிடம் கேட்டால், நீங்கள் தர்க்காவுக்கு செல்லுங்கள். அங்குள்ள மகான்கள் உங்களது குறைகளை அல்லாஹ்விடம் முறையிடுவார்கள் என்று கூறினார்கள். இதையும் என் மகனிடம் சொன்னென்.

அதற்கவன், "இல்லை, தர்க்காவுக்கு செல்லக் கூடாது, தர்க்காவுக்கு செல்வதும், சாமியை வணங்குவதும் ஒன்றுதான்." என்று கூறினான். அப்பவும் எனக்கு குழப்பமாகவே இருந்தது.

இப்படியே நாட்கள் செல்ல செல்ல எனக்குள் என்னை அறியாமல் ஒரு மாற்றம். உடனே எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஒரு முஸ்லிம் ஏரியாவில் வீடு வாடகைக்கு எடுத்து குடியமர்ந்தேன்.

அங்கே குடியேறியும், நான் என் மகனின் பேச்சை கேட்கவில்லை. அவன் எனக்கு சொல்லிக் கொண்டே இருப்பான். அதற்கு நான் "நீ சொல்றபடி சொல்லுப்பா. ஆனால் என்னால் புர்க்காவையெல்லாம் போட்டுக்கிட்டு செல்ல முடியாது. பின்னாடி சொந்த பந்தமெல்லாம் தவறாக நினைப்பார்கள்" என்று சொன்னேன்.

அதன் பின் என் பெரிய மகன் சவுதியில் இருந்து வந்து விட்டான். வந்து என்னை ஜும்மா தொழுகைக்கு ஒரு மசூதிக்கு அழைத்துச் சென்றான். அங்கு நான் சென்றவுடன், அவர்கள் என்னை அரவனைத்ததையும், பேசுவதையும் பார்த்ததும், "சரி நம் பிள்ளை சொல்லியது உண்மை தான் போல. நாம் ஏன் இப்படி இருக்க வேண்டும். நம் பிள்ளையே இஸ்லாத்தில் இணைந்து விட்டான். நான் மட்டும் தனியாக இப்படி இருந்து என்ன செய்ய போகின்றேன்? என்று நினைத்து நான் அங்கேயே கலீமா சொல்லிவிட்டேன். புர்கா இல்லாமல் தான் கலீமா கூறினேன்.

அதன் பின் நான் புர்கா அணிய ஆரம்பித்தேன். முஸ்லிம் ஜனங்கள் முழுவதும் என்னை அன்பாக ஆதரிப்பதும், தோளோடு தோள் சேர்த்து அறவனைப்பதும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நான் என் பிள்ளை சொல்லி இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

நான் முஹம்மத்(ஸல்) அவர்களின் வரலாறை படித்துதான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். சொர்க்கம், நரகம் என்று ஒன்று இருக்கிறது. நமக்கு உதவாத சிலைகளை வழிபட்டது தவறு. இது நமக்கு சரிப்பட்டு

வராது. அல்லாஹ் நாடினால் மட்டுமே சுவனம் செல்ல முடியும் என்று என்னுடைய பெரிய மகன் கூறினான். ஆனால் நான் அதையெல்லாம் கேட்கவில்லை. நான் ரசூல்லாஹ்வுடைய வரலாறை படித்தவுடன் தான் எனக்கு இஸ்லாத்தின் பால் ரொம்ப ஈடுபாடு வந்து நான் இஸ்லாத்திற்கு வந்தேன்.

**முஸ்லிம்கள் பயங்கரவாதிகளா?**

இஸ்லாத்திற்கு வந்ததும் எனக்கு ஒரு உண்மை புரிய வந்தது. அது என்னவென்றால், என் மகனை தீவிரவாதி என்று கூறினார்கள் அல்லவா? அது தவறாக சொல்லிவிட்டார்கள். முஸ்லிம்கள் என்றாலே தீவிரவாதிகள் என்று கிடையாது. யாரோ ஒரு கூட்டம் முஸ்லிம்களின் பெயரில் தீவிரவாதம் செய்து முஸ்லிம்களுக்கு கெட்டப் பெயர் உண்டாக்குகிறார்கள்.

முஸ்லிம்கள் பாவம் செய்ய மாட்டார்கள். அவர்கள் யாரையும் ஏமாற்ற மாட்டார்கள். சொல்லிய வாக்கை சரியாக நிறைவேற்றுவார்கள். இன்றைக்கு ஒன்றை தருகின்றோம், என்றால் தந்து விடுவார்கள். வாக்கு மீற மாட்டார்கள். அப்படிப்பட்ட முஸ்லிம்களை தவறாக சொன்னார்கள். எனக்கு இந்துக்களிடம் பிடிக்காத குணம் இதுதான்.

முஸ்லிம்கள், நேர்வழியில் இருப்பதால் யாருக்கும் பயப்படவில்லை என்றாலும், அல்லாஹ்விற்கு பயப்பிடுவார்கள். அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்த ஒரு காரணம் தான் என்னை இஸ்லாத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வைத்தது.

**குடும்பங்களுக்கு இஸ்லாத்தை நோக்கிய அழைப்பு**

என்னுடைய பிள்ளைகள் யாரும் இஸ்லாத்திற்குள் வரமாட்டேன் என்கிறார்கள். என்னுடைய சிறிய மகன் இஸ்லாத்தின் இணைந்து காயல்பட்டிணத்தில் படிக்க சென்றான். ஆனால் மீண்டும் இந்துவாக மாறிவிட்டான். பின்னர் நானும் எனது பெரிய மகனும் அவனை ஒதுக்கி வைத்து விட்டு வாழ்கின்றோம்.

என்னுடைய பெரிய மகள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு, கனவரை விட்டு விட்டு இரண்டு பிள்ளைகளை அழைத்துக் கொண்டு என்னுடன் வந்துவிட்டாள்.

என்னுடைய சிறிய மகளிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். நீங்கள் என்ன முஸ்லிமானால் தான் என்னை சேர்த்துக் கொள்வீர்களா? என்று சொல்கிறாள்.

நான் அவளிடம் கூறினேன், “அப்படியெல்லாம் இல்லை. நான் சுவனத்திற்கு போக நீ மட்டும் நரகத்திற்கு செல்லக்கூடாது. அதனால் தான் உன்னை அழைக்கின்றேன்” என்று கூறினேன்.

ஆனால் அவளின் கணவர் என்னிடம், “என்ன சொல்றிங்க நீங்க, இறந்து விட்டால் ஒரு வாழ்க்கையும் கிடையாது. முஸ்லிம்கள் சொல்வதெல்லாம் பொய்தான்” என்று கூறினார்.

இதனால் அவருக்கும் எனக்கும் கொஞ்சம் வாக்குவாதம் ஏற்பட்டு, “இது உண்மை, ஏற்றுக்கொண்டால் ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லையென்றால் வேண்டாம்” என்று கூறினேன்.

அதன் பிறகு அவர்களுக்குள்ளேயே சண்டை வந்து பிரச்சனை ஏற்பட்டு இருவருமே வந்து கலீமாவை மொழிந்து விட்டார்கள். அவர்கள் குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

எங்கள் குடும்பத்தில் எல்லோரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். எங்கள் சின்ன மருமகனும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். என்னுடைய பெரிய மருமகன் தான் கொஞ்சம் பிரச்சனை ஆகி என் மகளை பிரிந்து விட்டார். அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

அதன் பின் என் குடும்பத்தில் என்னுடைய சகோதரி மகளிடம் சொன்னேன். “இஸ்லாம் என்று உள்ளது. சொர்க்கம், நரகம் என்று ஒன்று உள்ளது. இதை நீ நம்பு. எல்லோருக்கும் எடுத்து சொல்லு,” என்று கூறினேன். அவளும் கலீமா கூறி இஸ்லாத்தில் இணைந்து விட்டாள்.

**அப்போது நான் கூறியது பொய் - இதுதான் உண்மை**

அதனால் அவர்கள் வீட்டில் என்னை சேர்ப்பது கிடையாது. நானும் அங்கே போகிறதுமில்லை. இந்து மதத்திலிருக் கிறவர்கள், என்னிடம் பழகியவர்கள் யாரும் என்னை தவறாக நினைக்க வேண்டாம். நான் நேர்வழிக்கு வந்திருக்கின்றேன். நீங்களும் இந்த

நேர்வழிக்கு, சொர்க்கத்தை நோக்கி வாருங்கள்.

இறைவன் என்றாலே அல்லாஹ்தான். இந்த கல், சிலை, புகைப்படமெல்லாம் நம்மை காப்பாற்றாது. நம்மை படைத்தவன் அல்லாஹ் தான். நமக்கு உருவம் கொடுத்தவனும் அல்லாஹ்தான். நமக்கு உயிர் கொடுத்தவனும் அல்லாஹ் தான். நம் உயிரை எடுப்பவனும் அல்லாஹ் தான். ஆனால் யாருக்கும் தெரியாது.

அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான். நீங்கள் அனைவரும் அவனை ஏற்றுக் கொண்டு இஸ்லாத்திற்கு வரவேண்டும்.

முஸ்லிம்கள் மிகவும் இரக்கமுள்ள மனிதர்கள். அவர்கள் அல்லாஹ்விற்கு பயப்பிடுகிறவர்கள்.

நீங்கள் அனைவரும் இஸ்லாத்திற்கு வரவேண்டும். நான் முன்பு உங்களுக்கு அருள் வாக்கெல்லம் கூறினேன். அதெல்லாம் பொய் தான். இப்போது நான் சென்றிருப்பது உன்மையான மார்க்கம். அதனால் நீங்கள் என்னை தேடி வாருங்கள். வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்.

நான் உங்களை அழைப்பதை தவறாக நினைக்க வேண்டாம். நீங்களாக மனது வைத்து இஸ்லாத்திற்கு வாருங்கள். என்னுடைய சகோதரிகள், சகோதரி பிள்ளைகள் எல்லாம் இஸ்லாத்திற்கு வந்து விட்டால் எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும். எல்லோரும் நேர்வழி பெற்று சுவனம் வரவேண்டும். அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்......

**அஷ்ரஃப் இஸ்லாம்**


**வைகறை வெளிச்சம் பத்திரிகையில் வரும் கட்டுரைகள் குறித்த தங்களது கருத்துகளை +91 9092723753 என்ற கைபேசிக்கு வாட்ஸ்ஆப்-இல் பகிரவும்**

# வேர்கள் வெளியீட்டகம்
# 8148129887





# வாசகர் கருத்துகள்

**சித்தம் தெளிந்தவன் சீனி**
47 mins

**#புல்வமா_தாக்குதலுக்கு** பின் கடந்து செல்ல முடியாத தேடலின் விளைவு...

**#கஷ்மீரின்_பாதி_விதவைகள்** புத்தகம்...

மிகவும் வலிகள் நிறைந்த அந்த பகுதி மக்களின் வாழ்க்கையை எடுத்துரைக்கிறது...

#பாதுகாப்பு_படை
**#இந்திய_ராணுவம்**
**#கஷ்மிர்_மக்கள்**
#கஷ்மீரின்_பாதி_விதவைகள்







# பசு குண்டர்களின் படுகொலைகள்

முஸ்லிம்கள் சுதந்திர இந்தியாவில் மிகவும் குரூரம், நிறைந்த ஒரு காலக்கட்டத்தை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். எங்கே வைத்து வேண்டுமேயானாலும் எப்படி வேண்டுமானாலும் அவர்களைக் கொலை செய்யலாம், அவர்களைப் புன்மைத் தேரைகளாக நடத்தலாம். கேட்பார் யாருமில்லை. அதனை படமெடுத்து பாரெல்லாம் பவனி வரவிடலாம். என்றொரு நிலையில் வாழ்ந்திட வேண்டிய கட்டாயம். கொலைகளை செய்பவர்களுக்கு பரிசு, பணம் அரசு வேலை என பல சன்மானங்கள் கிடைக்கின்றன.

இதில் வட இந்திய முஸ்லிம்கள் கடுமையான பாதிப்புகளுக்கு ஆளானார்கள். அவர்களுக்கு அண்மையில் பிரபல எழுத்தாளர், ஆய்வாளர், ஏ.ஜி. நூரானி அவர்கள் ஓர் அறிவுரையை வழங்கினார்கள். அவர் இப்படி முஸ்லிம்களைப் பற்றிக் கவலைப்படுபவரல்ல. அவர் எதையும் சாதாரணமாக கண்டு கொள்வதில்லை. அவரே சற்று இறங்கி வந்து ஓர் அறிவுரையை வழங்கியிருக்கின்றார்.

அந்த அறிவுரையில் சுதந்திர இந்தியாவில் மிகவும் கோரமான ஒரு காலக்கட்டத்தில் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள் எதையும் செய்திட இயலாத கையறு நிலையில் உள்ளீர்கள். இப்படியொரு நிலை 2002 குஜராத் கலவரத்திற்கு பின் ஏற்பட்டதில்லை.

இந்தக் கொடுமையான காலக்கட்டத்திலும் நீங்கள் ஒன்றை செய்யலாம் அது உங்களுக்கு நடக்கும் ஒவ்வொரு அநீதியையும், படுகொலையையும், ஆவணப்படுத்துங்கள். இந்த ஆவணங்கள் வரலாறுகள் உங்களுக்கு எதிர்காலத்தில் உதவும். வரும் தலைமுறையும் வளரும் தலைமுறையும் இதை கற்கட்டும், தற்காப்புகளைப் பற்றி சிந்திக்கட்டும். இதுவல்லாமல், இந்தப் பதிவுகள் இன்றைக்கு குரூரமாக குற்றங்களைச் செய்பவர்களை நீதியின் முன் நிறுத்திட உதவலாம். வேறுபல வழிகளிலும் உங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் கிடைக்க வழிவகுக்கும் என்றார்.

நேற்று நடந்தது இன்று நடக்காது. இன்று நடப்பது நாளை நடக்காது, நாளை நடப்பது மறுநாள் நடக்காது. என்றெல்லாம் வாழ்ந்து கொண்டிருந்த முஸ்லிம்களுக்கு இஃதோர் சிறு ஆறுதலாக இருந்தது. அதுமட்டுமில்லாமல் ஒரு சிறு செயற் களத்தையும் காட்டிவிட்டது. இந்த வகையில் வட இந்தியாவில் முஸ்லிம்களுக்கு நடந்த மிகப்பெரிய அநியாயங்களை ஆவணப்படுத்துகின்றார் பிரபல பத்திரிகையாளர் சியாவுஸ்ஸலாம் அவர்கள். இதில் முதன் முதலில் கூட்டுப் படுகொலை கோப்புகள் என்றொரு நூலை வெளியிட்டுள்ளார். *Lynching Files - By Zia Us Salaam.*

பசுவின் பெயரால் முஸ்லிம்கள் குரூரமாகப் படுகொலை செய்யப்பட்ட நிகவுழ்களை கோத்துத் தந்துள்ளார்கள் அவற்றைச் சுருக்கமாக இந்தத் தொடரில் இடம் பெறச் செய்கின்றோம். இன்ஷா அல்லாஹ்.

# லின்ச்சிங் கோப்புகள்

*20-25* அண்டுகளுக்கு முன்னால் வரை ஒற்றுமையோடு இருந்த சமுதாயங்கள் எதிரும் புதிருமாக மாறியது எப்படி?


அன்று ரயில் பெட்டிகளில் தங்களுக்கென முண்டி அடித்துக் கொண்டு இடத்தைப் பிடித்த இளைஞர்கள் பின்னர் அந்த இடங்களை பெண்களுக்கும், கர்ப்பிணிகளுக்கும், வயதானவர்களுக்கும், கையில் குழந்தையோடு வருபவர்களுக்கும் விட்டுக் கொடுத்தார்கள். அவர்கள் நின்று கொண்டு பயணம் செய்தார்கள். இதில் அவர்கள் ஜாதி, மதம் என வேறுபாடுகளைப் பார்த்திடவில்லை.

அன்றைக்கிருந்த ஒற்றுமையிலும் ஒருமைப்பாட்டிலும் இன்னொரு சிறப்புத் தன்மையுமிருந்தது. அது தொழுகை நேரங்கள் வந்த போது ரயில் பயணத்தின் போதே முஸ்லிம் பெரியவர் ஒருவர் “அதான்” பாங்கு சொல்வார். ரயில் பெட்டியில் அனைவரும் அமைதியாகிவிடுவார்கள். இருக்கின்ற முஸ்லிம்கள் தொழுகையைத் தொடங்குவார்கள். சுற்றி இருக்கும் இதர மத நம்பிக்கையைச் சார்ந்தவர்கள் முடிந்த வரைக்கும் அவர்களுக்கு வசதிகளைச் செய்துக் கொடுத்தார்கள்.

ரயில் நிலையங்கள் கூட பல நேரங்களில் தொழும் இடமாக ஆக்கப்படும். அனைவரும் வழி விடுவார்கள். ஒரு புனித செயல் நடைபெறுகின்றது எனக் கண்ணியமாகவே பார்ப்பார்கள்.

இன்று இவற்றிற்கெல்லாம் இடமில்லை. பள்ளிவாசல்களில் - மஸ்ஜித்களில் கூட பாங்கு சொல்லிட இயலாத நிலை, சில பல ரயில் பயணங்களில் எல்லா அடையாளங்களையும் மறைத்துக் கொண்டு பயணம் செய்திட வேண்டிய நிலைக்கு முஸ்லிம்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

காணாமற் போய்விட்டது அந்த ஒற்றுமையும், ஒருமைப்பாடும். மீண்டும் அந்த பழைய நிலைக்கு இந்தியா திரும்பும் வாய்ப்புகள் இல்லை என்றே நினைக்கின்றேன்.




*2017*ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் Huffington Post என்ற ஆய்விதழ் ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டது. அதில் *2015*ஆம் ஆண்டில் மத மோதல்கள் நிறைந்த நாடுகளில் நான்காவது இடத்தில் இந்தியா இருக்கின்றது. என்றொரு அறிக்கையை சமர்ப்பித்தது. (See Footnote) சிரியா, நைஜீரியா, ஈராக் ஆகிய நாடுகளைத் தொடர்ந்து இந்தியாதான் அதிகமான மத மோதல்கள் நிறைந்த நாடு.

இந்த அறிக்கை படித்தவர்களைப் போல் பாமரர்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இங்கே பசுக் குண்டர்கள் செய்யும் கொலைகள் அங்கே அதாவது சிரியா, நைஜிரியா, ஈராக் ஆகிய நாடுகளில் அமெரிக்காவும், ரஷ்யாவும் செய்யும் படுகொலைகளிலிருந்து சற்றும் மாறுபட்டவை அல்ல.

உண்மையில் பசுக் குண்டவர்கள் செய்யும் கொலைகள் மேலே குறிப்பிட்ட நாடுகளில் நடக்கும் கொலைகளை விட குரூரமானவை. பசுக் குண்டர்கள் செய்யும் கொலைகள் வகுப்புக் கலவரங்களின் போது கயவர்கள் செய்த கொலைகளுக்கு மாற்றாக அமைந்து விட்டன. வகுப்புக் கலவரங்கள் எப்போதாவது ஒரு முறைதான் நடந்தன. அதனால் வகுப்புக் கலவரங்கள் நடந்த நாட்களில் மட்டும் தான் முஸ்லிம்கள் பீதிவயப்பட்டு நின்றார்கள்.

ஆனால், பசுக் குண்டர்கள் செய்யும் கொலைகளால் முஸ்லிம்கள் அல்லும் பகலும் பீதிவயப்பட்டே வாழ்ந்திட வேண்டியவர் களாகி விட்டார்கள்.

“இந்தியா ஸ்பெண்ட்”, “India Spend” என்ற ஆய்வு நிறுவனம் 2010 முதல் 2018 வரை பசுவின் பெயரால் 86 படுகொலைகள் - தாக்குதல்கள் நடந்திருக்கின்றன. அவற்றுள் 98 சதவிகிதம் மோடி ஆட்சியில் அமர்ந்த பின் நடந்திருக்கின்றன என்கிறது.

இந்த ஆய்வறிக்கை அல்வார் என்ற இடத்தில் அக்பர் என்பவர் பசுக் குண்டர்களால் படுகொலைச் செய்யப்படுவதற்கு முன்னர் வெளியிடப்பட்டது. 56% சதவிகிதத்திற்கும் மேலாக பசுக் குண்டர்கள் செய்யும் தாக்குதல்கள் பாரதீய ஜனதா கட்சி ஆளும் மாநிலங்களில் நடப்பவை.



**நம் நாட்டில் பல சிலர் சிரியாவைச் சுட்டிக்காட்டி முஸ்லிம்களைக் குறைகான முயற்சி செய்கின்றார்கள். ஆனால் சிரியாவைப் போல் அதிகமாக அப்பாவி முஸ்லிம்கள் கொலை செய்யப்படுவது இந்தியாவில் தான் என்பது புள்ளி விவரங்கள் கூறும் உண்மை.**

இப்படி நடக்கும் பசுக் குண்டர்களின் படுகொலைகளைக் கணக்குப் போட்டு மூத்த வழக்கறிஞர் - மனித உரிமைகள் தளத்தில் வெற்றிகள் பலவற்றை கண்டவர் - இந்திரா ஜெய்சிங் அவர்கள், உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடுத்தார். அந்த வழக்கில் பசுக் குண்டர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் நீதிக்கு முன் நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரியிருந்தார்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்..

**எம்.ஜி.எம்.**

**கிராமங்களில் வாழ்ந்திடும் முஸ்லிம்களில் பெரும்பாலானோர் மாடு வளர்ப்பதும், பசுக்களை வளர்த்து பால் விற்பனை செய்துமே வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அவர்கள் மாடுகளையோ, பசுக்களையோ வைத்திருந்தால், கொலை செய்யப்படுகின்றார்கள். இதனால் அவர்கள் தலைமுறையாகச் செய்து வந்த தொழிலை விட்டுவிட வேண்டியதாகி விட்டது. அதாவது, மாடு, பசு, பால் விற்பனை போன்ற தொழில்கள் அவர்களுக்கு முற்றாக மறுக்கப்பட்டுவிட்டன.**

**- By Lynch Files, Page -82**



# மத சிறுபான்மையினரை கொலை செய்பவர்களின் நிலை என்ன?

Human Right Watch அண்மையில் வெளியிட்ட அறிக்கை நமக்கு ஓர் உண்மையை எடுத்து சொல்லுகின்றது. மத சிறுபான்மையினர்கள் குறிப்பாக முஸ்லிம்கள் இந்தியாவில் எப்படி ஒரு அடக்குமுறைக்கும் அநீதிக்கும் உள்ளாகி நிற்கின்றார்கள் என்பதை பதிவு செய்துள்ளது.

மோடி ஆட்சியில் அமர்ந்த பின், முஸ்லிம்களை கும்பலாக சேர்ந்து அடித்து கொல்லும் அராஜகம் அரங்கேற்றப்பட்டு வருகிறது. முஸ்லிம்களை கொலை செய்துவிட்டு இந்த கும்பல்கள் எந்தவித அச்சமுமின்றி பவனி வருகின்றார்கள். ஏனெனில் இவர்களுக்கு காவல்துறையின் ஆசி இருக்கின்றது.

"இந்த குண்டர்களை கைது செய்து விசாரணை செய்வதில் இந்திய அதிகாரிகள் வேண்டுமென்றே காலம் கடத்துகின்றார்கள். அதே சமயத்தில் இந்த கும்பல் கொலைகளை சரி என்றும், பாதிக்கப்பட்ட குடும்பத்தின் மீது வழக்கும் பதிவு செய்கின்றார்கள் விசாரணை அதிகாரிகள் என்கிறது அந்த அறிக்கை.

மோடி 2014 -இல் பிரதமரான பின்பு பசு குண்டர்களின் அராஜகம் அதிகரித்துள்ளதாக கூறுகின்றது இந்த 104 பக்க அறிக்கை.

மே 2015 முதல் டிசம்பர் 2018 வரை மட்டும் 44 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பாதிக்கபட்ட வர்களில் அதிகமானோர் முஸ்லிம்கள். அவர்கள் மாட்டுகறியை வீட்டில் வைத்திருந் தார்கள், அறுப்பதற்காக பசுக்களை கொண்டு சென்றார்கள் என்பதே அவர்கள் மீது சுமத்தப்படும் பழி.

இந்த குண்டர்களின் கையில் மாட்டும் முஸ்லிம்களை மரத்தில் கட்டி தொங்க விடுகின்றனர். அவர்களை அடித்து துன்புறுத்துகின்றனர் அல்லது எரித்து விடுகின்றனர். தலித்களை சட்டையை கழற்றி அடிக்கின்றனர்.

பெரும்பாலான இதைப்போன்ற வழக்குகளில் நீதிவேண்டி காவல்துறையிடம் செல்லும் முஸ்லிம்களை மிரட்டுகின்றனர். முதலில் விசாரணையை தாமதப்படுத்துகின்றனர். அதன் நடைமுறைகளை பின்பற்றுவதில்லை. கொலைக்கு உடந்தையாகவும், குற்றங்களை மூடி மறைக்கவும் செய்கின்றனர் காவல்துறையினர்.

இந்த குண்டர்களுக்கு அரசோடு தொடர்பு இருப்பதால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மீதே வழக்கை பதிவு செய்கின்றார்கள் இந்திய காவல்துறை அதிகாரிகள் என்கிறார் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்கு ஆசியாவின் இயக்குநர் மீனாக்சி கங்குலி.

மனித உரிமை அமைப்பு இந்த அறிக்கைக்கு "Violent Cow Protection in India: Vigilante Group Attack Minorities" என பெயரிட்டுள்ளது.

அதில் சமீபத்தில் நடந்த 14 கொலைகளில் சம்பந்தப்பட்ட 11 தாக்குதல் சம்பவங்களில் அரசு எப்படி நடந்து கொண்டுள்ளது என்பதையும் பதிவு செய்துள்ளனர்.

பா.ஜ.க ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இருந்ததை விட, ஆட்சியில் இருந்த 2014-2018 ஆண்டுகளில் மதரீதியாக மக்களை பிளவுபடுத்தும் பேச்சுகளின் சதவிகிதம் ஏறக்குறைய 500 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்கிறது ழிஞிஜிக்ஷி நடத்திய ஆய்வு ஒன்று. இப்படி பேசியவர்களில் 90 சதவிகிதம் பேர் பா.ஜ.க கட்சியை சார்ந்தவர்கள்.

தங்களின் செயல்களுக்கு தண்டிக்கப்படுவோம் என்ற பயமே இல்லாததால் தாக்குதல்களை வீடியோவாக எடுத்து பரப்புகின்றார்கள் என்கிறார் சமூக ஆர்வலர் ஹர்ஷ் மந்தர். அவர்களுக்கு தெரியும் நம்மை யாரும் தண்டிக்கப் போவதில்லை என்று.

வெறுப்பு பேச்சுகளின் மூலம் மக்களை தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கின்றார்கள் பாசிஸ்டுகள். இவர்களை தண்டிக்க என்ன வழி?

ஆதாரம்: nytimes.com, Feb 18, 2019

**அபூஹாசின்**



தொடர் 14

# இஸ்லாம்

## அரசியல், அதிகாரம், அரபுலக எழுச்சி

எகிப்து நாடாளுமன்ற தேர்தலை தொடர்ந்து அதிபர் பதவிக்கான தேர்தல் நடந்தது. நாடாளுமன்ற தேர்தலோடு ஒப்பிடும் போது மே-ஜூன் 2012 -இல் நடந்த முதல் கட்ட அதிபர் தேர்தலில் குறைந்த வாக்குகளே பதிவானது. Freedom and Justice கட்சி சார்பில் முர்சி, ஹோஸ்னி முபாரக் ஆட்சியில் சிறிது காலம் பிரதமராக பதவி வகித்தவரும் முன்னாள் படைத்தளபதியுமான அஹ்மத் சபீக், நாசரின் ஆதரவாளர் ஹம்தீன் சபாஹி, அரபு அரசியல்வாதி அமிர் மூசா, MBH-லிருந்து வெளியேறிய அபுல் பதஹ் மற்றும் சிலரும் அதிபர் தேர்தல் களத்தில் போட்டியிட்டனர்.

முதலில் கைரத் அல் சத்தாரைத் தான் அதிபர் வேட்பாளராக தேர்ந்தெடுத்தது FJP. முபாரக்கின் ஆட்சி காலத்தில் சத்தார் சிறையில் இருந்தார். அவர் வெளியே வந்து ஆறு வருடம் கூட ஆகவில்லை. இது தேர்தல் விதிமுறைக்கு எதிரானது என்று அவருடைய வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின்னரே முர்சி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

23-24 மே 2012-இல் நடந்த முதற்கட்ட அதிபர் தேர்தலில் முஹம்மது முர்சியே முன்னிலை வகித்தார். இருந்தாலும் பெரும்பான்மை பெறத் தவறியதால் இறுதிகட்ட தேர்தலில் அஹ்மத் சபீக்குடன் போட்டியிட வேண்டியதாயிற்று. முதற்கட்ட தேர்தலில் 25 சதவீத வாக்குகளை பெற்று முர்சி முதலிடத்திலும் 23.7 சதவீத வாக்குகளைப் பெற்று சபீக் இரண்டாம் இடத்திலும் வந்தனர்.

நிலைமை எப்படி மாறிவிட்டது என்றால் யாருடைய ஆட்சிக்கு எதிராக போராடினார்களோ அவருடைய ஆட்சியில் பிரதமராக பதவி வகித்த அஹ்மத் சபீக்கே இரண்டாம் இடத்தில் வந்தார். நாடாளுமன்ற தேர்தலில் எப்படி இஸ்லாமியவாதிகள் வெற்றி பெற்றார்களோ அதேப் போன்ற வாக்கு சதவீதத்தை அவர்களால் பெற முடியவில்லை.. கடந்த தேர்தலில் 10 மில்லியன் ஓட்டுகளை பெற முடிந்த FJP, அதிபர் தேர்தலில் 5 மில்லியன் ஓட்டுகளையேப் பெற்றது. நான்கு மாதத்திற்குள் எப்படி செல்வாக்கு சரிந்தது என்பது கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

முதற்கட்ட தேர்தலில் செல்வாக்கு தேய்ந்து போன நிலையில், இறுதிகட்ட தேர்தலை வாழ்வா சாவா

என்ற நிலையில் தான் சந்தித்தனர் இஸ்லாமியவாதிகள். சிறிய அளவு மெஜாரிட்டியில் வெற்றி பெற முடிந்தது அவர்களால். புரட்சிக்குப்பின் எகிப்தின் அரசியல் களம் இஸ்லாமியவாதிகளுக்கு சொந்தமாகவில்லை என்பதை இது உணர்த்தியது. எகிப்து புரட்சியில் ஏதோ ஒரு தவறு நடந்திருக்கின்றது என்பதையும் உணர்த்தியது.

கோப்துக்களில் 95 சதவீத பேர் அஹ்மத் சபீக்குக்கே வாக்களித்தனர் என்றும் பழைய ஆட்சியாளருக்கே வாக்களியுங்கள் என அரசு ஊழியர்களுக்கு அவர்களின் எஜமானர்கள் உத்தரவிட்டனர் என்றும் சில அறிக்கைகள் தெரிவித்தன. முதற்கட்ட தேர்தலில் 23.7 சதவீத ஓட்டுகளை சபீக் பெற்றதற்கு அரசு நிறுவனங்களே பின்புலமாக செயல்பட்டன என்று குற்றம் சுமத்தினர் இஸ்லாமிய எதிர்த்தரப்பினர்.

இஸ்லாமியவாதிகள் ஆட்சிக்கு வருவதை ஏற்றுக் கொள்ள முடியாத மனநிலை அங்கே சிலரிடம் இருந்தது. எகிப்து அதிபராக முர்சியையோ அல்லது அஹ்மத் சபீக்கையோ ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்றது ஏப்ரல் 6 இயக்கம். இஸ்லாமியவாதிகள் வெற்றி பெறுவார்கள் என்று முன்னரே தெரிந்திருந்தால் நாடாளுமன்ற இறுதிகட்ட தேர்தலின் மேற்பார்வையிலிருந்து விலகியிருப்போம் என அறிவித்தார் எகிப்து நீதிபதிகளின் குழுமத்தின் தலைவர்.

இதையெல்லாம் தாண்டி இஸ்லாமியவாதிகள் வெற்றி பெற்ற பின், எந்த ஆட்சி முறையை விஙிபி எகிப்தில் கொண்டு வரும் என்ற பிரச்சனை எழுந்தது. துருக்கியின் ஆட்சி முறையா, பாகிஸ்தானா அல்லது ஈரானின் ஆட்சி முறையா என்ற கேள்வி எழுந்தது. இதற்கு, தங்களின் தனி வழியில் ஆட்சி அமைப்போம் என்றது MBH.

இதற்கிடையில், புதிய ஆட்சி ஏற்படுவதற்குள், சில முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தியது ஆயுத படைகளின் சுப்ரீம் கவுன்சில் (SCAF). தொடர்ச்சியான சில ஆணைகளை பிறப்பித்து தங்களின் ஆதிக்கத்தை காட்டியது. 13 ஜூன் 2012 - இல் பொதுமக்களை கைது செய்யவும் அவர்களை இராணுவ நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் SCAF-க்கு அதிகாரம் உண்டு என்று ஆணையைப் பிறப்பித்தது. சில தொகுதிகளில் நடைமுறை விதிகள் பின்பற்றப்படவில்லை என்று கூறி ஆறு மாதத்தில் நாடாளுமன்றத்தை கலைத்தது SCAF. அதிபருடைய பல அதிகாரங்களை தங்களுக்கு மாற்றி ஆணையை பிறப்பித்தது. உதாரணமாக இராணுவ தளபதியை நியமிக்கும் பொறுப்பை தனதாக்கி கொண்டது SCAF.

எனவே இஸ்லாமியவாதிகளின் தரப்பிலிருந்து பல கண்டனக்குரல்கள் ஒலித்தன. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைப்பதில் இராணுவத்திற்கு பெரிய உடன்பாடில்லை என்பதை இச்செயல்கள் நிரூபித்தன. இக்கட்டான நிலைமையில் இராணுவத்தை பகைத்து கொள்ளவும் இஸ்லாமியவாதிகள் விரும்பவில்லை.

## தவறு எங்கே நடந்தது?

அதிகார மாற்றம் நடைபெறுவதில் இராணுவத்திற்கும் MBH-க்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இவர்கள் இருவருக்குமிடையே மட்டுமல்ல ஆரம்பத்தில் இருந்தே போராட்டத்தில் பங்கு கொண்ட பொதுமக்களுக்கும் விஙிபி மற்றும் அதன் கூட்டணிகளுக்கும் இடையே ஒரு வித வெறுப்பு வளர்ந்தது.

ஜனவரி போராட்டத்தில் இளைஞர்களிடம் இருந்த புரட்சியின் வேட்கையை கண்டு போராட்ட காரர்கள் திருப்தியில் இருந்த அதே வேளையில் இந்த புரட்சிக்கு தனி உரிமை கொண்டாட எந்த இயக்கத்தையும் அனுமதிக்க வில்லை. இஸ்லாமியவாதிகளும் உரிமை கோருவதை அவர்கள் விரும்பவில்லை.

ஒட்டுமொத்தமாக பார்த்தால், தெருக்களில் குழுமிய மில்லியன் கணக்கான மக்களின் முதல் கோரிக்கைகள் சுதந்திரம், நீதி மற்றும் தன்மானம் என்பதே. ஷரியாவை கொண்டு வர வேண்டும் என்று விரும்பியவர்கள் இஸ்லாமியவாதிகள் தான். எந்தவித அமைப்புகளின் கீழோ அல்லது குறிப்பிட்ட சித்தாந்தங்களின் அடிப்படையிலோ இந்த போராட்டம் நடைபெறவில்லை என்பதில் போராட்டகாரர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஒட்டுமொத்த மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்வதில் இஸ்லாமியவாதிகள் தவறிழைத்தனர். இதிலிருந்துதான் பிணக்கு ஆரம்பித்தது. சில இயக்கங்கள் போராட்டத்தின் வெற்றிக்கு தாங்களே காரணம் எனக்கூறி அதற்கு சொந்தம் கொண்டாட முயற்சித்தனர். வெற்றியை மக்களோடு பகிர்ந்து கொள்ள தயக்கம் காட்டினர். இது புரட்சி யாளர்களுக்கு மத்தியில் ஏமாற்றத்தை உண்டு பண்ணியது. FJP அதிகபட்ச தவறுகளை இழைத்தது. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் மீது பல கனவுகளை கொண்டிருந்த மக்களுக்கு ஏமாற்றத்தை தந்தது தியிறி. நாங்கள் செய்து காட்டுவோம் எனக்கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தோற்று போனது. வீழ்ச்சிக்கு இது முக்கிய காரணம்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்

**அபூஹாசின்**



# பாலஸ்தீனின் வீரத் தாய்

பாலஸ்தீனத் தாய் ஒருத்தியின் வாழ்க்கையைப் பார்ப்போம். நாமாக அதைச் சொல்லிட வேண்டிய அவசியமில்லை. அந்தத் தாயே அதை சொல்கின்றாள். கேட்போம் வாருங்கள்.

அதற்கு முன்னால் ஒரு விஷயத்தை நினைவில் கொள்வோம். நமது முதல் கிப்லா பைத்துல் முகத்தஸ் மீட்கும் போரை முன்னின்று நடத்துபவர்கள் பெண்களும் மாணவர்களும் தான். அவர்களின் போர் வெற்றி பெற நாம் துஆ செய்வோம்!

இனி அந்த பாலஸ்தீனத் தாய் தன் கதையைக் கூறுவதைக் கேட்போம்:

“என் மகன் யூசுஃப்.

அவன் யூதர்கள் முஸ்லிம்களிடமிருந்து ஆக்கிரமித்த பகுதிகளை மீட்கப் போராட போவான். நாதர் என்ற யூதர்கள் ஆக்கிரமித்த பகுதிகளுக்குப் போய் யூத ராணுவத்தைக் கல்லால் அடிப்பான். இதைத்தான் நமது சிறுவர்களில் பலர் அங்கே செய்து கொண்டிருந்தார்கள். அப்போது முஹம்மத் அத்துர்ரா என்ற 12 வயது முஸ்லிம் சிறுவன் யூத ராணுவத்தினரின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகி இருந்தான்.

இப்படி சிறுவர்களை இராணுவத்தை ஏவி சுட்டது போதாதென்று விமானப் படையை ஏவி ஏவுகணை தாக்குதல்களையும் நடத்தியது இஸ்ரேலின் ராணுவம். இதில் பல அப்பாவி மக்கள் இறந்தார்கள். பல வீடுகள் இடிக்கப்பட்டு தரைமட்டம் ஆக்கப்பட்டன. இந்த நிகழ்வுகள் எல்லாம் மகன் யூசுஃப் – ஐ பெரிய அளவில் பாதித்தன.

முஹம்மத் அத்துர்ரா ஷஹீதான (இறைவனின் வீர மரணத்தைத் தழுவிய) அன்றைய தினம் தன்னை வெளியே செல்ல அனுமதிக்க வேண்டும் என என்னை கட்டாயப்படுத்தினான். மூன்று முறை என்னை நிர்பந்தப் படுத்தினான்."

"உம்மா! நான் ஷஹீதாக விரும்புகிறேன்" எனச் சொல்லிக் கொண்டே இருந்தான். எனக்கு அனுமதி தாருங்கள் என என்னை வற்புறுத்தினான்.

நான், "என்னையும் உன்னோடு அழைத்துக் கொண்டு செல்!" எனக் கூறிக் கொண்டே இருந்தேன்.

"நீங்கள் வந்து என்ன செய்வீர்கள்?" என்று அவன் என்னைக் கேட்டான்.

"நான் உனக்கு கல் பொறுக்கித் தருகிறேன்" என்றேன்.

"வேண்டாம். என சிறிய தம்பிகளை நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள். நான் போய் வருகிறேன் என்றான்" அவன்.


"அல்லாஹ் உன் பாதையை மறைத்து வைப்பானக! போய் வா" என நான் அனுமதி வழங்கினேன். பின்னர் என் மகன் வீட்டுக் கூரையில் ஏறி யூதர்களுக்கெதிரான கோஷங்களை எழுதினான். அதிகாலை வரை அங்கேயே இருந்தான். பஜ்ர்(வைகறை) தொழுகையின் வேளை வந்தது. குளித்தான். சுப்ஹ் தொழுதான்.


சூரிய உதித்த பின் யூதர்களைக் கற்களால் எதிர்கொள்ளவும் அல்லாஹ்வை ஷஹீதாகிச் சந்திக்கவும் தன் நண்பர்களோடு வெளியேறி விட்டான்.


ஆமா! அவன் ஷஹீத ஆகிவிட்டான். அந்தத் தாய் ஒரு ஷஹீதின் தாய் என்ற அந்தஸ்தைப் பெற்றாள். இந்த ஷஹீதுகளால் ஊக்கமும், உற்சாகமும் பெற்று தொடர்கின்றது இந்தப் போர் இன்றளவும்.



யூசுஃப் மூன்று முறை முயன்றான் ஷஹீத் என்ற அந்தஸ்தை அடைய. நான்காவது முறை இலட்சியத்தை அடைந்து விட்டான். தொடருகின்றது இந்தப் போர் இன்றளவும்.

- எம்.ஜி.எம்.





வேர்கள் வெளியீட்டகம்
8148129887
8248208144
52/1, மண்ணடி தெரு,
மண்ணடி,
சென்னை - 600001.

بسم الله الرحمن الرحيم

# 39 ஆம் ஆண்டில் தா:வா



## தாஃவா சுற்றுப் பயணங்கள்



நாகர்கோவில் - 29/07/2018

# அகிலத்தைப் படைத்த அல்லாஹ் கேட்கின்றான்;

## “எவர் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்து, நற்செயல்களைச் செய்து நிச்சயமாக நான் முஸ்லிம்களில் ஒருவன் என்று கூறுகின்றாரோ அவரை விட சொல்லால் அழகியவர் யார்?” (அல்குர்ஆன்: 41:33)

இந்த அழகியச் சொல்லை, செயலை லட்சியமாகக் கொண்டவர்கள் முஸ்லிம்கள். அதனால் முஸ்லிம்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள். பெருமானார் முஹம்மத்(ஸல்) அவர்களுக்குப் பின் உலக மக்களுக்கு நேர்வழி காட்டிட ஒரு நபி வரப்போவதில்லை. திருக்குர்ஆனுக்குப் பின் இன்னொரு இறைவேதம் - இறைவழிகாட்டுதல் அருளப்படப் போவதில்லை. ஆகவே இந்த உலகில் வாழும் முஸ்லிம்கள் தாம், இஸ்லாம் என்ற இறைவனின் வழிகாட்டுதலை உலக மக்களுக்கு எடுத்துச் சொல்லிட வேண்டும். இந்த மாபெரும் பொறுப்பை, இறைவன் முஸ்லிம் சமுதாயத்திடம் ஒப்படைத்தான் - இப்படி;

“விசுவாசிகளே! அவ்வாறே நடுவு நிலை சமுதாயத்தினராகவும் நாம் உங்களை ஆக்கினோம். ஆகவே நீங்கள் மற்ற மனிதர்களுக்கு வழிகாட்டக் கூடிய சாட்சியாக இருங்கள். நம்முடைய தூதர் உங்களுக்கு வழிகாட்டக் கூடிய சாட்சியாக இருப்பார்.” (அல்குர்ஆன்: 2:143)

### இறுதி ஹஜ் தினத்தில்

அது பெருமானார்(ஸல்) அவர்களின் இறுதி ஹஜ். அது குர்பானின் நாள். அங்கு குழுமியிருந்த முஸ்லிம்களிடம் உரை நிகழ்த்தினார்கள். அதன் இறுதியில் இப்படிக் கேட்டார்கள்;

“நான் இறைவனின் தூதை உங்களிடம் ஒப்படைத்து விட்டேனா?”

குழுமியிருந்த முஸ்லிம்கள், “ஆம்! நீங்கள் ஒப்படைத்து விட்டீர்கள். உங்கள் கடமையை நிறைவேற்றினீர்கள். இதற்கு நாங்கள் சாட்சி!” எனப் பதில் சொன்னார்கள்.

உடனேயே இறைவனின் தூதர்(ஸல்) அவர்கள் ஆகாயத்தை நோக்கி தன் கைகளை உயர்த்தினார்கள். நீயே இதற்கு சாட்சி என மூன்று முறை கூறினார்கள். பின்னர் அங்கே குழுமியிருந்த மக்களிடம்;

“இங்கே வந்திருப்பவர்கள், இங்கே வராதவர்களுக்கு இந்தத் தூதை (இஸ்லாத்தை) சென்று சொல்லுங்கள். அவர்கள் உங்களை விட நன்றாகப் புரிந்து கொள்பவர்களாக இருப்பார்கள்.” என பணித்தார்கள்.(ஷஹீஹுல் புகாரி: 1/234)

மிகச் சாதாரணமாகத் தோன்றும் இதனை அங்கு குழுமியிருந்த முஸ்லிம்கள் அதன் உண்மையான ஆழத்தோடு புரிந்து கொண்டார்கள். இந்தச் சொற்கள் தம்மை நோக்கி இறைவனின் இறுதி தூதர்(ஸல்) அவர்கள் இடும் கட்டளை என்பதை உணர்ந்தார்கள்.

அதனால் தான் தாங்கள் ஹஜ்ஜுக்கு வந்த வாகனங்கள் எந்த திசையை நோக்கி நின்றனவோ, அந்தத் திசையை நோக்கி தங்கள் பயணத்தைத் தொடங்கினார்கள். இஸ்லாத்தை இகமெங்கும் எடுத்துச் சொல்லும் இலட்சியத்தை கடமையை நிறைவேற்றினார்கள்.

**Islam the Misunderstood Religion. By Muhammed Qutb. Misri**

அந்தப் பிரச்சாரப் பெரும் பயணத்திலேயே தங்களைத் தந்தார்கள். பலர் அந்த அரபு நாட்டுக்குத் திரும்பியதே இல்லை.

அவர்களின் அளப்பரிய தியாகம், ஒய்வறியா உழைப்பு இவற்றின் காரணமாக, அறியப்பட்ட உலகின் அரைப் பகுதி இஸ்லாத்தின் கீழ் வந்தது.

**(Source: Glimpses of World History; By Pundit Jawaharlal Nehru)**

# எமது தாஃவா முயற்சிகள் - நிகழ்ச்சிகள்

- பெரு நாள் சந்திப்பு நிகழ்ச்சிகள்.
- தொடர் தாஃவா சுற்றுப் பயணங்கள்.
- இளைய சமுதாயத்தவர்களுக்கு தாஃவா செய்யும் உத்திகளைக் கற்றுத் தரும் பயிற்சி பாசறைகள்.
- தாஃவா கருத்தரங்கங்கள்.
- திருக்குர்ஆன் இலவச விநியோகம்.
- இஸ்லாத்தை அறிமுகப்படுத்தும் இலக்கியங்களின் இலவச விநியோகம்.
- “நாங்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோம்” என்பதை இஸ்லாத்தைத் தழுவியவர்கள் சொல்ல, அதை மக்களிடம் கொண்டு செல்லும் இலக்கியங்களின் இலவச விநியோகம்.
- நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகள் , அறிமுக நிகழ்ச்சிகள் என்ற அடிப்படையில் இஸ்லாத்தை பிரச்சனைகளின் தீர்வாக வைத்து விவாத அரங்குகள்.
- இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் மடக்கோலைகள் இலவச விநியோகம்.
- இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எதிர் கொள்ளும் பிரச்னைகளில் உதவி.
- திருமண உதவிகள்.
- கள ஆய்வுகள் வழி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் வாழ்க்கையில் இஸ்லாத்தின் தாக்கத்தை ஆய்வு செய்வது.
- ஆலோசனைகள், அறிவுரைகள், உதவிகள் வழங்குவது.
- அவர்களில் தனித்து வாழ்பவர்களை முஹல்லாக்களோடு இணைப்பது.
- இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கான கல்விக் கூடங்கள்.
- மால்கம் - X போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்றை முன் வைத்து ஒடுக்கப்பட்ட, அமுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு இஸ்லாமே தீர்வு எனப் பிரச்சாரம் செய்வது.
- வீதிகளில் பிரச்சாரங்கள். மடக்கோலைகள் இலவச விநியோகம்.
- தாஃவாவை - இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியை அண்டை மாநிலங்களுக்குக் கொண்டு செல்வது.
- உலக அரங்கில் நமது தாஃவா இலக்கியங்கள்.



# தாஃவா கருத்தரங்கங்கள்

இந்திய பெருங்குடி மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கும் ஆண்டாண்டு காலமாக மக்களைக் கவ்விப் பிடித்து வரும் பிரச்சனைகளுக்கும் இஸ்லாத்தில் தான் தீர்வு உண்டு. இஸ்லாம் வழங்கிடும் தீர்வை விளக்கிச் சொல்லி, அதே மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் கருத்தரங்கங்களே இந்தத் தாஃவா கருத்தரங்கங்கள். இதில் பொதுவுடமை கருத்தை சார்ந்தவர்கள், திராவிட இயக்கத்தை சார்ந்தவர்கள், தமிழ் தேசியம் பேசுவோர், ஜனநாயகம், மத சார்பின்மை ஆகியவற்றை நம்பி நிற்போர் அனைவரும் அழைக்கப்படுகின்றார்கள். இவர்கள் அனைவரும் அவரவர்களின் கருத்துக்களைச் சொல்லிட முழுமையான கால அவகாசம் வழங்கப்படுகின்றது. இவர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்ன பின் இஸ்லாம் இந்த பிரச்சனைகளை எப்படி தீர்த்து வைக்கும் என்று தெளிவுப்படுத்தப்படும். இறுதியில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எப்படி இஸ்லாம் தங்கள் பிரச்சனையைத் தீர்த்தது என்பதை விளக்கிச் சொல்வார்கள். பல நேரங்களில் கேள்விப் பதில் நிகழ்ச்சிகளும் இடம் பெறும். இதன் மூலம் கலந்து கொள்பவர்களின் அனைத்து ஐயங்களும் தெளிவுப்படுத்தப்படுகின்றன.





நிகழ்ச்சியின் நடுநடுவே பலமுறை மின்சாரம் தடைபட்டு இருட்டானது. ஆனால் அப்போதும் கலைந்து செல்லாமல் ஆணியடித்தது போல் அமர்ந்திருந்து தங்களது கைபேசியில் இருந்த விளக்குகளை எரியவிட நிகழ்ச்சி தொடர்ந்தது, ஓர் அற்புதமான நிகழ்வு.

# 08.07.2018 அன்று சென்னை புளியந்தோப்பில் நடந்த தாஃவா - கருத்தரங்கம் நிகழ்ச்சி





நிகழ்ச்சியின் இறுதியில் ஆர்வத்துடன் மு.குலாம் முஹம்மது அவர்களுடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்ட தலித் சகோதரர்கள்.

**திருப்பூர் மாவட்டத்தின் எல்லையில் உள்ள கடைக்கோடி கிராமம் திருமலைக் கவண்ட பாளையம். அவினாசி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அவ்வூரிலுள்ள உயர் நிலைப் பள்ளியில் சத்துணவு செய்யும் பணியாளர் பாப்பம்மாள் என்பவரை அவ்வூரைச் சார்ந்த ஆதிக்கச் சாதியினர், "சக்கிலியர் சமைத்து எங்கள் குழந்தைகள் எப்படி சாப்பிடுவது" என்று ரகளையில் ஈடுபட்டனர். தகவல் அறிந்த நாம் பாப்பம்மாளை சந்தித்து ஆறுதல் கூறி, சாதி ஒழிந்தது நூலை கொடுத்து வந்தோம்.**



# இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் இலக்கியங்களின் இலவச விநியோகம்

நமது தாஃவா சுற்றுப்பயணங்கள், பெறுநாள் சந்திப்பு நிகழ்ச்சிகள், இவற்றின் போதும் நமது சார்பில் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பவர்களும் மக்களைச் சந்திக்கும் போதெல்லாம் இஸ்லாத்தை விளக்கி சொல்லும் இலக்கியங்களை இலவசமாக விநியோகித்து வருகிறார்கள்.

இஃதல்லாமல், சிறைவாசிகள் தபால்கள் எழுதி இந்த நூல்களை பெற்று படித்து வருகின்றார்கள்.

சிறைவாசிகளால் பெரிதும் படிக்கும் நூலாக மால்கம் எக்ஸ் (எ) மாலிக் அல் ஷாபாஸ் இருந்து வருகின்றது.

சிறையில் வாடும் கைதிகளில் பலர் சமூக கொடுமைகளுக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள். பின்னர் குற்றச் செயல்களைச் செய்திட தள்ளப்பட்டவர்கள். அல்லது பொய் வழக்குகளில் சிக்க வைக்கப்பட்டவர்கள். இவர்கள் மால்கம் எக்ஸ்-இன் வாழ்க்கையை படித்துவிட்டு, பத்தாண்டுகளுக்கு முன் இந்த நூல் என் கைகளில் கிடைத்திருந்தால் என் வாழ்க்கைப் போக்கே மாறி இருக்குமே என அங்கலாயித்தனர்.

ஏனெனில் மால்கம் எக்ஸ் (எ) மாலிக் அல் ஷாபாஸ் அமெரிக்க நிறவெறியின் சதியால், சிறை, சித்ரவதைகளை சந்தித்தவர். பின்னர் புரட்சியாளராய் நிறவெறியிலிருந்து லட்சக்கணக்கான மக்களை விடுவித்தவர். சிறைவாசிகள் புரட்சியாளர்களாக மாறிட முடியும் என்பதை எடுத்துச் சொல்லும் நூல் அது.

ஆக சிறைவாசிகள் கேட்கும் போதெல்லாம், இந்த நூல் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது.

மால்கம் எக்ஸ் (எ) மாலிக் அல் ஷாபாஸ்-ஐ தொடர்ந்து சகோதர சமுதாயத்தை சார்ந்த மக்களால் அதிகமாகப் படிக்கப்படும் நூல்கள்

- ❖ இஸ்லாம் தவறாக புரிந்து கொள்ளப்பட்ட மார்க்கம்
- ❖ இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும்
- ❖ இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் குற்றங்களை அழிக்குமா? வளர்க்குமா?
- ❖ பெண்ணின் பெருமை காத்த இஸ்லாம்
- ❖ இஸ்லாம் இதர கொள்கைகளை வெல்லுமா?
- ❖ ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்
- ❖ செந்தமிழ் நாட்டுச்சேரிகள்
- ❖ ஜாதி ஒழிந்தது
- ❖ சிந்திப்பீர் செயல்படுவீர்
- ❖ நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?
- ❖ அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?
- ❖ தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்.

இந்த இலவச நூல்களின் விநியோகத்திற்காக குறையாமல் 4 லட்சம் ரூபாய் வரை செலவிடுகின்றோம்.

# திருக்குர்ஆன் இலவச விநியோகம்

அல்லாஹ்வின் அழகிய வழிகாட்டுதல்கள் அனைவருக்கும்



**மனிதன் இந்த உலகில் எப்படி வாழ்ந்திட வேண்டும்? என்பதை விளக்கி சொல்லும் அல்லாஹ்வின் அறுதி வேதமே அல்குர்ஆன். இது மனிதர்கள் அனைவருக்காகவும் அருளப்பட்ட வேதம். இதனை அறிந்திட அவாவுறுவோர், தங்கள் முகவரியுடன் நமது அலுவலகத்திற்கு எழுதவும். அல்குர்ஆன் மற்றும் தபால் செலவு இலவசம்.**

**இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கில்லை.**

இப்படி ஓர் அறிவிப்பை நமது பத்திரிகை வழியாகவும் இதர ஊடகங்கள் வழியாகவும் அடிக்கடி செய்து வருகின்றோம். நாம் விநியோகிக்கும் இலவச மடக்கோலைகளிலும் இந்த அறிவிப்பு இடம் பெறுகின்றது.

இந்த இலவச விநியோகத்தை சகோதர சமுதாயத்தை சார்ந்தவர்கள் நன்றாகவே பயன்படுத்தி வருகின்றார்கள். வருடந்தோறும் 100 முதல் 120 திருக்குர்ஆன் பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

**இதனை படிக்கின்ற சிலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். அல்லாஹ்வே நேர்வழியின்பால் மக்களை ஈர்ப்பவன். புகழுக்குரியவன்.**

# இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களின் பிரச்னைகளில் உதவி

39 ஆண்டுகாலமாக தாஃவா களத்தில் நாம் சந்தித்த வழக்குகள் பலப்பல. அவற்றை நாம் எதிர்கொண்டோம். வெற்றி கொண்டோம்.

சில நேரங்களில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் மீது வழக்குகளைத் தொடர்ந்துள்ளார்கள். அந்த வழக்குகளையும் எதிர் கொண்டு வருகின்றோம்.

தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் சமூக தளத்தில் போராடிக்கொண்டிருக்கும் போது அவர்கள் மீது பல்வேறு வழக்குகள் புனையப்படுகின்றன.

இந்த வழக்குகள் அவர்கள் சமூகத்தளத்தில் போராடியதற்காகப் புனையப்பட்ட வழக்குகளாகும். ஆனால் வழக்குகளில் காட்டப்படும் காரணங்கள் வேறு வேறாக இருக்கும்.

இந்நிலையில் இந்த சமூகப்போராளிகள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டால் அவர்களை அப்படியே ஏற்றுக் கொள்கின்றோம். வழக்குகளில் சட்ட ரீதியான உதவிகளை வழங்கி வருகின்றோம்.

இந்த வகையில் எதிர்படும் செலவுகளுக்கு முழுமையாகப் பொறுப்பேற்று வருகின்றோம். பல வழக்குகளிலிருந்து அவர்களை விடுவித்திருக்கின்றோம்.

பல நேரங்களில் இந்துத்துவவாதிகள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வருபவர்களை வழி மறிக்க, காவல்நிலையங்களை நாடுகிறார்கள். இதனால் ஏற்படும் சிரமங்களையும் எதிர்கொண்டு அந்த மக்களுக்கு சுதந்திரமான சூழலை ஏற்படுத்தி இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய சட்ட உதவிகளை நல்கி இருக்கின்றோம்.

# இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் வழி தாஃவா

இஸ்லாத்தை மக்கள் மனதில் பதிய வைப்பதற்கான சிறந்த வழி இஸ்லாத்தை ஏற்று கொண்டவர்களின் வாழ்வும் அவர்கள் தரும் விளக்கங்களும்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள், சமூக நீதிப்போராளிகளாக இருந்த போது அவர்கள் தாங்கள் ஏன் போராளிகளாக மாறினோம். தீர்வுகளை தேடினோம். அதில் கிடைத்தவை என்னென்ன? இறுதியில் ஏன் இஸ்லாத்தை தேர்ந்தெடுத்தோம்? இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பின் எப்படி சமூக கொடுமைகளிலிருந்து விடுதலை அடைந்தோம்?

எத்தகையதொரு வாழ்க்கையை பெற்றுள்ளோம் என்பனவற்றை விளக்கி சொல்லிடும் போது மக்கள் மனமாற ஏற்றுக்கொள்கிறார்கள்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு விடுதலையடைந்த சமூகப்போராளிகளின் வாழ்க்கையை அவர்களைக் கொண்டே விளக்கிச் சொல்வதோடு, அவர்களின் வாழ்கை வரலாற்றை நூலாகவும் கொண்டு வருகின்றோம்.

நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகளையும் நடத்துகின்றோம். யதார்த்தங்களை உணருபவர்கள் இஸ்லாத்தில் இணைகிறார்கள். பின்னர் இஸ்லாத்தை பிரச்சாரமும் செய்கின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ் அந்த வகையில் வெளி வந்த சில நூல்கள்:

- ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்
- கூரியூர் ஜின்னா ஷஹீத் (வாழ்க்கை வரலாறு)
- சாதி ஒழிந்தது (தலித்கள் நடத்திய போராட்டத்தின் வரலாறு)
- செந்தமிழ் நாட்டுச் சேரிகள்

என விரிவடைகின்றன. இதில் ஜாதி ஒழிந்தது என்ற நூல் ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் வெளிவந்துள்ளது.

# மடக்கோலைகள் - “வாழ்வின் நோக்கம்”

அதீத வேகத்தோடு மனிதன் இயங்குகின்றான். சரியாக உணவுண்ணக் கூட நேரமில்லை. சம்பாதிக்கின்றான். சில பல நேரங்களில் சாதிக்கின்றான். ஆனால், இந்த உலகில் நாம் ஏன் வாழ்கின்றோம். மரணம் என்றொன்று நம்மையும் பீடிக்குமே! மரணம் வரை தான் வாழ்க்கையா? இல்லை, அதற்கு மேலும் உண்டா? என்பனவற்றை சிந்திக்க தவறி விடுகின்றான்.

உண்மையைச் சொன்னால் இந்த உண்மைகளின் பக்கம் அவன் தன் கவனத்தை திருப்பிட இயலுவதில்லை. நேரமில்லை.

யதார்த்தங்கள் எதிர்படும் போது மலைக்கின்றான். அதனால் அவனது கவனத்தை வாழ்வின் நோக்கத்தை நோக்கித் திருப்பிவிட வேண்டியதிருக்கின்றது.

இந்த அரிய பணியை நாம் வெளியிட்டுள்ள வாழ்வின் நோக்கம் என்ற மடக்கோலை தாராளமாக செய்தது, சாதித்தது. அல்ஹம்துலில்லாஹ்.

தங்களுடைய வேகமான வாழ்க்கை ஓட்டத்திற்கிடையேயும் நாம் தந்திடும் "வாழ்வின் நோக்கம்" என்ற சிற்றேட்டை படித்தார்கள். அது அவர்களை சிந்திக்க வைத்தது. இந்த சிற்றேட்டில் "இறைவன் உங்களுக்காக அருளிய வாழ்க்கை வழிகாட்டுதலை அறிந்திட வாசியுங்கள் அல்குர்ஆன்-ஐ, அதன் தமிழாக்கத்தை இலவசமாகவே அனுப்பித் தருகின்றோம்” எனக்கூறி அவர்களின் கவனத்தை அல்குர்ஆனின் பக்கம் திருப்புகின்றோம்.

என்ன ஆச்சர்யம் ! அல்குர்ஆனை வாங்குகின்றார்கள். படிக்கின்றார்கள். பலர் இஸ்லாத்தை ஏற்றிருக்கின்றார்கள். அவர்களுக்கு நேர்வழியை நல்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

வாழ்வின் நோக்கம் என்ற இந்த மடக்கோலைகளை லட்சக்கணக்கில் விநியோகித்துள்ளோம். இன்னும் விநியோகித்து வருகின்றோம். (மாஷா அல்லாஹ்)

## கள ஆய்வு

# இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எப்படி வாழ்கின்றார்கள்?

தாஃவா களம் - இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் களம். தூர நோக்கோடும் தொலைநோக்கோடும் பார்த்திட வேண்டிய ஒன்று.

இந்த வகையில் நாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தனி மனிதர்களும், குடும்பங்களும் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்? என்பதை ஒரு கள ஆய்வு மூலம் வருடத்தில் குறையாமல் ஒரு முறையாவது கண்டு வருகின்றோம்.

அல்லாஹ்வின் மிகப்பெரிய கிருபையினால் அவர்கள் தொடக்க காலத்தில் எதிர் கொண்ட பிரச்னைகளிலிருந்து நிச்சயமாக வெளி வந்திருக்கின்றார்கள்.

முஸ்லிம் சமுதாயம் அவர்களை அன்போடு அழைத்து ஆதரவு செலுத்தி வருகின்றது. சமத்துவத்தை எதிர்பார்த்து வந்த மக்கள் அதனை நன்றாக அனுபவிக்கின்றார்கள். அவர்களில் பலர் முஸ்லிம் முஹல்லாக்களின் தலைவர்களாகவும் செயலாளர்களாகவும் பொறுப்பேற்று முஸ்லிம் முஹல்லாக்களை வழிநடத்தி வருகின்றார்கள்.

இவர்களின் இளவல்கள் பலர், ஆலிம் பட்டம் பெற்று தமிழகமெங்கும் உள்ள முஹல்லாக்களில் இமாம்களாக பொறுப்பேற்று ஐங்கால தொழுகைகளை தலைமையேற்று நடத்தி வருகின்றார்கள்.

இன்னும் பலர் தங்கள் மக்களை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு கொண்டு வந்திட அதாவது இஸ்லாத்திற்கு கொண்டு வந்திட உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனுடன் அமுக்கப்பட்ட மக்களின் பிரச்னைகளை தீர்த்திடவும் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பெரும்பாலும் வாழ்வில் தொழுகையை நிலைநாட்டி வருகின்றார்கள். ஸக்காத்தை பெற்று வந்த மக்கள் இப்போது ஸக்காத்தை கொடுத்து வருகின்றார்கள். குர்பானும் தவறாமல் கொடுக்கின்றார்கள். நல்ல முஸ்லிம்களாக வாழ்கின்றார்கள்.

இதற்காக நாம் கடந்த 39 ஆண்டுகளாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். நிலையான, நிறைவான வாழ்க்கை வழிகாட்டலை தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

இந்த வெற்றி சில நல்லுள்ளங்கொண்ட முஸ்லிம் தனவந்தர்களுக்கும் சொந்தம். அவர்கள் இன்னும் உதவிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நற்கூலிகளை நல்கிடுவானாக!

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களை அவர்களுடைய பழைய இருப்பிடங்களிலேயே விட்டுவிடாமல் முஸ்லிம்களின் முஹல்லாக்களில் குடியமர்த்தும் பணிகளையும் செய்து வருகின்றோம்.

# பிற மாநிலங்களில் தாஃவா
## 1990 முதல் தொடரும் பணி...!

### கர்நாடகம், டெல்லி, உத்திரபிரதேசம், பீகார், கேரளம்



39 ஆண்டு காலமாக தொடர்ந்து வரும் இந்த தாஃவா நெடும் பயணத்தில் நாம் 1990 ஆம் ஆண்டு முதலே அண்டை மாநிலங்களில் மெல்ல, மெல்ல ஆனால் உறுதியாக கால் பதித்தோம்.

1990ஆம் ஆண்டு கொடிக்கால் ஷேக் அப்துல்லாவின் "புறப்படு நீயும் இஸ்லாத்தை நோக்கி" என்ற நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டோம். இந்த வெளியீடு அப்போது நாம் மயிலாடுதுறையில் நிறுவி நடத்தி வந்த "இலக்கிய பணிமனை" என்ற வெளியீட்டகத்தில் வெளிவந்தது. அதன் ஆங்கில ஆக்கத்திற்கு Let us March Towards Islam என்று பெயர்.

அதனை தொடர்ந்து நாம் மேற்கொண்ட முயற்சிகளின் வழி 1995ம் ஆண்டு அலிகர் பல்கலைக் கழகத்தின் ஹிந்தி துறையில் ஹிந்தியில் இந்நூல் வெளியிடப்பட்டது. அன்றே தாஃவா நமது தலைநகர் டெல்லியில் தொடங்கி, ஹிந்தி கூறும் உலகெங்கும் பரவியது.

2002ம் ஆண்டில் இந்த நூலைக் கன்னட மொழியில் மொழி பெயர்த்து நமது வேர்கள் வெளியீட்டகத்தில் வெளியிட்டோம். எடுத்த எடுப்பிலேயே சுமார் 10 ஆயிரம் பிரதிகளை இலவசமாக விநியோகித்தோம்.

அதன்பின் அங்கு தாஃவா களத்தில் வேலை செய்யும் பல்வேறு அமைப்புகளோடும் நமது தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் இணைந்து பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தோம். அவர்கள் ஏற்பாடு செய்த தாஃவா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு உரையாற்றினோம். இந்த முயற்சிகள் வழி பலர் இஸ்லாத்தை ஏற்றார்கள். பல்வேறு நிறுவனங்களில் இணைந்து கல்வியும் கற்றார்கள்.

தொடர்ந்து டி.எம்.உமர் பாரூக் அவர்களின் "ஜாதி ஒழிந்தது" என்ற நூலை நவம்பர் 2013 ஆம் ஆண்டு கன்னட மொழியில் வேர்கள் வெளியீட்டகத்தின் சார்பில் மொழி பெயர்த்து வெளியிட்டோம். அதிலும் சுமார் 5000 பிரதிகள் வரை இலவசமாக விநியோகித்தோம்.

ஹிந்தி மொழி பெயர்ப்பு நூலின் வெளியீட்டு நிகழ்ச்சி உத்திரப் பிரதேசத்தின் தலைநகர் லக்னோவில் தொடங்கி இந்த இலவச வினியோகம் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது அல்ஹம்துலில்லாஹ்

கன்னட மாநிலத்தை பொறுத்தவரை தமிழை தாய் மொழியாகக் கொண்டவர்கள் நிரம்பவே வாழுகின்றார்கள். ஆகவே நமது தாஃவா இலக்கியங்கள் தமிழில் வருபவை எல்லாம் பெங்களூரிலும் வெளியிடப்படுகின்றன. அவற்றைத் தொடர்ந்து தமிழ் கூறும் நமது சகோதர சமுதாயத்தவர்களுக்கு இலவசமாகவும் விநியோகிக்கப்படுகின்றன. 2010ஆம் ஆண்டில் ஜாதி ஒழிந்தது என்ற டி எம் உமர் பாரூக் அவர்களின் நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வேர்கள் வெளியீட்டகத்தின் வழி வெளியிட்டோம். இந்த வெளியீடு டெல்லியில் நடந்தது. ஆங்கிலத்தில் நூலின் பெயர் End of Casteism.

ஆங்கில நூல் வடமாநிலத்து வாசகர்களிடையே ஏற்படுத்திய தாக்கம் அலாதியானது. இவர்கள் தந்த அழுத்தத்தால் தான் இதன் ஹிந்தி வெளியீடு தயாரானது. டெல்லியில் நடந்த நமது நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சியை ஈடிவி என்ற தொலைக்காட்சி உலகமெல்லாம் பரப்பியது குறிப்பிடத்தக்கது. இதன் அடிப்படையில் பல வெளிநாட்டு அழைப்புகள் உமர் பாரூக் அவர்களுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது. இப்போது ஆங்கில நூலும் ஹிந்தி நூலும் ஒன்றுபோல் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

பீகார் மாநிலத்தின் தலைநகர் பாட்னாவில் வருடம்தோறும் ஒரு புத்தகக் கண்காட்சி மாநில அளவில் நடைபெறுகின்றது. இந்த புத்தகக் கண்காட்சியில் "ஜாதி ஒழிந்தது" நூல் இந்தி மொழியிலும் ஆங்கில மொழியிலும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. அங்குள்ள நல்ல உள்ளம் கொண்டவர்கள் இதனை செய்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

இப்படி நமது தாஃவா பணிகள் அகில இந்திய அளவில் நிலை கொண்டு பரவி வருகின்றது

## சர்வதேச அளவில் நமது தாஃவா இலக்கியங்களின் தாக்கம்

2008-2009ஆம் ஆண்டுகளில் கீழ்த்திசை நாடுகளில் தாஃவா பயணம் ஒன்றை மேற்கொண்டோம். அங்கே பலர் தாஃவாவில் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பதில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இருக்கின்றார்கள். மகத்தான வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மலேசிய வானொலியில் தாஃவாவை நடத்திக் கொண்டிருந்த ப.மு.அன்வர் அவர்களை சந்தித்தோம். எங்களைக் கண்டதும் ஜாதி ஒழிந்தது நூலைப் பற்றி பேசினார். அந்த நூலை அவர்கள் அச்சிட்டு பல ஆயிரம் பிரதிகளை விநியோகித்து விட்டதாகவும் அதனை படித்த பலரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாகவும் கூறினார்கள். மகிழ்ச்சி அடைந்தோம் எல்லா புகழும் இறைவனுக்கே!

அதே போலவே மால்கம் எக்ஸ் நூலும் அச்சிட்டு வினியோகிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் உங்கள் அனுமதி இல்லாமல் அதனை அச்சிட்டோம். எப்போதாவது உங்களை சந்திக்கும் போது ஏதாவது செய்யலாம் என்று இருக்கின்றோம் என்றார். அந்த நூலைப் படித்த பலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதே மிகவும் சந்தோஷமான விஷயம். அல்லாஹ்விடமே அதற்கான கூலியை எதிர்பார்க்கின்றோம் என்றும் எங்கள் ஹக்கில் துஆ செய்யுங்கள் என்றும் கூறினோம்.

மலேசியாவில் உள்ள தாஃவா மையத்தில் நாம் வெளியிட்ட மால்கம் எக்ஸ் நூல் மிகவும் பிரபல்யம் அடைந்து இருந்தது. இந்த தாஃவா மையத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இஸ்லாத்தை நடைமுறைப்படுத்தும் பயிற்சிகளையும் முழுமையான இஸ்லாமிய கல்வியையும் ஊட்டி வருகின்றார்கள். இங்கே நாம் வெளியிட்ட "இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள்" (இது மு.குலாம் முஹம்மது அவர்களின் மொழிபெயர்ப்பில் வெளிவந்தது) பாடத் திட்டத்தில் இடம் பெற்றிருந்தது. அதேபோல் மால்கம் எக்ஸ் நூல் அவர்களின் நூல் நிலையத்தை அலங்கரித்திருந்தது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அதேபோல் புருணை நாட்டிலும் இதுவே நடைபெற்றது. அங்கேயும் நமது மால்கம் எக்ஸ், இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள் போன்ற நூல்கள் அதிசயத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தி இருந்தன. அல்ஹம்துலில்லாஹ்



# சென்னைப் பல்கலைக் கழகத்தில் சாதி ஒழிப்பு

சென்னைப் பல்கலைக் கழகத்தில் 10.11.2018 அன்று விவாத அரங்கு ஒன்றிற்கு சென்னைப் பல்கலைக் கழகத்தின் **Department of Political Science** ஏற்பாடு செய்திருந்தது. இதில் தாருல் இஸ்லாம் சார்பில் அதன் நிறுவுனர் - தலைவர் மு. குலாம் முஹம்மத் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

பாரதீய ஜனதா கட்சியின் தலித் பிரிவின் தலைவர் ஒருவர் கருத்தரங்கிற்கு வந்தார்.

“ஜாதி ஒழிப்பு விவாதத்தில் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்யும் குலாம் முஹம்மதுக்கு என்ன வேலை?” என்றொரு பதிவை தன் முகநூலில் போட்டுவிட்டுத்தான் வந்தாராம். இதனை பின்னர் தான் சகோதரர்கள் என்னிடம் சொன்னார்கள்.

ஆனால் அவர் தனது இறுதி பதிவில், குலாம் முஹம்மத் தவிர வேறு யாரும் தீர்வை சொல்லிடவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.

எந்தக் கொள்கையிலும் சாதிய கட்டமைப்பை தகர்க்கும் வழிகாட்டுதல் இல்லை. ஏனெனில் இஸ்லாம் மனித இனத்தின் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் பின்வரும் அடிப்படையின் கீழ்ப் பிரகடனப்படுத்துகின்றது.

**‘‘மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே**

**ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.''(அல்குர்ஆன்: 4:1)**


உலக மக்களிடையே சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் நிலை நாட்டிய ஒரே அடிப்படைத் தத்துவம் அதுவே! ஆனால் இந்த வேதத்தைக் கொண்டு மக்களிடம் சேர்ப்பவர்கள் மிகவும் குறைவு.



**இஸ்லாத்தை நிலை நாட்டுவதில் முஸ்லிம் பெண்களின் பங்கும், இன்றைய சூழல்களில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் என்ற தலைப்பில் நவம்பர் 04 - 2018 இல் சென்னை தாம்பரத்தில் பெண்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. வைகறை வெளிச்சம் ஆசிரியர் அதில் உரையாற்றினார் இதில் திரளான பெண்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.**



# சென்னைப் பல்கலைக் கழகமும் நாமும்!




12 ஆண்டுகளுக்கு முன் T.M. உமர் ஃபாரூக் அவர்களின் ஜாதி ஒழிந்தது நூலை நாம் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து கொண்டிருந்தோம். அப்போது சென்னை பல்கலைக் கழகத்தின் ஆங்கிலத் துணை தலைவர் பேரா. அழகரசன் அவர்கள் நம்மைத் தொடர்பு கொண்டு நூலை தாங்கள் மொழிபெயர்க்க விரும்புவதாகக் கூறினார்கள்.


நாம் ஏற்கனவே அதனை மொழிபெயர்த்து விட்டதாகவும், அதனை வெளியிட உள்ளதாகவும் கூறினோம். இந்த மொழிபெயர்ப்புதான் "End of Casteism" என வெளிவந்தது. சில நாட்கள் கழித்து அதே சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு தொலைப்பேசி அழைப்பு வந்தது.

அதில் சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ரேணுகா என்ற மாணவி தனது M.Phil - ஐ முதுநிலை ஆய்வை இந்த நூலை அடிப்படையாகக் கொண்டே நடத்தியிருக்கின்றார். அவருக்கு பட்டமளிக்கும் விழா நடக்கின்றது வருகின்றார்களா? எனக்கேட்டார்கள். அந்த பட்டமளிப்பு விழாவில் நானும்(MGM) T.M. உமர் ஃபாரூக் அவர்களும் கலந்து கொண்டோம்.




**சிவகாசியில் பாசிசத்தை மாய்ப்போம், பாரதத்தைக் காப்போம் என்ற பொதுக்கூட்டத்தில் வைகறை ஆசிரியர் உரையாற்றிய போது. இது பாசிசத்தை வீழ்த்த நாம் மேற்கொண்ட முயற்சிகளுள் ஒன்று.**

# நாடார் பெருங்குடியினர் இஸ்லாத்தை.....?




1999 முதல் 2014 ஆண்டு வரை இந்தியாவை பாசிசம் ஆட்சி செய்து கொண்டிருந்தது. இஸ்லாத்திற்கு எதிராகவும், இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வதற்கு எதிராகவும் பல்வேறு அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவற்றுள் ஒன்று மதமாற்றத் தடை சட்டம் ஒன்றை இந்தியா முழுவதும் கொண்டு வந்திட வேண்டும் என்பதாகும். அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திடும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கவில்லை. மாறாக அஃது அந்த அதிகாரம் மாநிலங்களுக்கு - மாநில அரசுகளுக்கு மட்டுமே உரியதாக இருந்தது. ஆகவே மத்திய அரசால் நாடு தழுவிய ஒரு மதமாற்றத் தடை சட்டத்தைக் கொண்டு வந்திட இயலவில்லை.

ஆனால் அன்றைய பிரதமர் வாஜ்பேயி மத மாற்றங்கள் பற்றி நாடு தழுவிய ஒரு விவாதத்தை நடத்தலாம் என்றார். அப்போது நாம் விடியல் வெள்ளி என்றொரு திங்களிதழை நடத்தி வந்தோம். அதில் மதமாற்றங்கள் பற்றிய விவாதங்களை நடத்தி வந்தோம். அந்த விவாதங்களில் (நமது விடியல் வெள்ளிக்கு வந்த கட்டுரைகள் வழி நடந்த விவாதங்களில்) வழக்கறிஞர் “லஜபதி ராய்” அவர்களின் கட்டுரை அனைவரின் கவனத்தையும் கவர்வதாக இருந்தது.

அவர் எழுதிய தலைப்பு “நாடார்கள் ஏன் மதம் மாறினார்கள்?” இந்த தலைப்பில் ஆண்டாண்டு காலமாக இந்து மதம் கட்டவிழ்த்து விட்ட கொடுமைகள், முலைக்கர்ணம்போன்ற குரூரமான வரிவிதிப்புகள் இவையெல்லாம் தான் நாடார்கள் மதம் மாறிட காரணமாக இருந்தது என்பதை 1999 முதல் 2014 ஆண்டு வரை இந்தியாவை பாசிசம் ஆட்சி செய்து கொண்டிருந்தது. இஸ்லாத்திற்கு எதிராகவும், இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வதற்கு எதிராகவும் பல்வேறு அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவற்றுள் ஒன்று மதமாற்றத் தடை சட்டம் ஒன்றை இந்தியா முழுவதும் கொண்டு வந்திட வேண்டும் என்பதாகும். அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திடும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கவில்லை. மாறாக அஃது அந்த அதிகாரம் மாநிலங்களுக்கு - மாநில அரசுகளுக்கு மட்டுமே உரியதாக இருந்தது. ஆகவே மத்திய அரசால் நாடு தழுவிய ஒரு மதமாற்றத் தடை சட்டத்தைக் கொண்டு வந்திட இயலவில்லை.

ஆனால் அன்றைய பிரதமர் வாஜ்பேயி மத மாற்றங்கள் பற்றி நாடு தழுவிய ஒரு விவாதத்தை நடத்தலாம் என்றார். அப்போது நாம் விடியல் வெள்ளி என்றொரு திங்களிதழை நடத்தி வந்தோம். அதில் மதமாற்றங்கள் பற்றிய விவாதங்களை நடத்தி வந்தோம். அந்த விவாதங்களில் (நமது விடியல் வெள்ளிக்கு வந்த கட்டுரைகள் வழி நடந்த விவாதங்களில்) வழக்கறிஞர் “லஜபதி ராய்” அவர்களின் கட்டுரை அனைவரின் கவனத்தையும் கவர்வதாக இருந்தது.

அவர் எழுதிய தலைப்பு “நாடார்கள் ஏன் மதம் மாறினார்கள்?” இந்த தலைப்பில் ஆண்டாண்டு காலமாக இந்து மதம் கட்டவிழ்த்து விட்ட கொடுமைகள், முலைக்கர்ணம்போன்ற குரூரமான வரிவிதிப்புகள் இவையெல்லாம் தான் நாடார்கள் மதம் மாறிட காரணமாக இருந்தது என்பதை ஆதாரங்களுடன் குறிப்பிட்டிருந்தார்கள். அல்லாமல் நாடார்கள் மதம் மாறிட வேறு காரணங்கள் ஏதும் இருக்கவில்லை என்பதையும் குறிப்பிட்டிருந்தார்கள். பொருளாதார ரீதியாக நாடார்கள் அப்போதே பெரும் தனவந்தர்களாக இருந்தார்கள் என்பதையும் குறிப்பிட்டிருந்தார்கள். 2004ஆம் ஆண்டு நாம் நிறுவி நடத்தி வந்த வைகறையில் இந்த கட்டுரை இடம் பெற்றிருந்தது.




2016ஆம் ஆண்டு நாம் இந்த கட்டுரையை ஒரு நூலாக வெளியிட்டோம். எட்டு பக்கங்கள் அடங்கிய நூல். சுமார் 10,000 பிரதிகள் மக்களை சென்றடைந்த பின் பலர் நம்மோடு பேசினார்கள். இவற்றில் சிலர் பழைய வரலாறு வேண்டாம் இப்போது நாங்கள் முன்னேறியிருக் கின்றோம். அந்த வரலாற்றை எழுதுங்கள் என்றார்கள்.

எதிரும், புதிருமாய் வந்த கருத்துக்களை “நாடார்கள் ஏன் மதம் மாறினார்கள்?” என்ற நூலின் ஆசிரியர் லஜபதி ராய் அவர்களிடம் கூறினோம்.

வழக்கறிஞர் லஜபதி ராய் அவர்கள்; “நாடார்கள் தங்கள் வரலாற்றை அறிந்திடவில்லை. அவர்கள் யாரோடு இருக்கக் கூடாதோ அவர்களோடு இருக்கின்றார்கள். யாரோடு இருக்க வேண்டுமோ அவர்களுக்கு எதிராக இருக்கின்றார்கள் என்பதை தெளிவு படுத்தி ஒரு நூல் வேண்டும் என்றார். நாடார்கள் முன்னேறி இருக்கின்றார்கள் என்பதையும் உறுதிபடுத்தி நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். அதுவே “நாடார் வரலாறு கருப்பா காவியா?”

இப்படி நமது முயற்சி ஒரு வரலாற்று பரிமாணத்திற்கு சென்றுள்ளது. இப்போது உரக்க பேசப்படுகின்றது. இந்த நூல் நாடார் சமுதாயத்தில் தாஃவா நடத்திட மிகவும் உறுதுணையாக அமையும்.




வழக்கறிஞர் தி. லஜபதி ராய் அவர்களின் நாடார் வரலாறு கருப்பா? காவியா? நூல் அறிமுக நிகழ்ச்சி சென்னை பத்தியாளர்கள் மன்றத்தில் 22.03.2019 அன்று நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிக்கு பார்வையாளர்களை வரவைப்பதற்கான முயற்சியில் வைகறை வாசகர் வட்டம் குழு ஈடுபட்டது. பின்னர் அந்த நிகழ்ச்சியில் நமது வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# அன்பகம்

## தாருல் உல்ஃபத் மதரஸா

### இஸ்லாமிய கல்விக் கூடம்



நமது இஸ்லாமியப் பிரச்சார பெரும் பயணத்தில் எதிர்பட்ட அனுபவங்கள் ஏராளம்! களத்தில் நம்மோடு இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைத்துக் கொண்டிருந்தவர்கள், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்கள் நடைமுறை வாழ்க்கையில் இஸ்லாத்தைச் செயல்படுத்திடும், பாடங்களையும் பயிற்சிகளையும் தந்திட சில கல்விக் கூடங்களை நிறுவிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள்.

அவர்களின் ஆர்வமும் களத்தில் கனிந்த வெற்றிகளும் இதை வலியுறுத்தின. அதனடிப்படையில் தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தின் அருகாமையில் திருப்பனந்தாளில் 1989-இல் ஒரு கல்விக் கூடத்தைத் தொடங்கினோம்.

இந்தக் கல்விக் கூடம், இஸ்லாத்தின் எல்லாப் பகுதிகளையும் இஸ்லாத்தை ஏற்றவர்களுக்கு கற்றுத் தந்திடும் கலாச்சாலையாக மாறியது. தொடர்ந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கை படிப்படியாக பெருகிற்று. இதனைப் பொறுத்துக் கொள்ளாத அரசு நிருவாகம், அந்த வீட்டின் உரிமையாளர் பெண்மணிக்கு நெருக்கடிகளைத் தந்தது. இதனால் அந்த வீட்டை காலி செய்திட வேண்டியதாயிற்று.

தொடர்ந்து 1993-இல் தேனி மாவட்டம், முத்துதேவன்பட்டிக்கு அந்த “அறிவகம்” இஸ்லாமியக் கல்விக்கூடத்தை மாற்றினோம். அங்குள்ள இணையற்ற இஸ்லாமியப் பிரச்சாரகர் ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் அவர்களின் வீட்டில் அதைத் தொடர்ந்தோம். மெத்த சிரமங்களை மேற்கொண்டு அங்கு 4000 சதுர அடியில் சொந்தக் கட்டிடம் ஒன்றையும் நிர்மானித்தோம். அடுத்து இஸ்லாத்தை ஏற்றிடும் பெண்களுக்கு ஒரு கல்விக் கூடம் தேவைப் பட்டது. அதனை நெல்லை ஏர்வாடியில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மானித்தோம். 2007ஆம் ஆண்டு சமுதாய போராளி டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள்

நம் வாயிலாக இஸ்லாத்தை ஏற்றார்கள். இதே திருப்பனந்தாளில் தான் நாம் நமது முதல் இஸ்லாமியக் கல்விக் கூடமாம் அறிவகத்தை தொடங்கினோம். அன்று முதலே நமது இஸ்லாமியப் பிரச்சாரம் அங்கே மையம் கொண்டது. இதன் விளைவாக பலக் குடும்பங்கள் அங்கே இஸ்லாத்தை ஏற்றன. இஸ்லாத்தை ஏற்றக் குடும்பங்களுக்கு குடும்பத்தோடு மார்க்க அறிவைப் புகட்டிட ஒரு கல்விக் கூடம் தேவைப்பட்டது. அதுவே அன்பகம்.

அன்பகம் சந்தித்த சோதனைகள்?

வாடகை கட்டிடத்திலேயே இயங்கிட வேண்டிய நிலை. மூன்று கட்டிடங்களுக்கு மாறிவிட்டோம். கடந்த சில வருடங்களாக மாணவர்கள் சேர்வது அதிகமாக இருந்ததால் ஒரு பெரிய கட்டிடத்திற்கு மாறி இருக்கின்றோம். ஒரு சொந்த கட்டிடத்திற்கு மாறிட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இன்ஷா அல்லாஹ் இறைவன் விரைவில் அதை உங்கள் வழி நிறைவேற்றி வைப்பான் என எதிர்பார்க்கிறோம்.

அன்பகத்தில் - இன்றளவும் இஸ்லாத்தை ஏற்றவர்கள் 1558 பேர் கல்வி கற்று சென்றுள்ளனர். இதில் 288 குடும்பமும் அடங்கும்.12 ஆண்டுகளாக இடைவிடாமல் நடந்து வருகின்றது.

அன்பகத்தில்

1. கல்வி காலம் மூன்று மாதங்களாகும்.

2. கல்வி கற்கும் காலம் முழுவதும் அனைத்து வசதிகளும் இலவசம் - உணவு,உடை,உறைவிடம்.

3. மருத்துவ செலவுகளும் இலவசம்.

4. ஆண்களுக்குக் கத்னா நமது செலவிலேயே தரமான மருத்துவமனையில் நடத்தப்படுகின்றது.

5. இஸ்லாத்தை ஏற்கும் பெண்களுக்கு திருமண உதவிகளையும் செய்து தருகின்றோம்.

6. கர்ப்பிணி பெண்கள், இஸ்லாத்தை ஏற்றால், மகப்பேறு முதலான மருத்துவச் செலவுகள் எல்லா வற்றையும் ஏற்று, அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றோம். இதுவரை பத்து நிகழ்வுகள் நடந்துள்ளன.

7. இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்கள் சட்ட ரீதியான பிரச்சனைகளைச் சந்தித்தால் அதிலும் உதவி செய்து வருகின்றோம்.



8. பயங்கரமான நோயால் பீடிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு எமது அறக்கட்டளையைச் சார்ந்தவர்கள் மாதம் ரூபாய் 17,000 வரை செலவு செய்து தேற்றி வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

9. அஃபிடவிட், அரசு கெசட்டில் பெயர் மாற்றம் அனைத்தையும் நமது செலவில் செய்து வருகின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.

10. மாணவர்களின் திருக்குர்ஆன் ஓதுதல், மனனம், துஆக்கள் மனனம் என்பனவற்றிற்கு சிறப்பான கவனம் செலுத்தப்படுகின்றது.

11. கல்வி காலத்தில் ஒரு மாணவனுக்கு ஆகும் செலவு ரூபாய் 12,000, கத்னா ரூபாய் 3500. ஆகமொத்தம் 15,500 ஆகின்றது.

தாஃவா பயிலரங்கங்கள்

இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் தலையாயப் பணியை, கடமையை நிறைவேற்றிட இளைஞர்கள் முன்வந்திட வேண்டும். உண்மையைச் சொன்னால் இந்த மகத்தான இலட்சியத்தை அவர்கள், தங்கள் இலட்சியமாக ஆக்கிட வேண்டும். இந்த இலட்சியத்தின் பக்கம் அவர்களைத் திருப்பியாக வேண்டும். இதற்காக, அதாவது மக்களை இருளிலிருந்து வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திடும் இந்த இலட்சியத்திற்கு இளைஞர்களைத் தயார்படுத்திடும் பட்டறைகளே இந்தத் தாஃவா பயிலரங்கங்கள்.

இதில் இஸ்லாத்தை ஏனையோருக்கு எடுத்துச் சொல்வதில், இளைஞர்களிடையே நிலவி வந்த தொடக்க கால தயக்கத்தை போக்குகின்றோம். இஸ்லாத்தை ஏனையோருக்கு எப்படி நளினமாக எடுத்துச் சொல்வது என்பதைக் கற்று தருகின்றோம். இதில் 3 அல்லது 4 மணி நேர நடைமுறைப் பயிற்சியும் தருகின்றோம். இதர மாற்றுக் கொள்கையைச் சார்ந்த சகோதரர்களை எப்படி எதிர்கொள்வது என்பதற்கான கொள்கை விளக்கங்களையும் தருகின்றோம். இதில்;

1. இஸ்லாமும் - கம்யூனிசமும்

2. இஸ்லாமும் - திராவிடக் கொள்கைகளும்

3. இஸ்லாமும் - மக்களாட்சியும்

4. இஸ்லாமும் - மதச் சார்பின்மையும்

5. இஸ்லாமும் - முதலாளித்துவமும்

6. இஸ்லாமும் - உலகிலுள்ள இதரக் கொள்கைகளும்

7. இஸ்லாமும் - விஞ்ஞானமும்

8. ஃபாசிசத்தின் சதியும் - சூழ்ச்சியும்

என்ற தலைப்புகளில் மாணவர்களுக்கு முழுமையான பயிற்சி தரப்படுகின்றது. இந்தப் பயிலரங்கங்கள் நம்மால் கடந்த 26 ஆண்டுகளாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன. பயிற்சி பெற்ற பல இளைஞர்கள் இன்று தாஃவா களத்தில் பீடு நடைபோட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

**முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர்**
**சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்)**
**தொடர் அடுத்த இதழில் இடம் பெறும். இன்ஷா அல்லாஹ்.**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002